www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




ஆசிரியர் பெற்றோர் மாணவர் என அனைவரின் மனம் கவர்ந்த உரைநூல். பள்ளித் தேர்வையும் அரசுத் தேர்வையும் அச்சமின்றி சந்திக்க உதவும் அறிவுக் களஞ்சியம். இனிய எளிய மொழிநடையில் சுருக்கமான விடைகளின் பெட்டகம். கற்பித்தலில் நீண்ட நெடிய அனுபவமிக்க ஆசிரியர்களைக் குழுவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உன்னதமான உரைநூல். அரசுப் பொதுத்தேர்வில் உயர் மதிப்பெண் பெற்றிட, இன்றே வாங்கிடுவீர் கவிமணி இன்பத்தமிழ்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கவிமணி
# இன்பத்தமிழ்

## மேல்நிலை – இரண்டாம் ஆண்டு

## பொதுத்தமிழ்

இவ்வுரை நூலில்...

- கவிதைப்பேழை (செய்யுள்) : வினா – விடை
- உரைநடை : வினா – விடை
- விரிவானம் (துணைப்பாடம்) : வினா – விடை
- இனிக்கும் இலக்கணம் : வினா – விடை
- கற்பவை கற்றபின், செய்யுள்நயம் பாராட்டல்
- மொழியை ஆள்வோம், மொழியாக்கம்
- மொழியோடு விளையாடு, நிற்க அதற்குத் தக
- கலைச்சொல் அறிவோம், மொழிப்பயிற்சி
- பலவுள் தெரிக, மொழிப்பயிற்சி (பாடநூல் வினாக்கள்)
- காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள், பொதுத்தேர்வு வினாத்தாள்கள்
- மனப்பாடப்பகுதி

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

உருவாக்கம் :
பதிப்பகப் புலவர்குழு

மெர்சி பப்ளிகேஷன்ஸ்
கல்விநூல் வெளியீட்டாளர்
43, பந்தர் தெரு, சென்னை – 600 001.
கைப்பேசி : 97100 02490 / 70102 31425 / 99415 16187

விலை ரூ.250.00

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பதிப்புரை

**அன்புநிறை மாணவச் செல்வங்களே!**

உங்களை வரவேற்று வாழ்த்துகிறோம். மேனிலை இரண்டாமாண்டு மொழிப்பாடத்தில் நீங்கள் உயர்மதிப்பெண் பெறவேண்டும் என்கிற உயர்நோக்கில், '**கவிமணி இன்பத்தமிழ்**' என்னும் இவ்வுரைநூலைத் தெளிவான மொழிநடையில், படித்தவுடன் மனத்தில் பதியத்தக்க வகையில், புலமைமிகு புலவர்குழு அமைத்த சுருக்கமான விடைகளைக் கொண்டதாகச் சிறப்பாக உருவாக்கியுள்ளோம்.

உரைநடைஉலகம், கவிதைப்பேழை, விரிவானம், இனிக்கும் இலக்கணம், நம்மை அளப்போம், மொழியை ஆள்வோம் என்னும் தலைப்புகளில் உள்ள வினா – விடைகள் அனைத்தும், பாடப்பொருள்கள் விடுபடாத வகையில் சிறப்பாக முறைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடநூல் வினாக்கள் அனைத்திற்கும் விடைகள் எளிமையாகவும், தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்துத் தேர்வுகளுக்கும் இவற்றில் இருந்தே வினாக்கள் கேட்கப் படும். அத்துடன் பாடநூலில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பாடங்களையும் நீங்கள் முழுமையாகத் தெரிந்தும் புரிந்தும் படிப்பதற்கு உதவும் வகையில் கூடுதல் வினாக்களும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் இருந்தும் தேர்வுக்கு வினாக்கள் கேட்கப்படலாம்.

ஒரு மதிப்பெண் வினாக்கள் அனைத்தையும் நன்கு பயிற்சி செய்யுங்கள். தேர்வில் புதிதாகக் கேட்கப்படும் குறுவினா, சிறுவினாக்களுக்கும், நான்கு மதிப்பெண்களுக்குரிய அகமதிப்பீட்டுத் தேர்வுக்கும் நீங்கள் சிரமமின்றி எளிதில் விடையளிக்க இவை உதவும். மேலும், உயர்மதிப்பெண் பெறும் உங்கள் கனவை நனவாக்கி, உங்களை வெற்றிச் சிகரத்திற்கு இவ்வுரைநூல் வழிநடத்திச் செல்லும். வாழ்க! வளர்க! வெல்க!

இந்நூலைப் பார்வையிட்டு, மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

– பதிப்பாளர்

---

இந்நூல் பற்றிய கருத்துகள் ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**தொடர்பு கொள்க : 744 92 000 92**

---

**Bank Details for Direct Deposit**

| | | |
|---|---|---|
| Account Name | : | **Mercy Publications** |
| Bank Name | : | Karur Vysya Bank |
| Branch | : | Godown Street, Chennai - 600 001 |
| Account Number | : | **1755135000013300** |
| IFSC | : | **KVBL0001755** |

---

**முதல் பதிப்பு** : ஜூன், 2019
**திருத்திய பதிப்பு** : 2020, 2021, 2022, 2023, 2024
**அச்சிட்டோர்** : ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ், சென்னை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| இயல் | | பொருளடக்கம் | பாடநூல் வினாக்கள் பக்கம் | கூடுதல் வினாக்கள் பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | செய்யுள் | இளந்தமிழே! | 7 | 132 |
| | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | | 134 |
| | செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் – தண்டியலங்காரம் | | 138 |
| | துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு – பாரதியின் கடிதம் | | 140 |
| | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | | 142 |
| 2. | உரைநடை | பெருமழைக்காலம் | 22 | 143 |
| | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | | 148 |
| | | நெடுநல்வாடை | | 150 |
| | துணைப்பாடம் | முதல்கல் | | 153 |
| | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | | 155 |
| 3. | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 36 | 159 |
| | செய்யுள் | விருந்தினர் இல்லம் | | 162 |
| | | கம்பராமாயணம் | | 163 |
| | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | | 168 |
| | இலக்கணம் | பொருள் மயக்கம் | | 169 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 50 | 172 |
| 4. | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 54 | 177 |
| | செய்யுள் | இதில் வெற்றி பெற | | 180 |
| | | இடையீடு | | 183 |
| | | புறநானூறு | | 183 |
| | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | | 186 |
| | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | | 187 |
| 5 | உரைநடை | மதராசப்பட்டினம் | 70 | 188 |
| | செய்யுள் | தெய்வமணிமாலை | | 194 |
| | | தேவாரம் | | 197 |
| | | அகநானூறு | | 198 |
| | துணைப்பாடம் | தலைக்குளம் | | 201 |
| | இலக்கணம் | படிமம் | | 203 |


www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| இயல் | பொருளடக்கம் | | பாடநூல் வினாக்கள் பக்கம் | கூடுதல் வினாக்கள் பக்கம் |
|---|---|---|---|---|
| 6 | உரைநடை | திரைமொழி | 83 | 205 |
| | செய்யுள் | கவிதைகள் | | 210 |
| | | சிலப்பதிகாரம் | | 211 |
| | | மெய்ப்பாட்டியல் – தொல்காப்பியம் | | 218 |
| | துணைப்பாடம் | நடிகர் திலகம் | | 222 |
| | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | | 223 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 98 | 225 |
| 7 | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 104 | 228 |
| | செய்யுள் | அதிசய மலர் | | 232 |
| | | தேயிலைத் தோட்டப் பாட்டு | | 235 |
| | | புறநானூறு | | 236 |
| | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | | 239 |
| | இலக்கணம் | தொன்மம் | | 240 |
| 8 | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 116 | 242 |
| | செய்யுள் | முகம் | | 245 |
| | | இரட்சணிய யாத்திரிகம் | | 246 |
| | | சிறுபாணாற்றுப்படை | | 251 |
| | துணைப்பாடம் | கோடை மழை | | 255 |
| | இலக்கணம் | குறியீடு | | 256 |
| | ❖ | பலவுள் தெரிக (பாடநூல் வினாக்கள்) | 258 | |
| | ❖ | மொழிப்பயிற்சி (பாடநூல் வினாக்கள்) | 268 | |
| | ❖ | மாதிரி வினாத்தாள்கள் | | 281 |
| | ❖ | பொதுத்தேர்வு வினாத்தாள்கள் | | 307 |
| | ❖ | மனப்பாடப்பகுதி | 316 | |


www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வினாத்தாள் வடிவமைப்பு

| | | | |
|---|---|---|---|
| | ஒரு மதிப்பெண் வினாக்கள் | | |
| பகுதி – I | | செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணப் பகுதிகளில் இருந்து 14 வினாக்கள் கேட்கப்படும். | $14 \times 1 = 14$ |
| | இரண்டு மதிப்பெண் வினாக்கள் | | |
| பகுதி – II | பிரிவு – 1 | செய்யுள் பகுதியில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $3 \times 2 = 6$ |
| | பிரிவு – 2 | உரைநடைப் பகுதியில் இருந்து 3 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $2 \times 2 = 4$ |
| | பிரிவு – 3 | இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சிப் பகுதியில் இருந்து 9 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $7 \times 2 = 14$ |
| | நான்கு மதிப்பெண் வினாக்கள் | | |
| பகுதி – III | பிரிவு – 1 | செய்யுள் பகுதியில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $2 \times 4 = 8$ |
| | பிரிவு – 2 | உரைநடைப் பகுதியில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $2 \times 4 = 8$ |
| | பிரிவு – 3 | இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சிப் பகுதியில் இருந்து 5 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $3 \times 4 = 12$ |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் | |
| பகுதி – IV | | செய்யுள், உரைநடை மற்றும் துணைப்பாடம் என ஒவ்வொரு பகுதியில் இருந்தும் 2 வினாக்கள் கேட்கப்படும். இவை அல்லது வகை வினாவாக அமையும் | $3 \times 6 = 18$ |
| பகுதி – V | | மனப்பாடச் செய்யுள் ஒன்று கேட்கப்படும். – 4 மதிப்பெண் மனப்பாடத் திருக்குறள் ஒன்று கேட்கப்படும். – 2 மதிப்பெண் | $4 + 2 = 6$ |

## நூல்பெயரும் ஆசிரியர் பெயரும்

1. இளந்தமிழே! – சிற்பி பாலசுப்பிரமணியம்
2. ஒரு கிராமத்து நதி – சிற்பி பாலசுப்பிரமணியம்
3. தமிழ்மொழியின் நடைஅழகியல் – தி. சு. நடராசன்
4. தண்டியலங்காரம் – 'ஓங்கலிடை வந்து' – தண்டி–தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்
5. தம்பி நெல்லையப்பருக்கு (கடிதம்) – பாரதியார்
6. பாரதி கடிதங்கள் – ரா. அ. பத்மநாபன் பதிப்பித்தது
7. பிறகொரு நாள் கோடை – அய்யப்ப மாதவன் (கவிதைகள்)
8. மழைக்குப் பிறகும் மழை – அய்யப்ப மாதவன்
9. நெடுநல்வாடை – நக்கீரர்
10. முதல்கல் – உத்தமசோழன்
11. மனிதத்தீவுகள் – உத்தமசோழன்
12. தமிழர் குடும்ப முறை – பக்தவத்சல பாரதி
13. தமிழர் மானிடவியல் – பக்தவத்சல பாரதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| | | | |
|---|---|---|---|
| 14. | தமிழகப் பழங்குடிகள் | – | பக்தவத்சல பாரதி |
| 15. | விருந்தினர் இல்லம் | – | ஜலாலுத்தீன் ரூமி |
| 16. | தாகங்கொண்ட மீனொன்று | – | என். சத்தியமூர்த்தி |
| 17. | மஸ்னவி | – | ஜலாலுத்தீன் ரூமி |
| 18. | கம்பராமாயணம் | – | கம்பர் |
| 19. | உரிமைத்தாகம், வெக்கை, பிறகு | – | பூமணி (பூ. மாணிக்கவாசகர்) |
| 20. | அஞ்ஞாடி | – | பூமணி |
| 21. | கோடை மழை | – | சாந்தா தத் |
| 22. | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | – | உ. வே. சாமிநாதர் |
| 23. | இதில் வெற்றி பெற | – | சுரதா |
| 24. | இடையீடு | – | சி. மணி |
| 25. | புறநானூறு – 'வாயிலோயே!' | – | ஔவையார் |
| 26. | துறைமுகம், தேன்மழை | – | சுரதா |
| 27. | சிறுபாணாற்றுப்படை | – | நத்தத்தனார் |
| 28. | தெய்வமணிமாலை | – | இராமலிங்க அடிகள் |
| 29. | தேவாரம் (திருமயிலாப்பூர் பதிகம்) | – | திருஞானசம்பந்தர் |
| 30. | அகநானூறு ('பெருங்கடல் வேடத்து') | – | அம்மூவனார் |
| 31. | மனுமுறை கண்ட வாசகம் | – | இராமலிங்க அடிகள் |
| 32. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | – | இராமலிங்க அடிகள் |
| 33. | தலைக்குளம் | – | தோப்பில் முகமது மீரான் |
| 34. | சாய்வு நாற்காலி | – | தோப்பில் முகமது மீரான் |
| 35. | நாய்கள், வாக்குமூலம் | – | நகுலன் |
| 36. | சிலப்பதிகாரம் | – | இளங்கோவடிகள் |
| 37. | நடிகர் திலகம் | – | பாலச்சந்திரன் சுள்ளிக்காடு |
| 38. | சிதம்பர நினைவுகள் | – | கே. வி. சைலஜா |
| 39. | இலக்கியத்தில் மேலாண்மை | – | வெ. இறையன்பு |
| 40. | வாய்க்கால் மீன்கள் | – | வெ. இறையன்பு |
| 41. | ஏழாவது அறிவு | – | வெ. இறையன்பு |
| 42. | அதிசய மலர், கானல் வரி | – | தமிழ்நதி (கலைமணி) |
| 43. | புறநானூறு (காய்நெல் அறுத்து) | – | பிசிராந்தையார் |
| 44. | அதன் பிறகும் எஞ்சும் | – | தமிழ்நதி (கலைமணி) |
| 45. | தேயிலைத் தோட்டப்பாட்டு | – | முகம்மது இராவுத்தர் |
| 46. | முகம் | – | சுகந்தி சுப்பிரமணியன் |
| 47. | இரட்சணிய யாத்திரிகம் | – | எச். ஏ. கிருட்டிணனார் |
| 48. | போற்றித் திருஅகவல் | – | எச். ஏ. கிருட்டிணனார் |
| 49. | இரட்சணிய மனோகரம் | – | எச். ஏ. கிருட்டிணனார் |
| 50. | சங்க காலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | – | ஐராவதம் மகாதேவன் |
| 51. | தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் (நமது அடையாளங்களை மீட்டவர்) | – | மயிலை சீனி. வேங்கடசாமி |

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 1

# மொழி

# உயிரினும் ஓம்பப்படும்

| | | |
|---|---|---|
| செய்யுள் | இளந்தமிழே ! | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | தி. சு. நடராசன் |
| செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் | தண்டி |
| துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு | பாரதியார் |
| இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | |

## பாடநூல் வினாக்கள்

### நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் (Sep.-22)
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
விடை : இ) தொல்காப்பியம்

2. "மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" – கவிஞர் குறிப்பிடும் பழமைநலம். (July-23)
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது
ங) வள்ளல்களைத் தந்தது
அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
விடை : ஈ) க, ங இரண்டும் சரி

3. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"–இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம் (PTA-1, Mar.-24, Sep.-22)
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை
விடை : இ) அடிஎதுகை, சீர்மோனை

4. **கருத்து 1 :** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.
**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. (PTA-5, Sep.-21)
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்துகளும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
விடை : இ) இரண்டு கருத்துகளும் சரி

5. பொருத்துக. (PTA - 2)
அ) தமிழ் அழகியல் – 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ – 2. தி. சு. நடராசன்
இ) கிடை – 3. சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி – 4. கி. இராஜநாராயணன்
அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
விடை : ஈ) 2, 3, 4, 1

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.** (July - 21,22,23)
   - ★ 'நடைபெற்றியலும்' என்றும் 'நடைநவின்றொழுகும்' என்றும் 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி" என்றும் நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

2. **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**

   **"கடாஅ யானைக் கலிமான் பேக" – இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும், அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**
   - ★ **ஓசை நயமிக்க சொற்கள்** – படாஅம், கெடாஅ, கடாஅ – செய்யுளிசை அளபெடைகள்.
   - ★ **இலக்கணக்குறிப்பு** – இசைநிறை அளபெடை

3. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**(Mar.-20, July-22, 23)
   - ★ மலைமேட்டில் தலைசாய்க்கும் செங்கதிரால் சிவக்கும் வானம், உழைப்பில் சிவந்த கைகளை உடைய தொழிலாளர், அவர்தம் தோள்மீதில் முத்துமுத்தாக வீற்றிருக்கும் வியர்வைத் துளிகள் ஆகியவற்றைப்பற்றி வியந்துபாடத் தமிழின் துணைவேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

4. **விடியல், வனப்பு–இருசொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**
   - ★ தன் செங்கதிர்களைச் சூரியன் பரப்பும் **விடியலில்,** கண்களையும் கருத்தையும் கவரும் ஒருவகை **வனப்பைக்** கீழ்வானத்தில் காணலாம்.

## சிறுவினாக்கள்

1. **சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்–விளக்குக.**

   (PTA-2, Mar.-23, Sep.-21,22)
   - ★ இசையோடும் இசைக்கருவியோடும்தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கவிதை கலை வடிவம் பெறுவதை 'வலைப்பின்னல்' என்கிறோம். இப்பண்பைச் சங்கப்பாடல்கள் பலவற்றில் காணலாம்.
   - ★ சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் :

     'கடந்தடு தானை மூவிருங் கூடி
     உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"
   - ★ என்ற புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்யும், பிற மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருகின்றன.
   - ★ இதன்மூலம், சங்கப் பாடல்களில் குறிப்பிடத்தக்க பண்பாக 'ஒலிக்கோலம்' அமைந்துள்ளதை அறிந்து கொள்ளலாம்.

2. **"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**

   **செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்"**

   **– தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.** (July-23)
   - ★ செங்கதிர்களைப் பரப்பும் மாலை நேரத்துச் சூரியன், மேற்கில் மலைமேட்டின்மேல் தலையைச் சாய்ப்பான். அவ்வேளையில், அந்தி நேரத்தில் வானம் முழுவதும் செந்நிறம் பரவும்.
   - ★ அதே வேளையில், விண்ணில் மீன்கள் கண் சிமிட்டும். இக்காட்சி, நாளும் நடைபெறும்.
   - ★ இதனைக் கண்டு சுவைத்த கவிஞர், நயமான சொற்களைக் கொண்டு, கவிதை பாடியுள்ளார்.
   - ★ இந்த வரிகளைப் படிக்கின்றபோதே, மனக் கண்ணால் இக்காட்சியைக் கண்டு சுவைத்து மகிழ முடிகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (PTA - 1,2, Mar.-20,24)

**இடம்** : "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" என்னும் அடி, தண்டி அலங்காரம் என்னும் அணி இலக்கணநூல் **உரைமேற்கோள் பாடலில்** இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் கூறும் இத்தொடருக்கு, "ஒலிக்கும் அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட **உலகத்தில் இருள் போக்கும்**" என்பது பொருள்.

**விளக்கம்** : சூரியன், தன் கதிர்களால் உலகில் பரவியுள்ள புற இருளைப் போக்கும்; தமிழோ, மக்களின் அக இருளைப்போக்கி, அறியாமையை அகற்றும் சிறப்புடையது என்பதாம்.

4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே!<br>– நன்னூல். | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம். |

★ "பழையனவாகிவிட்ட சில நடைமுறைகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுவதும், புதியன வாகிய சில நடைமுறைகள் பயன்பாட்டில் சேர்க்கப் படுவதும் குற்றம் ஆகாது; **காலத்திற்கு ஏற்ப மாறுதல்களை ஏற்றுக்கொள்வது கட்டாய மாகும்**" என்பது, முதல் பாடலால் பெறப்படும் செய்தி.

★ "அந்தப் பழமை நலத்தை மீண்டும் புதுக்குதற்கு, **உடல் சிலிர்த்து** எழுமாறு தமிழ்க்குயில் கூவி வரவேண்டும்" என்பது, இரண்டாம் பாடலின் இலக்கியச் சாரம்.

★ பழமை எல்லாம் தேவையற்றவை என்று ஒதுக்கி விடவும் கூடாது. பழமையானவற்றுள்ளும் நலம் பயக்கும் பல செய்திகள் இருக்கலாம். பழமையைப் புதுக்குவதன்மூலம், **சமுதாயம் மறுமலர்ச்சி** பெறத் தமிழ் உதவ வேண்டும் என்பது கருத்து.

## நெடுவினாக்கள்

1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (PTA -1, Sep. - 20, Mar.-23)

அழகியலை உருவாக்கத் தளம் அமைத்துத் தருகின்றது தொல்காப்பியம். எழுத்தையும் சொல்லையும் போன்று, செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

### மொழிசார் கலை :

உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலியவை, மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுகின்றன. மொழியின் தனித்துவமான பண்புகள், மொழிசார்ந்த கவிதைக் கலையாக ஆகிறது.

### கவிதையின் நடையியல் கூறுகள் :

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவையாகும்.

### ஒலிக்கோலங்கள் :

மொழி, சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் உருவாகிறது. கவிதையும் இசையோடு பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் பெறுகிறது. இதனையே பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே" (புறம். 110)

என்னும் பாடல் வரிகளில் அமைந்த வல்லினமெய்கள், உண்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன. இதனால் ஒலிக்கோலத்தின் வலிமையை அறிந்து கொள்ளலாம்.

"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை
கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம். 145)

"புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே" – (நற். 16)

இப்பாடல் வரிகளில், உயிர் நெட்டொலிகளும், சில சொற்களும் திரும்பவரல் தன்மையால் நிகழும் ஒலிக்கோலம், சங்கப் பாடல்களில் ஒரு குறிப்பிடத்தக்க பண்பாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**சொற்புலமும் தொடரியல் போக்குகளும் :**

சொல்வளத்தில்தான், உணர்வும் பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும், பலபொருள் குறித்த ஒரு சொல்லாகவும், துறைகளுக்கும் சூழல்களுக்கும் புனைவுகளுக்கும் சொல்லே களமாய் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைக்கலியில் காளைகளின் இனம் பற்றிய சொற்களும், 'கிடை' என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களும் பல பெயர்களில் காணப்படுகின்றன. தனிச்சொல்லாகவும் தொகைமொழியாகவும் வாக்கிய அமைப்பில் சொற்புலம் காணப்படுகிறது. ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தைப் பண்படுத்துகின்றன. தமிழ் அழகியல் நடையைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாகும்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.** (Sep. -21, May - 22, Mar.-23)

மகாகவி பாரதியார், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மறுமலர்ச்சிக் கவிஞர் ஆவார் . நாட்டின்மீதும் மொழியின்மீதும் அவர் கொண்டிருந்த பற்று, ஆழ்ந்து கிடக்கும் ஆன்மிகச் சிந்தனை, சமுதாய மறுமலர்ச்சிக்குப் படைத்தளித்த கவிதைகள், அவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. மகாகவியாய், தேசியக் கவியாய் அடையாளப்படுத்திய பாரதியின் படைப்புகளில் கடிதம் வரைதலும் ஒரு புதுசக்தியாகத் திகழ்கிறது.

**மொழிப்பற்று :**

மகாகவி பாரதி, **பன்மொழிப் புலமை** பெற்றவர். தாம் புலமை பெற்ற மொழிகளில் எல்லாம் உயர்ந்த மொழியாகத் தமிழ்மொழியைக் காட்டுகிறார். அதனை,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்ற அடிகளால் உறுதிப்படுத்துகிறார். இஃது ஒன்றே, அவரின் மொழிப்பற்றை வெளிப்படுத்துகிறது.

**நெல்லையப்பருக்கு வேண்டுகோள் :**

நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும், "**தமிழ், தமிழ், தமிழ்** என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்! புதியபுதிய சிந்தனைகள், புதியபுதிய உண்மைகள், புதியபுதிய இன்பங்கள் தமிழில் வளர்ந்துகொண்டே இருக்கவேண்டும். தமிழ், செழுமை அடைய வேண்டும்" என்னும் தம் விருப்பத்தை வேண்டுகோளாக வைக்கிறார். இங்கே **பாரதியின் மொழிப்பற்று**, விருப்பமாக வெளிப்படுகிறது.

**சமூகப் பற்று :**

நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில், பெண்ணுக்குச் சமவுரிமை வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். "தம்பி, ஆணும் பெண்ணும் ஒருயிர்; இரண்டு தலைகள். அவை ஒன்றுக்கொன்று தாழ்வில்லை! பெண்ணை அடிமை செய்வோன், தன் கண்ணைக் குத்திக்கொண்டவனாவான். பெண்ணை அடைத்து வைப்பவன், கண்ணை அடைத்தவனாவான் என்று எழுது" என வேண்டுகோள் விடுக்கிறார் பாரதி.

**எழுதுக! பேசுக! :**

"தமிழ்நாடு வாழ்க! தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க! தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிகள் பெருகுக! அந்தப் பள்ளிகளில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வளர்க" என்று, நெல்லையப்பரை எழுதச் சொல்கிறார். "**வணிகமும் இயந்திரங்களும்** பெருகவேண்டும் எனப் பேசு! **முயற்சிகள் ஓங்க** வேண்டும். இசை, சிற்பம், இயந்திர நூல், வானநூல், இயற்கைநூலென ஆயிரம் ஆயிரமாய்ப் பெருகவேண்டும் என முழங்கு தம்பி" என்று, கட்டளை இடுவதன்மூலம் **பாரதியின் சமூகப்பற்று**, தெளிவாய் வெளிப்படுகிறது.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.** (Sep.- 21, May - 22)

**செந்நிறப் பூக்காடு :**

"எம் அருமைச் செந்தமிழே!

செம்மையான கதிரவன், மலைமேட்டில் தலையைச் சாய்க்கும்போது, வானமெங்கும் **செந்நிறப் பூக்காடாகத்** தோன்றும். அந்தச் சிவப்பு நிறத்தைத் தங்கள் உடல் பெறுமாறு கடினமாக உழைக்கும் தொழிலாளரின் பருத்த தோள்களில், **வியர்வைத் துளிகள்** முத்துமுத்தாக அரும்பி நிற்கும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மூண்டு எழும் கவிதை :**

இவற்றையெல்லாம் வியந்து பாடுவதற்கு, உன்னையன்றிச் சிறந்த துணை வேறு இருக்கமுடியுமா? நீயே கூறுவாயாக! எம் உள்ளத்தில் மூண்டு எழும் கவிதை வெறிக்கு நீயே உணவாக இருக்கிறாய்!

**சங்கத்தில் வீற்றிருந்த தமிழே! :**

இயல், இசை, நாடகமென மூன்றாகத் தழைத்து வளர்ந்த தமிழே! முன்பு ஒரு காலத்தில் நீ, பாண்டியர் உருவாக்கிய சங்கத்தில் கொலு வீற்றிருந்தாய்! பாரி, காரி, ஓரி, ஆய், அதியன், நள்ளி, பேகன் என்னும் **ஏழு வள்ளல்களைப்** பெற்றெடுத்தாய்!

**குளிர்ந்த பொதிகைத் தென்தமிழே! :**

தமிழே! எம் மெய் சிலிர்க்குமாறு பழமை நலத்தைப் புதுப்பிப்பதற்காக நீ மீண்டும் குயிலாக வந்து, கூவ வேண்டும்! தென்றல் தவழும் குளிர்ந்த பொதிகைமலையில் தோன்றி வளர்ந்த தமிழே, தடைகள் இருந்தால் அவற்றை எல்லாம் கூண்டை உடைத்து எழுந்து வெளிப்படும் **சிங்கம்போல் சீறி வரவேண்டும்**" என்று, தமிழின் சீரிளமைத் திறம் வியந்து, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

**4. 'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.** (Sep.-22)

**கவிதை நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நிரல்**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

| | |
|---|---|
| **வரவேற்புரை** | : முகில்வண்ணன் |
| **நூல் அறிமுகம்** | : கவிஞர் – செல்வம் |
| **நூல் வெளியீடு** | : பள்ளித் தலைமை ஆசிரியர் |
| **நூல் பெறுபவர்** | : கவிஞர் – எழிலரசன் |
| **நன்றியுரை** | : 'சொல்லோவியங்கள்' ஆசிரியர் |

**நாட்டுப்பண்**

**நன்றியுரை**

என்னால் உருவாக்கப்பெற்ற கவிதைநூலை வெளியிடுவதற்குத் திரண்டுள்ள அனைவருக்கும் வணக்கம். நூலின் சிறப்பு, அதனை அறிமுகம் செய்யும் வகையில் திறனாய்வு செய்பவர் கையில்தான் உள்ளது. அந்தவகையில் நூலின் நிறைகுறைகளை ஆய்ந்து பாராட்டிய கவிஞர் செல்வம் அவர்க்கு நன்றி. கூட்டத்தினரை வரவேற்ற முகில் வண்ணனுக்கு நன்றி. என் பணியைப் பாராட்டி இந்நூலை வெளியிட முன்வந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு நன்றி. என் கவிதை நூலைப் பெற்றுப் பெருமைப்படுத்தியதோடு, அரிய செய்திகளைக் கூறிப் பாராட்டிய கவிஞர் எழிலரசனுக்கும் அன்புகலந்த நன்றி. இந்த விழாச் சிறப்புடன் அமையத் தேவையான பணிகளை நிறைவாகச் செய்த அனைவருக்கும் நன்றி.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. பிழையான தொடரைக் கண்டறிக.** (PTA - 2, Mar.-24, Sep.-22)

அ) காளைகளைப் பூட்டி, வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறி, கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள், மழைநீரில் மூழ்கின.

**விடை: இ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடர் (July-20, Sep.-20,22)

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப்போல் ஆடுகின்றன.

விடை: அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும். (July-22,23)

**முடிந்தால் தரலாம்** : நான் கேட்ட பொருளை, உன்னால் கொடுக்க **முடிந்தால் தரலாம்.**

**முடித்தால் தரலாம்** : நான் தேர்வை எழுதி **முடித்தால்** என் புத்தகத்தை உனக்குத் **தரலாம்.**

4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை? (Mar.-24)

- ★ எழுத்து ஒலிகளைத் தெளிவாக உச்சரித்து எழுத வேண்டும்.
- ★ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமையத் தொடர்களை எழுதவேண்டும்.
- ★ தொடர்களில் வினைச்சொற்களில் கால வேறுபாடு உணர்ந்து எழுதவேண்டும்.
- ★ திணை, பால், எண், இடம் என்பனவற்றை எழுதும் போது, தெளிவாக உணர்த்த வேண்டும்.
- ★ கூறும் செய்திகளைச் சிறுசிறு பத்திகளாக அமைத்து எழுத வேண்டும்.
- ★ நிறுத்தக் குறிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
- ★ சிறந்த எழுத்தாளரின் நூல்களைப் படித்து அறிதல் வேண்டும்.

## இலக்கணக்குறிப்பு (இளந்தமிழே !)

**செந்தமிழ், முத்தமிழ், செம்பரிதி** – பண்புத்தொகைகள்

**சிவந்து** – வினையெச்சம்

**வியர்வைவெள்ளம்** – உருவகம்

**முத்துமுத்தாய்** – அடுக்குத்தொடர்

## உறுப்பிலக்கணம்

1. சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்

**சாய்** – பகுதி

**ப்** – சந்தி

**ப்** – எதிர்கால இடைநிலை

**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. விம்முகின்ற – விம்மு + கின்று + அ

**விம்மு** – பகுதி

**கின்று** – நிகழ்கால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

3. வியந்து – விய + த் (ந்) + த் + உ

**விய** – பகுதி

**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. **இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**

**இரு** – பகுதி

**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

1. **செம்பரிதி – செம்மை + பரிதி**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – செம் + பரிதி, 'செம்பரிதி' எனப் புணர்ந்தது.

2. **வானமெல்லாம் – வானம் + எல்லாம்**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே', என்னும் விதிப்படி 'வானமெல்லாம்' எனப் புணர்ந்தது.

3. **உன்னையல்லால் – உன்னை + அல்லால்**

'உயிர்வரின்..... இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி – உன்னை + ய் + அல்லால்

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' என்னும் விதிப்படி–'உன்னையல்லால்' எனப் புணர்ந்தது.

4. **செந்தமிழே – செம்மை + தமிழே / செந்நிறம் – செம்மை + நிறம்**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – செம் + தமிழே / செம் + நிறம்

'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி செந் + தமிழே / செந் + நிறம்

'செந்தமிழே' எனப் புணர்ந்தது. / 'செந்நிறம்' எனப் புணர்ந்தது.

## இலக்கணக்குறிப்பு (தன்னேர் இலாத தமிழ்)

**உயர்ந்தோர்** – வினையாலணையும் பெயர்

**வெங்கதிர்** – பண்புத்தொகை

**இலாத** – இடைக்குறை

## உறுப்பிலக்கணம்

1. **வந்து – வா (வ) + த் (ந்) + த் + உ**

**வா** – பகுதி, 'வ' ஆனது விகாரம்

**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

2. **உயர்ந்தோர் – உயர் + த் (ந்) + த் + (ஆர்) ஓர்**

**உயர்** – பகுதி

**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி, 'ஓர்' ஆனது.

'ஆர்' என்னும் விகுதியில் ஈற்று அயல் எழுத்தான 'ஆ' என்பது, 'ஓ' ஆகத் திரிந்தது.

3. **விளங்கி – விளங்கு + இ**

**விளங்கு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள்**

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி – ஆங்க் + அவற்றுள்

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – ஆங்கவற்றுள் எனப் புணர்ந்தது.

2. **தனியாழி – தனி + ஆழி**

'(உயிர்வரின்) இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி – தனிய் + ஆழி

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – தனியாழி எனப் புணர்ந்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

1. **தமிழ்மொழிப் பாடத்தில் மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைக் கலந்துரையாடலாக நிகழ்த்துக.**

**பார்வதி** : மொழி என்பது, இங்குத் தாய்மொழியாகிய தமிழ்மொழியைக் குறிக்கும். எனவே, மொழிவாழ்த்து என்பது, தமிழ்மொழியை வாழ்த்துதல் எனப் பொருள்படும்.

**காவியா** : நீ சொல்வது சரிதான் பார்வதி. மொழி கருத்துப் பரிமாற்றத்திற்கு மட்டும் துணை புரியாமல், மக்களது அறிவை வளரச் செய்யவும் உதவுகிறது. தமிழ்மொழி என்பது தமிழர்களாகிய நமது அடையாளம்; நம் பண்பாட்டின் நீட்சி. அது தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டும், எழுதப்பட்டும், உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது.

**கலையரசன்** : அத்தகைய சிறப்புகளைப் பெற்ற மொழியைத் தெய்வமாகக் கருதி, அறிவைப் பெருக்க வேண்டி வாழ்த்துதல் அவசியம்தானே!

**கண்ணப்பன்** : இத்தகைய காரணங்களால்தான் தமிழ் மொழிப் பாடத்தில், மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கும், சிந்தனை ஆற்றலைத் தூண்டுவதற்கும் உற்ற துணையாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மொழியைத் தெய்வமாகப் போற்றி வணங்குவதற்காக, மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெறச் செய்யப் பெற்றுள்ளது.

**பார்வதி** : மொழிவாழ்த்தைப் புரிந்து படித்து, மாணவர் களாகிய நாம் மொழித்திறனை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

2. **கவிஞர் பாரதிதாசனின் அழகின்சிரிப்பு – குன்றம் – ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

**குன்றம் – மாலை வானும் குன்றமும் :**

தங்கத்தை உருக்கி விட்ட வானோடை தன்னிலே ஓர்
செங்கதிர் மாணிக் கத்துச் செழும்பழம் முழுகும்மாலை
செங்குத்தாய் உயர்ந்த குன்றின் மரகதத் திருமேனிக்கு
மங்காத பவழம் போர்த்து வைத்தது வையம் காண!

**ஒளியும் குன்றும்**

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை
நிலவுமேல் எழுந்த மின்னல்
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ!

பாரதிதாசனின் கற்பனை உணர்வு, அவர்தம் கவிதைகளில், சிறந்த சொற்றொடர்களாகக் காட்சி அளிக்கின்றன. கதிரவனின் ஒளியால் வானில் தெரியும் இயற்கைக் காட்சியைத் தங்கத்தை உருக்கி ஓடவிட்டது போன்ற காட்சியாக வானோடையை உருவகிக்கிறார். மாலைக் காலத்தில் கதிரவன் ஒளி குன்றின்மீதும் மரம் செடி கொடிகள்மீதும் படும்போது, பச்சைநிறக் காட்சியும் பவழம்போன்ற சிவந்த கதிர் ஒளியும் வையகம் காணும் இனிய காட்சியாகக் கற்பனை செய்துகாட்டும் பாங்கு போற்றுதற்குரியது.

'ஒளியும் குன்றும்' என்னும் பாடலில், அருவிகளின் நிறமும், ஓடுகிற அவற்றின் வீச்சும்தான் கவிஞன் சொல்கிற முறையில் கவித்துவமாகிறது.

அருவிகள் வயிரத் தொங்கல்
அடர்செடி பச்சைப் பட்டே
குருவிகள் தங்கக் கட்டி
குளிர்மலர் மணியின் குப்பை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



எனக் கவிஞரின் உள்ளத் துடிப்பை இனிய சொற்கள் காட்டுகின்றன. கவிதையின் சக்தி அழகுச் சக்தியாக மாறுகிறது. வயிரத்தொங்கல், பச்சைப்பட்டு, தங்கக்கட்டி, மணியின் குப்பை, தங்கத் தகடுகள் என்று கூறும்போது, காட்சி அமைப்பும் சொற்களும் இனிய கவித்துவமாக மாறுகிறது. கவிதையே, இனிய காட்சி வடிவில் அமைந்து, காலங்கடந்து நிலைத்த புகழ் பெறுகிறது. உணர்ச்சி மலர்கிறது; கற்பனை விரிகிறது; இனிய படைப்பை மொழி பெறுகிறது.

3. **தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

**யானை**

யானை, வேழம், களிறு, கரி, களபம், மாதங்கம், கைம்மா, ஆனை, குஞ்சரம், வாரணம், நால்வாய், கயம், வயமா.

**மலர்கள்**

பூ, அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ, மொட்டு, முகிழ், பொதும்பர், பொம்மல், செம்மல், அனிச்சம், கண்ணி, காந்தள், காயா, குரவம், முல்லை, குறிஞ்சி, குவளை, கொன்றை, சண்பகம், தாமரை, தாழை, தும்பை, நெய்தல், பாலை, பிடவம், புன்னை, மருதம், வள்ளி, வஞ்சி, வாகை, வேங்கை போன்றவற்றுடன் 96 வகையான பூக்கள்.

4. **வேற்றுமை அணி பயின்று வரும் இருபாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

**வேற்றுமையணி இலக்கணம்** : முதலில் இருபொருள் களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிப் பின்னர், அவற்றை வேறுபடுத்தி ஒன்றைவிட இன்னொன்றை உயர்ந்ததாய்க் கூறுவது வேற்றுமையணி ஆகும்.

**சான்று : 1**

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சு
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்.

**– பாரதிதாசன்**

**சான்று விளக்கம் :** இச்செய்யுளில் கரும்பின் சாறு, பலாக்கனியின் சுளை, காய்ச்சிய பாகு, பசுவின் பால், தென்னையின் இளநீர் ஆகியன இனிமை தருவன என ஒப்புமைப்படுத்திவிட்டு, உயிர்போன்ற ‘தமிழ்’ அவற்றைவிடவும் இனியது என்று வேறுபடுத்திக் கூறியுள்ளமையால், இச்செய்யுள் வேற்றுமை அணிக்குச் சான்றாகும்.

**சான்று : 2**

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

**– நாலடியார்**

**சான்று விளக்கம் :** இச்செய்யுளில் சான்றோருக்கும் திங்களுக்கும் முதலில் ஒப்புமை கூறிப் பின்னர், அகல் நிலாப் பாரிக்கும் திங்களினும் சான்றோர் சிறந்தவர் என்று வேறுபடுத்திக் கூறியுள்ளதால், இச்செய்யுளில் வேற்றுமையணி பயின்று வந்துள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. 'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்பொழிவில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரையை உருவாக்குக.**

**தமிழின் தொன்மை :**

தமிழ்மொழி, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த பழங்குடியினரால் பேசப்பட்ட பெருமை வாய்ந்தது. படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வந்த முடிமன்னர் மூவரால் பேணி வளர்க்கப்பட்டது.

எல்லையறு பரம்பொருள் பல்லுயிரும், பலவுலகும் படைத்து அளித்துத் துடைக்கினும் தான்மட்டும் முன் இருந்தபடியே இன்றளவும் யாதொரு மாறுபாடுமின்றி இருந்து வருகிறது. அஃதேபோல் நம் செந்தமிழும் தான்தோன்றிய காலம்முதல் இன்றளவும் எந்த மாறுபாடுமின்றி என்றும் கன்னிமையோடு நின்று நிலவுகின்றது.

**தமிழின் சீரிளமைத் திறம் :**

நம் தாய்மொழியாகிய இத்தமிழிலிருந்தே கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் சேய் மொழிகளாகத் தோன்றியுள்ளன. பல சேய்களை ஈன்றும் தாய்த்தமிழ், இளமை கெட்டு முதுமையுற்று வளமையற்றுப் போகவில்லை.

**தமிழ்மொழியின் தனிச்சிறப்புகள் :**

இனிய மொழி, எளிய மொழி, சிறந்த மொழி, பழைய மொழி, தனித்த மொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ் ஒன்றேதான் தகுதியானது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய இலக்கணங்களைப் பெற்றது.

கண்ணால் காணமுடியாத, மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கும் இலக்கணம் கூறுகின்ற, அகப்பொருள் இலக்கணத்தைக் கொண்டது.

பிற மொழிகளில் காணப்படாத ழகர எழுத்தைச் சிறப்பாகக் கொண்டது.

ஒழுக்கத்தை மட்டும் வற்புறுத்திக் கூறும் தனிநூல்கள் பலவற்றைக் கொண்டது.

**தன்னேரிலாத தமிழ் :**

"தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே"

என்று தமிழைக் குழைந்து போற்றுகின்றனர். தமிழ் எதனோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாத தன்னேரிலாத தமிழாக விளங்குகின்றது. இதன் சிறப்பைப் பற்றிப் பாடாத புலவர்கள் இல்லை; பேசாத அறிஞர்கள் இல்லை என்றே கூறலாம். இதனையே பாரதிதாசன், "தமிழ் என்றன் உயிரை, உணர்வை வளர்க்கின்றது" என்று கூறியுள்ளார். மேலும், "தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனவும், தமிழின் பெருமையையும் சிறப்பையும் போற்றிப் பாடியுள்ளார்.

**6. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 11.12.1882 | பாரதியார் பிறப்பு |
| 1887 | பாரதியின் தாயார் மரணம் |
| 1893 | பாரதி தமது முதல் கவிதையை எழுதினார். |
| 1897 | பாரதியின் திருமணம் |
| 1898 | பாரதி, எட்டயபுர மன்னருக்குக் கடிதம் எழுதினார். |
| 1898–1902 | பாரதி, காசியில் தங்கியிருந்தார். |
| 1903 | பாரதியின் பாடல்கள் அச்சில் வெளிவந்தன. |
| 1904 | பாரதி பாடல், 'விவேக பானு' இதழில் வெளியானது. |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | |
|---|---|
| 1904–1906 | சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். |
| 1905–1906 | இந்தியா, பாலபாரதம் இதழ்களில் பணியாற்றினார். |
| 1905–1906 | மே 1905முதல் செப்டம்பர் 1906வரை புதுச்சேரியில் தங்கியிருந்தார். |
| 1905 | அரசியலில் ஆர்வம் காட்டினார். |
| 1908 | இந்தியா இதழ், புதுவையில் இருந்து வெளிவரத் தொடங்கியது. |
| 1908–1910 | சூரியோதயம் இதழ் |
| 1910 | கர்மயோகி |
| 1909–1910 | தர்மம், பாலபாரதம், யங் இண்டியா ஆங்கில இதழ் ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றினார். |
| 1912 | பகவத்கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். |
| 1918 | கைது செய்யப்பட்டு 34 நாள்கள் சிறையில் வைக்கப்பட்டார். |
| 1919 | ராஜாஜி வீட்டில் காந்தியைச் சந்தித்தார். |
| 11.09.1921 | பாரதியின் மறைவு. |

**7. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக்கடிதம் ஒன்றினை எழுதுக.**

என் பாட்டன் பாரதிக்கு,

உம் எண்ணம்போலவும், கூறியதுபோலவும் நாட்டுப்பற்று கொள்வேன்!

மொழிப்பற்று கொள்வேன்!

என் மனத்தை விரிவாக்குவேன்!

இவ்வுலகைத் தமிழ்க் கண்ணோடு பார்ப்பேன்;

உலகின் சிறந்த கலைவளர்ச்சி பெற்ற மொழிகளைக் கற்பேன்!

என் தாய்த்தமிழில் அவ்வளங்களைச் சேர்ப்பேன்!

நீங்கள், "சபாஷ் பாண்டியா!" என்று போற்றும்படி வாழ்வேன்.

உங்கள் கொள்ளுப்பேரன்,

பாண்டியன்.

## மொழியை ஆள்வோம்

**தமிழாக்கம் தருக.** (PTA - 2, May - 22)

1. Learning is a treasure that will follow its owner everywhere.
   கற்றல் என்பது ஒரு பெரும் புதையல்; அது, தன்னை உடையவரை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் பின்தொடரும்.
2. A new language is a new life. (Mar.-24, July-23)
   ஒரு புது மொழியை அறிவது, ஒரு புது வாழ்வுக்கு வழியாகும்.
3. If you want people to understand you, speak their language. (Mar.-23,24, July-23)
   மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமென நீ விரும்பினால், அவர்கள் மொழியில் பேசு.
4. Knowledge of languages is the doorway to wisdom. (Mar.-24, July-23)
   பலமொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.
5. The limits of my language are the limits of my world. (Mar.-24, July-23)
   எனது மொழிக்குறைபாடு என்பது, உலகை அறியத் தடையாகும்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கிய நயம் பாராட்டல்

**இலக்கிய நயம் பாராட்டுக.** (PTA - 5,6, Mar.-24)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி !

– கண்ணதாசன்

**ஆசிரியர் குறிப்பு** : 'கவியரசரா'ய் வாழ்ந்தவர் கண்ணதாசன். திரைத்துறையிலும் பத்திரிகைத் துறையிலும் எழுதிப் புகழை நிலைபெறச்செய்து, மறைந்த பின்னரும், தம் திரையிசைப் பாடல்களால் வாழ்ந்து கொண்டிருப்பவர். தமிழன்னையின் சிறப்பை இப்பாடலில் தெளிவுபடப் பாடியுள்ளார். இனி நயம் காண்போம்.

**மையக்கருத்து** : சங்கங்கள் அமைத்துத் தமிழ்மொழியை வளர்த்து அரிய நூல்களைப் படைத்தளிக்கத் தமிழ்த்தாய் துணை நின்றதை விளக்குவது இப்பாடலின் மையக்கருத்தாகும். சங்கங்களில் அளப்பரிய பொருள்நிறை நூல்கள் உருவானமையும், அவை சுவை மிகுந்த கவிதைகளாக இருந்தமையும் விளக்கப்பட்டுள்ளது.

**எதுகை** : அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து மாத்திரை அளவு ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, எதுகையாகும்.

முச்சங்க, அச்சங்கம்
சொற்சங்க, அற்புதங்க } அடிஎதுகை

**மோனை** : அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, மோனையாகும்.

**மு**ச்சங்க, **மு**துபுலவர்
**அ**ச்சங்க, **அ**ளப்பரிய
**அ**ற்புதங்கள், **அ**மைத்த } சீர்மோனை

**இயைபு** : செய்யுள் அடிகளில் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.

தமைக்**கூட்டி**
பொருள்**கூட்டி**
கவி**கூட்டி** } அடி இயைபு

**அணி** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது அணி. இப்பாடலில் '**கூட்டி**' என்னும் சொல், ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் **சொற்பொருள் பின்வருநிலையணி** பயின்று வந்துள்ளது.

**சுவை** : பாடலின் கருத்தைக் கண்முன்னே காட்சிப்படுத்துவது சுவை. தமிழன்னையின் பெருமையைப் புகழ்ந்து பாடுவதால், இப்பாடலில் '**பெருமிதச் சுவை**' பயின்று வந்துள்ளது.

"முச்சங்கம் கூட்டி...." எனத் தொடங்கும் கவியரசு கண்ணதாசன் பாடல் எதுகை, மோனை, இயைபு, அணி, சுவை எனப் பல நயங்களைத் தன்னகத்தே கொண்டு படிப்போரை மெய்மறக்கச் செய்கிறது.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே, பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**– மொழி வரலாறு (மு. வரதராசனார்)**

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை எது?
2. மொழி, எதற்குக் கருவியாக உள்ளது?
3. தாயின் முதல் வேட்கை எது?
4. பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது எது?
5. மொழிக்கு ஆசிரியராகவும், மாணவராகவும் உள்ளவர் எவர்?

**உவமைத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

**1. தாமரை இலை நீர்போல :**

உண்மையான துறவியர், உலக ஆசைகளில் மனத்தைப் பறிகொடுக்காமல் **தாமரை இலை நீர்போல** இருப்பர்.

**2. கிணற்றுத் தவளைபோல :**

செய்தி இதழ்களைப் படிக்காமல், பாடநூல்களோடு மட்டுமே உறவாடும் மாணவர்கள், **கிணற்றுத் தவளைபோல்** உலகியல் அறிவு பெறாமல் வாழ்கிறார்கள்.

**3. எலியும் பூனையும்போல :**

உலகில் சில நாடுகள், அண்டை நாடுகளுடன் தேவையற்ற பூசல்களில் ஈடுபடுவதால், **எலியும் பூனையும்போலக்** காணப்படுகின்றன.

**4. அச்சாணி இல்லாத தேர்போல :** (Mar. - 20,24)

தலைவனை இழந்ததால் குடும்பம், **அச்சாணி இல்லாத தேர்போல்** தடுமாறுகிறது.

**5. உள்ளங்கை நெல்லிக்கனிபோல :** (July - 20,23)

அகிம்சைக் கொள்கையைக் கடைப்பிடித்து, வெற்றிப்படிகளில் கால்பதிக்கும் நாடுகளால், அகிம்சைக் கொள்கையின் பெருமை, **உள்ளங்கை நெல்லிக்கனி போலத்** தெளிவாகப் புலப்படுகின்றது.

**ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

## தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்திப் பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை.**

**முன்னுரை :**

ஒருவர் தம் அறிவை வளர்க்கக் கற்றல் இன்றியமையாதது ஆகிறது. பல நூல்களைக் கற்பதே கல்வியாகும். அதாவது, சிறந்த நூல்களைப் படிப்பதனால் மட்டுமே அறிவு வளர்ச்சி பெறும் என்பது, எல்லாரும் அறிந்த உண்மை. கற்றல் சிறக்க எந்த மொழி உதவும் என்பதை, இந்தக் கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

பிறந்த குழந்தை வளரும்போது, பெற்ற தாயே குழந்தைக்கு உலகின் உறவுகளையும் பொருள்களையும் அறிமுகப்படுத்துகிறாா். தாய் கற்பிக்கும் மொழியே, உலகை நாம் அறியவும், பிறரிடம் பேசவும் துணைபுரிகிறது. தாய் தன் குழந்தைக்குக் கற்பிக்கின்ற மொழியே தாய்மொழியாகும். பள்ளி சென்று படித்து அறிவைப் பெறாத பாமர மக்களும் வாழ்வில் சிறக்க, அவர்கள் திறமை வளர அவரவர் தாய்மொழியே காரணமாக இருக்கிறது. கற்பதை அவரவர் தாய்மொழியில் கற்பதே சிறப்பு. அப்போதுதான் படிப்படியான அறிவு வளரும்; புரிதல் தெளிவுபெறும்; சிந்தனை தூண்டப்படும்; புதுமைகள் கண்டறியப்படும். எனவே, தாய்மொழி வழிக்கல்வியே தேவை என்பதை உணரமுடிகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தாய்மொழிச் சிந்தனை :**

சிந்தனை வளர்வதற்குத் தாய்மொழியே சிறந்த கருவியாக உதவும். இலக்கியத்திற்கு 'நோபல் பரிசு' பெற்ற தாகூர், தம் 'கீதாஞ்சலி'யைத் தாய்மொழியான வங்காள மொழியிலேயே முதலில் எழுதினார். உலகில் அனைவரும் போற்றும் 'My Experiment with Truth' என்னும் சுயசரிதை நூலைக் காந்தியடிகள், முதலில் தம் தாய்மொழியான குஜராத்தியில்தான் எழுதினார். இப்படி உலகில் எண்ணற்றவர், அவரவர் சிந்தனைகளை அவரவர் தாய்மொழியில்தான் வளர்த்துள்ளனர்.

**அறிஞர்களின் பார்வை :**

ஜப்பான், ரஷ்யா, சீனா, ஜெர்மன், பிரான்சு, இங்கிலாந்து, ஸ்பெயின், கியூபா என்னும் நாடுகள், தொழில் வளத்திலும், அறிவியல் முன்னேற்றத்திலும் சிறந்திருக்கக் காரணம், அந்நாடுகளில் மக்கள் பெறும் கல்வி, அவரவர் தாய்மொழியில் இருப்பதே ஆகும் என்பதை அறிஞர் பலர் எடுத்துரைக்கின்றனர். சிந்தனைமிக்க அறிஞர்கள், தாய்மொழிக் கல்வியே வளம்சேர்க்கும் என்பதை பல வகைகளிலும் வலியுறுத்தியே வருகின்றனர்.

**கற்கும் திறன் :**

தாய்மொழிவழிக் கல்வி பயில்பவரே, கற்றல் திறனில் சிறந்து விளங்குகின்றனர். இதற்கு மேலை நாட்டவரின் சாதனைகளே சான்று. நோபல் பரிசு பெறுவோர் எண்ணிக்கையின் சிறப்பினாலும் இதனைத் தெளியலாம். திறன் வளர, பயன்பெறத் தாய்மொழி வழிக்கல்வியே சரியானது.

**பயன் :**

நம் நாட்டில் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர்வரை, குஜராத்திலிருந்து அருணாசலப் பிரதேசம்வரை பரவலாகத் தாய்மொழி ஒதுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் கற்பிப்பதே வலியுறுத்தப்படுகிறது. பயன் என்ன? உலகில் சாதனை படைக்கும் இந்திய மக்களின் விழுக்காடு எத்தனை? இதனால் பிறமொழியால் கல்வி கற்பதன் விளைபயனைத் தெளியலாம்.

**இன்றைய நிலை :**


நம் நாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் தாய்மொழி வழிக்கல்வியை ஒதுக்கிவிட்டு, ஆங்கிலமொழி வழிக்கல்வி யையே பலரும் விரும்புகின்றனர். இதனால் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தையும் முழுமையாகக் கற்காமல், தாய்மொழி யான தமிழையும் மறந்து போகின்றனர். தாய்மொழிவழிக் கல்வி, கல்லாத பலர், காகம் அன்னநடை கற்கப் போய்த் தன் நடை மறந்த கதையாகத் திண்டாடுகின்றனர்.

**முடிவுரை :**

பத்திரிகைகளில், "எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் மூன்றாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலைக்கூட வாசிக்க முடியவில்லை" என்னும் செய்தியைப் பார்த்துப் பெற்றோர், திகைப்படையும் நிலையே உள்ளது.

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



ஆதி மனிதன், குகைகளை உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்தான். வாழ்க்கை என்பது, உணவு தேடுவதோடு முடிந்து விடுவதில்லை. அவனது அன்றாட வாழ்விலும் சிந்தனை இருந்திருக்கிறது. தன் உறைவிடமான குகையை அழகு படுத்த முயன்றுள்ளான். அத்துடன் தன் அனுபவங்களைக் கோட்டு உருவங்களாக வரைந்துள்ளான். கருவிகளைக் கற்களைக் கொண்டு செய்தவன், தன் சிந்தனைக்குக் கலைவடிவம் கொடுக்க முயன்றுள்ளான். கற்காலத்தில் வாழ்ந்தாலும், கலை உணர்வுடன் வாழ்ந்துள்ளான் போலும்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
உயிரின் ஒலியில் உறக்கம் தெளிந்தது
உறக்கம் தெளிந்து அழைத்தது குழந்தை!

3. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

எ – கா : கவிஞர்தம் ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – சூடாமணி

1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். – மறைமலை அடிகள்
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தருவன. – தமிழ்ஒளி
3. சிறுகதை ஆசிரியர் : முதல்பாதி நவீனம். – புதுமைப்பித்தன்
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். – கோதை

## நிற்க அதற்குத் தக

கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி / தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும், தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் ஒப்பிடுக.

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| எ–கா : பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல். | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல். | | தவறு. பொதுத்தூய்மை கெடும்;. நோய் பரவும்; கட்டுப்படுத்திக் குறிப்பிட்ட இடத்தில் துப்பப் பழக்க வேண்டும். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல். | | தவறு. வகுப்பறைத் தூய்மை கெடும். குப்பைக்கூடை வைத்துப் போடப் பழக வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல். | | தவறு. பொது உடைமை. நமக்கு முன் பலருக்கும் பயன்பட்டது; நமக்குப்பின்னரும் பலருக்கும் பயன்பட வேண்டும். பாதுகாப்பாகக் காப்பாற்றுவது நல்லது. |

படிப்போம்; பயன்படுத்துவோம் (நூலகம்)

Subscription – உறுப்பினர் கட்டணம்
Fiction – புனைவு
Biography – வாழ்க்கை வரலாறு
Archive – காப்பகம்
Manuscript – கையெழுத்துப் படி
Bibliography – நூல் நிரல்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 2

# இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

## பெய்யெனப் பெய்யும் மழை

| | | |
|---|---|---|
| உரைநடை | பெருமழைக்காலம் | |
| செய்யுள் | பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் |
| | நெடுநல்வாடை | நக்கீரர் |
| துணைப்பாடம் | முதல்கல் | உத்தமசோழன் |
| இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | |

### பாடநூல் வினாக்கள்

### நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

1. பொருத்துக. (Mar.-24)

அ. குரங்குகள் – 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ. விலங்குகள் – 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ. பறவைகள் – 3) குளிரால் நடுங்கின
ஈ. பசுக்கள் – 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

**விடை : ஆ) 3, 4, 2, 1**

2. 'நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது' என்று, அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது (Sep. - 20, 21,22)

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

**விடை : இ) மழைத்துளிகள்**

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் ______.

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

**விடை : ஆ) மணல் அள்ளுதல்**

4. **பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு ______. (Mar.-20, July-20,23)

அ) வினைத்தொகை. ஆ) உரிச்சொல் தொடர்.
இ) இடைச்சொல் தொடர். ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**விடை : ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

5. உலக நாடுகள், மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே, புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது (PTA-3)

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

**விடை : அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **‘ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்’ என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**
   - ★ மரம் என்பது நிழல் தரும். காய், கனி தரும்.
   - ★ மழைக்கு ஆதாரமாக விளங்கும்.
   - ★ மாசுகளைத் தூய்மைப்படுத்தும்.
   - ★ மண் அரிப்பைத் தடுக்கும்.
   - ★ நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்கத் துணைபுரியும்.
   - ★ இச்செய்திகளை எல்லாம், ‘ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்’ முழக்கத்திற்குப் பயன்படுத்துவேன்.

2. **இனநிரை – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

   **இனநிரை – இனம் + நிரை**
   - ★ “மவ்ஈறு ஒற்றுஅழிந்து, உயிர்ஈறு ஒப்பவும் ஆகும்” என்னும் விதிப்படி – இன + நிரை – இனநிரை எனப் புணர்ந்தது.

3. **மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் – இருதொடர்களாக்குக.** (Sep.-20)
   - ★ மனிதன், தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான். அதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

4. **‘நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது’ – விளக்கம் தருக.** (Sep. -21,22, Mar.-23)
   - ★ பெய்த மழையால், நகர மாசுகள் அகற்றப்பட்டன.
   - ★ மழை விலகி, திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால், புதுப்பொலிவு பெறுகிறது நகரம்.
   - ★ இதனை, ‘நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய்’ விளங்குகிறது என்கிறார் கவிஞர்.

## சிறுவினாக்கள்

1. **“நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து**
   **உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்” – இக்கவிதையின் அடி**
   **“தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே” என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**
   - ★ சூரியனின் ஒளிக்கதிர்கள், நீர்நிலைகளில் தேங்கிய நீரை வெப்பத்தால் ஆவியாக்குவதைப் படித்திருக்கிறோம். இங்குக் கவிஞர், மழை பெய்ததும் தோன்றிய சூரியனே, தாகம் எடுத்ததுபோல் தன் கதிர்களை உதடுகளாக்கி, மழைநீரை உறிஞ்சி எடுப்பதாகப் பாடியுள்ளார்.
   - ★ நாட்டுப்புறப் பாடலில், நாள்தோறும் புல்நுனியில் காணப்படும் பனிநீர், சூரியன் தோன்றியதும் மறைவதைக் கண்டு, புல் நுனியில் பனிநீர் தூங்குவதாகவும், கதிரோன் அதனைக் கதிர்க்கரம் நீட்டி, வாங்கிக் கொள்வதாகவும் பாடப்பட்டுள்ளது.
   - ★ நாட்டுப்புறப் பாடலாயினும், சொல், ஓசை நயத்துடன் அமைந்துள்ளது. உதடுகள் குவித்து உறிஞ்சுவது என்பது, கவிஞரின் கற்பனை வளத்தை நயம் தோன்றச் சுட்டுகிறது.

2. **வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?** (July -20,23, Mar.-23)
   - ★ வாடைக் காலத்தில் பெய்த பெருமழையால் வெள்ளம் பெருகியது.
   - ★ தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், பெருகிய வெள்ளத்தை வெறுத்தனர்.
   - ★ தம் நிரைகளை மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
   - ★ அவர்கள் சூடியிருந்த காந்தள்மலர் மாலைகள் கசங்கின.
   - ★ மலையையே நடுங்கச் செய்வதுபோன்ற குளிரில் பாதுகாப்பைத் தேடினர்.
   - ★ ஆயர் பலர் சேர்ந்து, கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.
   - ★ எனினும், அவர்களின் பற்கள் வாடைக் குளிரில் நடுங்கின.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.** (PTA - 6)

★ வெள்ளநீர் நிரம்பவும், வழியும்நீர் பெருகவும் உள்ள நீர்வழிகளான கால்வாய், ஆறு, ஓடைகளை **மண் மேடிடாமல்** பராமரிக்க வேண்டும்.

★ வெள்ளச் சமவெளிகளையோ, நீர்வழிப் பாதை களையோ **ஆக்கிரமித்துக்** குடியிருப்புகளையோ, தொழிலகங்களையோ கட்டுதல் கூடாது.

★ நீர் சேமிக்கும் இடங்களில் குப்பை, கழிவு, நெகிழிப் பொருள்கள், தொழிற்சாலை திட, திரவக் கழிவுகள் முதலானவற்றைக் கொட்டுதல் கூடாது.

★ ஆற்றுமணல், சவுடுமண் என்னும் பெயரில் அளவுக்கு அதிகமாக **நீர் நிலைகளில் மண் அள்ளக் கூடாது.** இயல்பாக ஓடும் நீர்வழிகளைத் திசைதிருப்பக்கூடாது முதலான விழிப்புணர்வு களை, மழை வெள்ளம் பெருகுவதற்கு முன்பாகவே மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

**4. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.** (PTA - 5, Mar.-20,24)

★ பேரிடர் மேலாண்மை ஆணையத்தை, நடுவண் அரசு 2005ஆம் ஆண்டு அமைத்தது.

★ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, ஆழிப்பேரலை, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான **இயற்கைப் பேரிடர்கள்** நிகழும்போது, பல்வேறு அமைப்புகளை **ஒருங்கிணைத்துச் செயலாற்ற** இந்த ஆணையம் உதவுகிறது.

★ மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துச் செயலாற்ற, இவ்வாணையம் வழிவகை செய்துள்ளது.

## நெடுவினாக்கள்

**1. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.** (Mar. -20,23)

நெகிழியைத் தவிர்த்து நிலத்தை நிமிர்த்துவது தொடர்பாகச் சில விளக்கங்களை அறியச் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் உரையாடத் தொடங்கினேன்!

**நான்** : ஐயா, நெகிழிப்பொருள் பயன்பாடு, இன்றைய சூழலில் மக்களுக்கு இன்றியமையாதது ஆகிவிட்டது அன்றோ?

**பசுமைதாசனார்** : உண்மைதான்! அதே வேளையில் நெகிழிப் பொருள்களால் விளையும் கேடுகளையும் எண்ணிப் பார்க்க வேண்டுமல்லவா? அவை மட்கி அழிவதே இல்லை!

**நான்** : உணவு உண்ணும் தட்டிலிருந்து பருகும் நீர்வரை, நெகிழிச் சாதனங்களில்தானே எளிதாகக் கிடைக்கிறது. பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிய வசதியாக இருக்கிறது அல்லவா?

**பசுமைதாசனார்** : உண்மை! நீ தூக்கி எறியும் நெகிழித் தட்டு, குவளை, புட்டி, பை எல்லாம் என்ன வாகின்றன? பெருங்குப்பையாகச் சேருகின்றன அல்லவா? அதுவும் மட்கி, அழிக்க முடியாத குப்பை அரக்கனாகிறதே!

**நான்** : உண்மைதான் ஐயா, மற்ற குப்பைகளைப்போல் இவை மட்குவது இல்லை! எரிக்கவும் முடிவதில்லை. எரித்தால் புகையோடு 'குளோரோ புளோரோ' புகைப் பூதமும், மக்களை விழுங்க வருகிறது!

**பசுமைதாசனார்** : தாயாக இருந்து, நம்மைப் பாதுகாக்கும் மண்ணை, மட்காத நெகிழிப் பொருள்கள் கெடுத்து விடுகின்றனவே! அவற்றை எரித்தால் எழும் புகை காற்றில் பரவி, உயிரினங்களுக்குக் கேடு! நீங்கள் சொல்லவும் எனக்கு நினைவுக்கு வருகிறது. எங்கள் தெருவில் சாக்கடை அடைத்துக் கொண்டது. அந்த அடைப்பை எடுத்த போது, அளவுக்கு அதிகமான நெகிழிப் பொருள்கள் இருந்தன.

**பசுமைதாசனார்** : அதுமட்டுமா. நெகிழிக்குப்பை, மழைத்தண்ணீரை மண்ணுக்குள் புகவிடுவதில்லை. ஆற்றுநீர் தன் போக்கில் பெருகாமல் தடுத்து, வெள்ளமாகக் கண்டகண்ட இடங்களில் எல்லாம் வழிந்தோட வைக்கிறது. வெள்ளம் எங்கு பெருகுகிறது என்பதை அறிய முடிவதில்லை! அது கடலைக்கூட விட்டுவைக்கவில்லை. மீன் இனப்பெருக்கத்தைத் தடை செய்துவிடுகிறது. ஆடு, மாடு, காட்டில் வாழும் உயிரினங்கள்கூட, நெகிழியால் பாதிக்கப்படுவதைத் தெரிந்துகொள்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நான்** : இதற்கெல்லாம் என்ன செய்யலாம் ஐயா?

**பசுமைதாசனார்** : நெகிழிப் பொருள் பயன்பாட்டை ஒட்டுமொத்தமாக மக்கள் தவிர்க்க வேண்டும். கண்ட கண்ட இடங்களில் பரவிக் கிடக்கின்ற நெகிழிப் பொருள்களைத் திரட்டி, அழிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, அரசாங்கம் மறுசுழற்சிக்கு உதவாத நெகிழிப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தடை விதிக்க வேண்டும்.

**நான்** : நெகிழி சார்ந்த எத்தனையோ பொருள்கள் உள்ளன. அவற்றைக் களைவதை, பயன்படுத்துவதை மக்கள் தவிர்க்க வேண்டும். இதற்கு விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்ய வேண்டும். நான் சொல்வது சரிதானே ஐயா?

**பசுமைதாசனார்** : இதற்குத் தகுதியானவர்கள் பள்ளிப் பிள்ளைகள்தாம். இந்தவகையில் பள்ளிப் பிள்ளைகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, நெகிழியால் மூடப்பட்ட பொருள்கள் சாக்லெட்முதல் அனைத்தையும் வாங்குவதை மாணவர்கள் தவிர்க்க வேண்டும். பயன்பாடு குறைந்தால், அது தானே மறைந்து விடும். இந்த நெகிழி வந்ததால் சணல், துணியால் செய்யப்பட்ட பை முதலான பொருள்கள் உற்பத்தி குறைந்துபோனது! அவை மீண்டும் உருவெடுக்கும். தொழில்கள் பெருகும். தொல்லைகள் குறைந்து நன்மை விளையும்.

**2. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க. (PTA -2,5)**

**புதுப்பெயல் :**

மேகமானது தான் தங்கி இருந்த பெரிய மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு, விண்ணில் எழுந்தது. அதனைத் தொடர்ந்து உலகம் குளிர்ச்சி பெறுமாறு **மழையைப் பொழிந்தது.** அதனால் தாழ்வான பகுதிகளில், பெருவெள்ளம் புரண்டது. காற்றும் மழையும் தொடர்ந்ததால், பருவநிலை மாறியது.

**வாழ்வு மாற்றம் :**

புதுப்பெயலால் **ஆயர் இனமக்கள்** தங்கியிருந்த நிலப்பரப்பில் நீர் சூழ்ந்தது. தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், தம் **ஆநிரைகளோடு** மேடான நிலங்களைத் தேடினர். அவற்றைக் காப்பதற்கும், மேயவிடுவதற்கும் தாம் முன்னர் வாழ்ந்த பகுதியிலிருந்து புலம்பெயர நேர்ந்தது.

**வாடைக்கால வாழ்வு :**

பெருமழை பெய்த வாடைக்காலத்தில், ஆயர்கள் சூடியிருந்த **காந்தள்மலர் மாலைகள்** கசங்கின. மலையையே குளிரால் நடுங்கச் செய்வதுபோன்ற குளிர் வாட்டியது. எனவே, பாதுகாப்பைத் தேடி ஆயர் பலர் ஒன்று சேர்ந்து, **கொள்ளி நெருப்புகொண்டு** கைகளுக்குச் சூடு ஏற்றினர். எனினும், அவர்களின் பற்கள் நடுங்கின. விலங்கினங்கள் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கிக் கொண்டிருந்தன. பறவைகள், தங்கி இருந்த மரங்களிலிருந்து நிலத்தில் விழுந்தன. பசுக்களோ, தம் கன்றுகளுக்குப் பாலூட்ட மறுத்தன. இவ்வகையில் நக்கீரர், தமது நெடுநல்வாடையில் **மக்கள் வாழ்க்கையைப்** படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

**3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க. (PTA - 1, 4, 6, July-23, Mar.-24)**

**மூழ்கும் பயிரும் மருதனின் பதற்றமும் :**

முற்றிய நாற்றை நட்டு அதிக உரம் போட்டு, எப்படியாவது 'சம்பா' அறுவடை செய்து விடலாம் என எண்ணியிருந்தனர் காவிரியின் கடைமடைக்காரர்கள். அதிக மழையின் காரணமாகப் பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மிதக்கும் நிலைக்கு வந்தன. வளவனாற்றின் வடகரையில் நின்று வடக்கே பார்த்த மருதனுக்குப் பதற்றம் ஏற்பட்டது. காரணம், பெய்த மழை போதாது என்று, வானிலை அறிக்கையாக வானொலி, "பலத்த மழை பெய்யும்" என்று அறிவித்தது.

**வழி பிறந்தது; விழி மலர்ந்தது :**

"மறுபடியும் பெருமழையா" என ஆயிரம் சிந்தனை களோடு கரைவழியே நடந்தான் மருதன். உபரித் தண்ணீர் வடிய வேண்டிய வடிகால் மதகை எட்டிப் பார்த்தான். ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால் முழுவதும் காட்டு ஆமணக்குச் செடிகள் வளர்ந்து, வாய்க்காலை ஆக்கிரமிப்புச் செய்திருந்தன. "இந்தப் பேய்ச் செடிகளைப் பிடுங்கி எறிந்தாலே, உபரி நீர் வடியத் தொடங்கிவிடும். வயல்களில் தேங்கியுள்ள நீரும் வடிந்தோடும், கிராமமும் தப்பித்துக் கொள்ளும்" எனச் சிந்தித்து, வழி கிடைத்துவிட்டதை எண்ணி, மகிழ்ச்சி அடைந்தான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**உதவி நாடலும் உதவா மக்களும் :**

வடிவாய்க்கால் வளைவில் வலை போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தான் மாரிமுத்து. அவனிடம் காட்டாமணக்குச் செடிகளை நீக்கிப் பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்றும், ஆளுக்கு ஒரு செடியைப் பிடுங்கும் வழியையும் சொன்னான் மருதன். மீன் பிடிப்பதிலே கண்ணாயிருந்தான் மாரிமுத்து. பொறுமையிழந்த மருதன், "ஊரில் வசதி படைத்த கிழவரிடம் எடுத்துச் சொல்லி, வீட்டுக்கு ஒருவராக வந்து, செடிகளை அகற்ற வேண்டுகோள் வைக்க வேண்டும்" என்றான். அவரும் மகளின் ஊருக்கு செல்வதாகக் கூறினார். அந்த ஊரின் முதல் பட்டதாரி பிரேம்குமார். அவனும், பல வேலைகள் இருக்கின்றன எனச் சொல்லித் தப்பித்தான். மருதன் சோர்ந்து வீடு சேர்ந்தான்.

**தன் கையே தனக்குதவி :**

மனமும் உடம்பும் சோர்ந்து வீடு திரும்பிய மருதனை, அவன் மனைவி அல்லி, பதட்டமாய்ப் பார்த்தாள். குடிக்கச் சுடுகஞ்சி கொடுத்தாள். "எந்த நிலம் எப்படிப்போனா நமக்கென்ன..." என அக்கறையின்றிப் பேசினாள் அல்லி. அவசரமாய் உணவைச் சாப்பிட்டான்; ஊமையாய்ப் படுத்துவிட்டான். இரவு முழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. அதிகாலையில் எழுந்து சென்று, வடிவாய்க்காலில் குளிர்ந்த இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி, காட்டாமணக்குச் செடிகளை அறுத்து எறிந்து கொண்டிருந்தான்.

**ஊரைக் கூட்டிய உழைப்பாளி மருதன் :**

தனியே காட்டாமணக்குச் செடிகளை அகற்றிக் கொண்டிருந்த மருதனோடு, மனைவி அல்லியும் சேர்ந்துகொண்டாள். இருவரின் செயலைப் பார்த்த மாரிமுத்துவும், மீன் பிடிப்பதை விட்டுவிட்டுக் கை கொடுக்க முன்வந்தான். தன் மகள் ஊருக்குப் புறப்பட்டு வில்வண்டியில் போய்க் கொண்டிருந்த கிழவர் காளியப்பனின் பார்வை, வடிவாய்க்கால் பக்கம் திரும்பியது. வண்டியில் இருந்து இறங்கி, இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, வாய்க்காலில் இறங்கினார். செய்தி ஊருக்குப் பரவி, ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். ஊர் கூடி வடிவாய்க்காலை நீர் பெருகும் வாய்க்காலாக மாற்றினார்கள். கூடிச் செயல்பட்டால் கோடி நன்மை பெறலாம் என்பதை உண்மையாக்கினான் மருதன்.

**4. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.** (PTA -3)

அனுப்புநர்

ஊர்ப் பொதுமக்கள்,
2, கம்பர் தெரு,
கடலூர் – 1.

பெறுநர்

மின்வாரியப் பொறியாளர்,
மின்வாரிய அலுவலகம்,
கடலூர் – 1.

ஐயா,

**பொருள்** : மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோருதல் – குறித்து.

வணக்கம். எங்கள் பகுதியில் ஏறத்தாழ 300 குடியிருப்புகள் உள்ளன. வார்தா புயல், எங்கள் குடியிருப்பு களையே புரட்டிப் போட்டுள்ளது. வாழ்நாளில் காணமுடியாத சீரழிவைக் கண்டது. சூறாவளியாய்ப் புறப்பட்ட புயல், சாலைகளைச் சீரழித்தது; வீடுகளை வெள்ளத்தில் மூழ்கடித்தது; வீட்டுப் பொருட்களையெல்லாம் அடித்துச் சென்றது. மரங்களும், மின்கம்பங்களும் சாய்ந்தன. மனிதர்களும், செடிகொடிகளும், விலங்குகளும் தப்பவில்லை.

மின்விளக்கு வசதியில்லாததால், அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. வயதானவர், குழந்தைகள், பள்ளி மாணவர்கள் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே, மிக விரைவில் போர்க்கால நடவடிக்கையாக, அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
இடம் : 2, கம்பர் தெரு, கடலூர் – 1.
ஊர்ப் பொதுமக்கள் சார்பாக,
நாள் : 10.08.2019
க. சரவணன்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. தமிழில் திணைப்பாகுபாடு, ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.(PTA - 4, Sep.-21, May -22)
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
**விடை : அ) பொருட்குறிப்பு**

2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______.
அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்
**விடை : இ) தொல்காப்பியம்**

3. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள், பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ______. (Sep.-22)
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை
**விடை : ஆ) உயர்திணை, அஃறிணை**

4. பொருத்தி விடை தேர்க.

| | | |
|---|---|---|
| அ) அவன் அவள் அவர் | – | 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை |
| ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் | – | 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை |
| இ) நாம் முயற்சி செய்வோம் | – | 3) தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) நாங்கள், நாம் | – | 4) பதிலிடு பெயர்கள் |

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2
**விடை : அ) 4, 1, 2, 3**

5. **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**
★ மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் மொழியின் அடிப்படைப் பண்புகளான திணை, பால், எண், இடம் ஆகியவை உதவுகின்றன.

6. **உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.** (Sep.-22)
★ இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருகின்றன.
★ **எ – கா :** இரண்டு மனிதர்கள் போனார்கள். நான்கு வீரர்கள் போரிட்டார்கள்.

## இலக்கணக்குறிப்பு – (நெடுநல்வாடை)

**வளைஇ** – சொல்லிசை அளபெடை.
**பொய்யா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
**புதுப்பெயல், கொடுங்கோல்** – பண்புத்தொகைகள்.

## உறுப்பிலக்கணம்

1. **கலங்கி – கலங்கு + இ**
**கலங்கு** – பகுதி
**இ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **இனநிரை – இனம் + நிரை**
'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' என்னும் விதிப்படி – இனநிரை எனப் புணர்ந்தது.

2. **புதுப்பெயல் – புதுமை + பெயல்**
'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – புது + பெயல் என்னும் விதிப்படி 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி – புதுப்பெயல் எனப் புணர்ந்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

**1. வெள்ளப் பேரழிவு குறித்த நாளிதழ்ச் செய்திகளைத் தொகுக்க.**

**தினமணி**

ஜூன் 2, 2022

இலங்கையில் ஏற்பட்ட அடைமழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாகப் பாடசாலை மாணவர்கள் உட்பட 230 பேர் உயிரிழந்தனர்.

ஜூலை 30, 2022

சீனாவில் மழை வெள்ளம் : 10 பேர் பலி.

ஆகஸ்டு 14, 2022.

நேபாளில் வெள்ளப்பெருக்கு : 200 இந்தியச் சுற்றுலாப் பயணிகள் தவிப்பு.

நாடு முழுவதும் பலத்த மழை. ஒரிசா, குஜராத், டெல்லி, அசாம், ஹிமாச்சல் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பலத்த மழை காரணமாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

டிசம்பர் 1, 2022.

தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு.

ஆகஸ்டு 25, 2022.

கேரள வெள்ளத்தில் சிக்கிய 36 பேரைக் காணவில்லை. சபரிமலைக்குப் பக்தர்கள் வரவேண்டாம்.

**2. ஜூன் 5, உலகச் சுற்றுச்சூழல் நாள். இந்நாளில் பள்ளியின் கூட்டத்தில் ஏற்க வேண்டிய உறுதிமொழியை உருவாக்குக.**

**உறுதிமொழி**

உலகச் சுற்றுச்சூழல் நாளாகிய இன்று, மாணவர்களாகிய நாம் நம் வகுப்பறைகளையும், பள்ளியையும், தூய்மையாய் வைத்திருப்பதுபோல, வீட்டையும் நாட்டையும் தூய்மையாக வைத்திருக்க உதவுவேன். சுற்றுச்சூழல் மன்றம், தேசியப் பசுமைப் படைமூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பேன். மக்களிடத்தில் 'தூய்மை பாரதம்' என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவேன். நெகிழி மாசுபாட்டை முறியடிப்பேன் என, உறுதிமொழியை ஏற்போம்.

**3. தற்கால வாழ்க்கைமுறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**லதா** : தொடர்ந்து மழை பொழிவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

**வாசுகி** : ஆமாம் லதா! திடீரென மழை பொழிவதால், மாணவர்கள் மழையில் நனைந்தபடியே பள்ளிக்குச் செல்கின்றனர்.

**ஆனந்த்** : அது மட்டுமா? மக்கள் வெளியே வர முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

**பைரவன்** : சாலைகளில் மழைநீர் குளம்போல் தேங்கி நிற்பதால், வாகன ஓட்டிகள் வாகனங்களை ஓட்ட முடியாமல் சிரமப்படுகின்றனர்.

**வாசுகி** : பல இடங்களில் பேருந்துக்காகக் காத்து நிற்கும் பயணிகள், நிழற்குடை இல்லாததால் மழையில் நனைந்தபடி காத்திருக்க நேரிடுகிறது.

**ஆனந்த்** : மழையின் காரணமாகக் கடுங் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காலரா, டைபாய்டு காய்ச்சல் போன்ற நோய்கள், மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்குகின்றன.

**பைரவன்** : நடைபாதையில் வியாபாரம் செய்யும் சிறுவியாபாரிகள், மழையின் காரணமாக மிகுந்த அல்லல் படுகிறார்கள்.

**லதா** : வீதிகளில் காய்கறி விற்கும் வியாபாரி களும், மழையால் தங்கள் வருமானத்தை இழக்கின்றனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வாசுகி** : எப்பொழுதும் இல்லாத அளவுக்குத் தற்போது கடும்குளிர் நிலவுகிறது. இதனால், சாலையோரத்தில் வாழும் ஏழைகள், மிகுந்த துன்பப்படுகிறார்கள்.

**ஆனந்த்** : ஆமாம் வாசுகி. கடும் குளிரால் இரயில் மற்றும் விமானச் சேவைகளும் பாதிப்படைகின்றன. பயணிகள் சிரமப்படுகிறார்கள்.

**பைரவன்** : குளிர்காலத்தில் பால், கேஸ் சிலிண்டர் போன்ற அத்தியாவசியப் பொருள்களும் உடனே கிடைப்பதில்லை.

**லதா** : கடும்குளிரால் ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது.

**வாசுகி** : மனிதர்கள் மட்டுமல்லர்; பறவைகள், விலங்குகள்கூட மழை மற்றும் குளிரால் பாதிப்பு அடைகின்றன.

**4. உங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணவிழாவுக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு, மரக்கன்று ஒன்று தருவதாக முடிவு செய்துள்ளீர்கள். மரக்கன்று வழங்கும் நோக்கங்களையும், அதனை வளர்ப்பதால் ஏற்படும் பொது நன்மைகளையும் கொண்ட இருபக்கச் சிற்றேட்டை உருவாக்குக.**

**மரக்கன்று வழங்குவதற்கான நோக்கங்கள் :**

மாறிவரும் தட்பவெப்பச் சூழ்நிலையில், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மரங்களே முதலிடம் வகிக்கின்றன.

நகரமயமாக்குதல், சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், நாள்தோறும் மரங்கள் அழிக்கப்படுகின்றன. அவற்றை ஈடுகட்டும் நோக்கில் வனத்துறை, வேளாண் துறை, தனியார் நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் என, அனைத்துத் தரப்பினரும் மரக்கன்றுகள் நடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

முதலில் மண்ணுக்கேற்ற மரங்களைத் தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டும். மேலும், அவற்றை வளர்க்கும் முறை பற்றிய கையேடு ஒன்றையும் வழங்க வேண்டும். நன்றாகப் பராமரித்தால் விரைவில் பயன் தரும்.

மரக்கன்றுகளை நல்ல முறையில் வளர்த்துத் தமிழகத்தைப் பசுஞ்சோலை ஆக்குவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**பொது நன்மைகள் :**

பூமியில் மூன்றில் ஒரு பங்குக் காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. காடுகள் மழையைத் தருவதுடன், நிலச்சரிவையும் கட்டுப்படுத்துகிறது; மண்ணரிப்பைத் தடுக்கிறது; நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாக்கிறது. பகலில் கரியமில வாயுவை உட்கொண்டு, உயிர்வளியை வெளியிடும் தன்மை மரங்களுக்கு உள்ளது.

காடுகள் அழிக்கப்படுவதால், புவி வெப்பம் ஏற்பட்டுச் சில பகுதிகளில் அதிக மழை பொழிகிறது. கடலோரப் பகுதிகளில் மரங்கள் வளர்க்கப்படும்போது கடல் சீற்றத்தால் உருவாகும் அலைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி, மரங்களுக்கு உண்டாகிறது. புவியைக் காத்தால்தான் உயிரினங்களைக் காக்கமுடியும்.

முறையாக நடப்பட்டு வளர்ந்த மரம், அதன் சுற்றுப்புறத்தில் ஏற்படும் 40% ஒலிமாசைக் குறைக்கின்றது. நன்மைகள் பல தந்து நம்மைக் காக்கும் மரங்களை வளர்ப்பதால், புவியில் அதிக மழையைப் பெற முடியும்.

கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை மரங்களுக்கும், காடுகளுக்கும் மட்டுமே உண்டு. அதனால் மரம் வளர்ப்போம். மரம் செழித்து, பூமி மகிழக் கைகோப்போம்.

**5. ‘இடப்பாகுபாடு’ தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக.**

தமிழ்மொழியில் அமைந்துள்ள தொடர்களின் தன்மை, முன்னிலைகளில் ஒருமை பன்மைப் பாகுபாடு உண்டு. ஆனால், ஆண்பால் பெண்பால் பாகுபாடு இல்லை. ‘நான் புத்தகம் கொடுத்தேன்’ என்னும் தொடரில் பேசியவர் (தன்மையில்) ஒருவர் எனக் கூறமுடியும். ஆனால், ஆணா, பெண்ணா எனக் கூற முடியாது.

முன்னிலையிலும் பால் பாகுபாட்டை அறிய இயலாது. இக்காலத் தமிழில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகிய ‘தாங்கள்’ என்பது, முன்னிலை இடத்தில் பயன்படுத்தப் படுகிறது.

**சான்று** : ‘தாங்கள் எப்போது அலுவலகம் வருவீர்கள்?’

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இருவகைகள் உண்டு. பேசுபவர் முன்னிலையாளரையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு பேசுவது, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.

**சான்று** : 'நாம் முயற்சி செய்வோம்'

இத்தொடரில் 'நாம்' என்பது, தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.

பேசுபவர், முன்னிலையாளரைத் தவிர்த்துவிட்டுத் தன்மைப் பன்மையில் பேசுவது, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆகும்.

**சான்று** : 'நாங்கள் முயற்சி செய்வோம்'

நாம் தமிழ்மொழியைப் பல்வேறு நிலைகளிலும், பல்வேறு நோக்குகளிலும் பயன்படுத்துகிறோம். பழையனவற்றைக் கழிப்பதற்கும், புதியனவற்றைப் புகுத்துவதற்கும் நாம் தயங்குவதே இல்லை. கால ஓட்டத்தில் இலக்கணங்களும் இலக்கணக் கூறுகளும், தம்மைத் தாமே புதுப்பித்துக் கொள்கின்றன.

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கங்களையும் எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She was transformed the lives of tens of thousands of women through sustainable social forestry schemes. | 1977ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில், காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி 'வங்காரி மத்தாய்', பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து முப்பது ஆண்டுகள், இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள், தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அவற்றின் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல், ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல்முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் 'வங்காரி மத்தாய்' நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்றுகோடி மரங்களை நட்டு வளர்த்ததால், அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்மூலம், பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். |

**எ – கா** : Green Belt Movement– பசுமை வளாக இயக்கம்

| | | |
|---|---|---|
| 1 | Devastation | பேரழிவு |
| 2 | Deforestation | காடுகள் அழிக்கப்பட்டதால் |
| 3 | Beloved Kenya | உயிரினும் இனிய கென்யா நாடு |
| 4 | Mathai found | மத்தாய் தோற்றுவித்தார் |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | | |
|---|---|---|
| 5 | for thirty years | முப்பது ஆண்டுகளாக |
| 6 | Many women | பெண்கள் பலர் |
| 7 | Plant trees | மரங்களை நட |
| 8 | Their regions | தம்முடைய பகுதிகளில் |
| 9 | Food, fuel | உணவு, எரிபொருள் |
| 10 | halting | தடுத்து நிறுத்தினர் |
| 11 | soil erosion | மண் அரிப்பு |
| 12 | Desertification | நிலம் பாலைவனமாதல் |
| 13 | used the movement | இயக்கத்தின் வாயிலாக |
| 14 | enlighten | அறியச்செய்தார் |
| 15 | fruits fully democracy | மக்களாட்சியின் பயன்களை |
| 16 | first | முதன்முறையாக |
| 17 | generation | தலைமுறையினர் |
| 18 | first fully democratic elections | முதன்முறையாக அனைவருக்கும் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பு |
| 19 | elected to the parliament | நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார் |
| 20 | conferred | வழங்கப்பட்டது |
| 21 | Nobel Prize | நோபல் பரிசு |
| 22 | Minister of environment | சுற்றுச்சூழல் அமைச்சர் |
| 23 | Plant more the thirty million trees | மூன்று கோடிக்குமேல் மரங்களை நட்டு வைத்தல் |
| 24 | transformed | மறுமலர்ச்சி ஏற்படுத்தல் |
| 25 | sustainable | நிலையான வளர்ச்சி |
| 26 | social forestry scheme | சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் |

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. **தலை, தளை, தழை –** **(PTA -1, Mar.-23)**

**தழை**களைத் திரட்டிக் கயிற்றால் **தளை** இட்டுத் **தலை**யில் சுமந்து சென்றான்.

2. **கலை, களை, கழை –**

சிலம்பக் **கலை** கற்றவன், தன் கையில் ஏந்திய **கழை**யால், தன் பகை **களை**ந்து வெற்றிபெற்றான்.

3. **அலை, அளை, அழை –** **(PTA -6)**

**அளை**யுள் இருந்த பாம்பைப் பிடிக்க, **அலை**ந்து திரிந்து பாம்பாட்டியை **அழை**த்து வந்தான்.

**எ– கா : விலை, விளை, விழை –** **(PTA-3, July -21,23)**

காரப் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால், தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க, ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இலக்கிய நயம் பாராட்டுக.** (PTA-2, Sep.-21, 22, Mar.-23)

வெட்டி யடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது!
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று!
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்!
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

**ஆசிரியர் குறிப்பு** : இப்பாடலைப் பாடியவர் பாரதியார். அச்சுறுத்தும் பெருமழைப்பொழிவுக் காட்சியை இப்பாடலில் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்.

**மையக்கருத்து** : "மின்னல், வெட்டி அடிக்கிறது! கடலோ, தன் அலைகளைக் கொண்டு, விண்ணை இடிக்கப் புறப்பட்டு விட்டது! மேகமோ கொட்டி முழக்குகிறது! பெருங்காற்று வீசுகிறது! வானமோ, தன் பங்கிற்குச் 'சட்டச்சட சட்டச்சட டட்டா' என்று கொட்டிக் கனைக்கிறது! எட்டுத் திசைகளுமே இடிந்துபோகுமாறு இந்த மழை பொழிகிறது".

**எதுகை** : அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து அளவு ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை.

வெட்டி, கொட்டி, சட்ட, எட்டு – அடிஎதுகை

சட்டச்சட, சட்டச்சட, டட்ட – சீர் எதுகை

**மோனை** : அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை.

**வெ**ட்டி, **வீ**ரத்
**ச**ட்டச்சட, **ச**ட்டச்சட } சீர்மோனை
**எ**ட்டு, **எ**ங்கனம்

**முரண்** : செய்யுள் அடிகளில் அமைந்த தொடர்களின் சொல்லோ, பொருளோ முரண்பட்டு வருவது முரண்.

கொட்டி இடிக்குது, குடையுது – சீர்முரண்

**சந்தம்** : பாடலை இசையுடன் பாடும் ஓசை நயமே சந்தம் எனப்படும். இப்பாடல், **சிந்துப்பாவில்** அமைந்து, பாடி மகிழ்வதற்கு ஏற்ற ஓசை நயத்துடன் அமைந்துள்ளது.

**சுவை** : பாடலின் கருத்தைக் கண்முன்னே காட்சிப்படுத்துவது சுவை. இப்பாடலில், '**வீரச்சுவை**' பயின்று வந்துள்ளது.

"வெட்டி அடிக்குது மின்னல்...." எனத் தொடங்கும் பாரதியார் பாடல் எதுகை, மோனை, முரண், சந்தம், சுவை எனப் பல நயங்களைத் தன்னகத்தே கொண்டு படிப்போரை மெய்மறக்கச் செய்கிறது.

**கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.**

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

நாள் : அக்டோபர் 2 நேரம் : காலை 10 மணி

இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நிகழ்ச்சி நிரல்**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

**வரவேற்புரை** : திருமதி அரசி, செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

**முன்னிலை** : திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்

**தலைமையுரை** : திரு. இமயவரம்பன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

இயற்கைச் சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும் – முனைவர் செங்குட்டுவன்

பேரிடர்களை எதிர்கொள்ளுதலும், தீர்வுகளும் – திரு. முகிலன்

நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் – திருமதி பாத்திமா

பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் – திரு. வின்சென்ட்

**நன்றியுரை** : பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

**நாட்டுப்பண்**

சென்னைக் 'கலைவாணர் அரங்கத்தில்', அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் காலை 10 மணிக்குப் 'பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்' நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் திருமதி. அரசி அவர்கள், எல்லாரையும் வரவேற்று, உரை நிகழ்த்தினார். 'இயற்கை வேளாண்மை' திரு. அமுதன் அவர்கள், முன்னிலை வகித்தார். 'பேரிடர் மேலாண்மை இயக்குநர்' திரு. இமயவரம்பன் அவர்கள், தலைமையுரை நிகழ்த்தினார்.

நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர் செங்குட்டுவன், 'இயற்கைச் சீற்றங்களும் பருவகால மாற்றங்களும்' என்னும் தலைப்பிலும், திரு. முகிலன், 'பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும்' என்னும் தலைப்பிலும், திருமதி. பாத்திமா, 'நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல்' என்னும் தலைப்பிலும், திரு. வின்சென்ட், 'பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும்' என்னும் தலைப்பிலும் உரைகள் நிகழ்த்தினர்.

பசுமைப்படை மாணவர் தலைவர் பர்வீன் நன்றியுரை கூற, நாட்டுப் பண்ணுடன் கருத்தரங்கம் முடிவுற்றது.

## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக.



சுற்றுச்சூழல் பாதிப்பால், உலகின் அனைத்துப் பகுதிகளிலும் வெப்பம் அதிகரித்துள்ளது. அதனால் இயற்கையாய் இயங்கிக் கொண்டிருந்த பருவங்கள், நிலை தடுமாறுகின்றன. மழை பெய்வதற்கென இருந்த காலம் மாறிவிட்டது. ஆறறிவு படைத்த மனிதன், தன் நலத்திற்காகப் பேராசையுடன் இயற்கையைச் சுரண்டுவதை நிறுத்தவில்லை. வடதுருவத்தில் பனிப்பாறைகள், சிதைந்து உருகி நகர்கின்றன. தென் துருவத்தில் பனிமலைகள், இடம்பெயர்கின்றன. அவற்றின் உறுதித்தன்மை சிதைகிறது. இதை எல்லாம் நாம் கண்களால் காணமுடியாது.

அந்த உண்மையை உணர்த்துவதாக இந்தப் படம் அமைந்துள்ளது. மேடைமேல் வைத்துப் பாடம் நடத்த உதவும் உலகக் கோளம், வடக்கு, தெற்கு துருவங்கள் உருகினால், என்னவாகும் என்பதைக் காட்டுகிறது. இயற்கையின் எச்சரிக்கையை உணர்ந்து, மனித இனம் திருந்த வேண்டும். இந்த உலகம், மனிதனுக்கு மட்டும் சொந்தமில்லை. நம்மைவிட எண்ணிக்கை அதிகமுள்ள எத்தனையோ உயிரினங்களுக்கும் சொந்தம். அவற்றின் பெருக்கம் நமக்குத் துணை. அவற்றை நாம் நம்மை அறியாமலே அழிக்கிறோம். இது தவறு. இச்செயலால், நம்மை நாமே அழித்துக் கொள்கிறோம் என்பதை உணர்ந்து, திருந்த வேண்டும். என்ன சொன்னாலும் திருந்தாச் சுயநலம் படைத்த மக்களைப் பார்த்து, இந்த உலக உருண்டை கண்ணீர் சிந்துகிறதோ?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**புதிர்க்கேற்ற விடையை அறிக.**

| | | |
|---|---|---|
| அ | அடைமழை பெய்த அடுத்த, நாள்<br>படைபடையாய் வந்ததாம்<br>பரங்கி நாட்டு விமானம்;<br>எதிரி சுடாமலேயே<br>இறகொடிந்து இறந்ததாம் – என்ன? | **விடை :** ஈசல் |
| ஆ | தண்ணீரும் மழையும் இல்லாமல்<br>பயிர் பச்சையாய் இருக்கிறது;<br>பாக்கு வெற்றிலை போடாமல்<br>வாய் சிவப்பாய் இருக்கிறது? – என்ன? | **விடை :** பச்சைக்கிளி |

**மழை பெய்யும்போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளித் தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

வெ. எழிலரசன்,
மேல்நிலை இரண்டாம் ஆண்டு,
காந்தி மேல்நிலைப் பள்ளி,
சென்னை – 600 012.

பெறுநர்

தலைமை ஆசிரியர்,
காந்தி மேல்நிலைப் பள்ளி,
சென்னை – 600 012.

ஐயா,

**செய்தி :** மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுதல்.

வணக்கம். பள்ளியில் அறிவு வளர்ச்சிக்குப் பாடங்கள் நடத்தப்பெறுகின்றன. அத்துடன் பள்ளியின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. இதைத் தாங்கள் அறிவீர்கள். எதிர்கால வாழ்விற்குத் தேவையான அனைத்து அறிவுரைகளையும் வழங்கக்கூடிய ஒரே இடம் பள்ளிதான். ஒழுக்கம், உடல்பயிற்சி எனப் பலவும் கற்பிக்கப்படும் நிலையில், மாணவர்களுக்குச் சில விழிப்புணர்வு எச்சரிக்கைகளையும் வழங்க, ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். பள்ளியை விட்டு வெளியேறும் மாணவர்கள், சில விபத்துகளில் அறியாமையால் சிக்குகின்றனர். எனவே, மழைக்காலத்தில் மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஆறு, கடல் ஆகியவற்றின் அருகில் செல்லாதிருத்தல், காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கையைக் கவனித்துச் செயல்படுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சார்ந்து, அனைத்து மாணவர்களுக்கும் உங்களால் மட்டுமே விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். எப்போதும் உங்கள் அறிவுரைக்கு மாணவர்கள் பெரிதும் கட்டுப்படுவர். நீங்கள் அறியாதது எதுவும் இல்லை. நன்றி. வணக்கம்.

உங்கள் பணிவுள்ள மாணவன்,
வெ. எழிலரசன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நிற்க அதற்குத் தக

**அது ஒரு மழைக்காலம், அதிகளவு மழையினால் வெள்ளம் வரக்கூடிய நிலை குறித்து அரசு அறிவிப்பு வெளியாகிறது. அரசின் துண்டறிக்கை உங்கள் கைகளில்...**

**அ) எச்சரிக்கை நடவடிக்கைகள் :**

★ வெள்ள நீருக்கு அருகே வரவோ, வெள்ள நீரில் விளையாடவோ கூடாது.

★ ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்.

★ சாக்கடை நீர் ஓட அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள், வாய்க்கால்கள், கழிவுநீர்த் தொட்டிகள் போன்ற வற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

★ வெள்ளநீரில் பாம்புகள் மிதந்து வரும் அபாயம் இருப்பதால், முன்னெச்சரிக்கையாய்க் கைகளில் கொம்புடன் (தடி) இருங்கள்.

★ உங்கள் வீட்டில் உள்ள கழிப்பிடத் துளை மற்றும் குளியலறைத் துளைமீது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து, தெருவில் ஓடும் வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் வீட்டிற்குள் புகாதபடி செய்யுங்கள்.

★ அறுந்த மின்கம்பங்கள்மீது காலை வைக்காதீர்கள். மின் சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால், அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். ஏனெனில் அவற்றின் வழியாக மின்சாரம் தாக்கி, மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**ஆ) சுகாதார நடவடிக்கைகள் :**

★ கொதிக்க வைத்த நீரையே அருந்துங்கள்.

★ மூடிவைக்கப்பட்டுள்ள, சமைத்த சூடான உணவுகளையே உண்ணுங்கள்.

★ சமைத்த உணவு, சமைக்கத் தேவையில்லாத உணவுகளையே உட்கொள்ளுங்கள்.

★ வயிற்றுப்போக்கு இருந்தால், அரிசிக்கஞ்சி, இளநீர், பால் கலக்காத தேநீர், மோர் பருகலாம்.

★ அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களை அணுகி, உப்பு சர்க்கரைக் கரைசல் பொட்டலங்களை வாங்கி அதைக் குடிக்கலாம்.

★ சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க, பிளீச்சிங் பவுடர் சுண்ணாம்புத்தூளைப் பயன்படுத்தவும்.

**குறிப்புகளைப் படித்த நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?**

★ குறிப்புகளைப் படித்துள்ள காரணத்தால் நான், விழிப்புணர்வோடு நடந்துகொள்வேன். அத்துடன் இவற்றை அறியாதவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறி, வழிகாட்டி உதவுவேன்.

**படிப்போம் பயன்படுத்துவோம் (தொடர்வண்டி நிலையம்)**

| | | |
|---|---|---|
| Platform | – | நடைமேடை |
| Train Track | – | இருப்புப் பாதை |
| Railway Signal | – | தொடர்வண்டி வழிக்குறி |
| Ticket Inspector | – | பயணச்சீட்டு ஆய்வர் |
| Level Crossing | – | இருப்புப்பாதையைக் கடக்குமிடம் |
| Metro Train | – | மாநகரத் தொடர்வண்டி. |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 3

## பண்பாடு

## சுற்றத்தார் கண்ணே உள

| | | |
|---|---|---|
| உரைநடை | தமிழர் குடும்ப முறை | பக்தவத்சல பாரதி |
| செய்யுள் | விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி |
| | கம்பராமாயணம் | கம்பர் |
| துணைப்பாடம் | உரிமைத்தாகம் | பூமணி |
| இலக்கணம் | பொருள் மயக்கம் | |
| வாழ்வியல் | திருக்குறள் | திருவள்ளுவர் |

### பாடநூல் வினாக்கள்

### நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ______. (Sep. -21)

அ) அறவோர் துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

**விடை : ஆ) திருமணமும் குடும்பமும்**

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க. (PTA-1, July-23)

அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர்

ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி – 3. பக்தவச்சல பாரதி

ஈ) தமிழர் குடும்ப முறை – 4. சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை : இ) 2, 4, 1, 3**

3. 'இவற்றை வாயிலுக்கே சென்று, இன்முகத்துடன் வரவேற்பாயாக' என்று, ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது (Sep. -21,22)

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

**விடை : ஈ) இவை அனைத்தும்**

4. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்? (July -20,23)

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

**விடை : இ) இராமன், சுக்ரீவன்**

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது (Mar.-23, Sep.-22)

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

**விடை : ஈ) தந்தைவழிச் சமூகமுறை**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## குறுவினாக்கள்

1. **புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.** (PTA-6, Mar.-20,24, Sep.-22)

★ சங்க இலக்கியத்தில், **தற்காலிகத் தங்குமிடம்** அல்லது தற்காலிகப் புகலிடம் 'புக்கில்' எனப்பட்டது. திருமணத்திற்குப்பின் பெற்றோரிடமிருந்து பிரிந்து, கணவனும் மனைவியும் **தனியாக வாழுமிடம்** 'தன்மனை' எனப்பட்டது.

2. **நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?** (July -21,23)

★ பொய்யான தன் உலகப்பற்று, இராமனைக் கண்டதால் அழிந்தது என்றும், அளவற்ற காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும் கூறி, நிலையாமை குறித்த கருத்தைச் சவரி வெளிப்படுத்தினாள்.

3. **எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

★ விருப்பு வெறுப்பின்றி நம்மை வந்தடையும் **மகிழ்ச்சி, மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு,** முதலான எதிர்பாராத நிகழ்வுகளை, அவ்வப்போது வந்துசெல்லும் விருந்தாளியாக, ஜலாலுத்தீன் ரூமி உருவகப்படுத்துகிறார்.

4. **'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற இராமனின் கூற்று, பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?** (Sep.-20)

**அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்.**

**ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்**

★ "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது**?**" என்ற இராமனின் கூற்று, "நிழலின் அருமை வெயிலில் தெரியும்" என்னும் பழமொழிக்குப் பொருந்தும்.

5. **சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகத்துறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?** (Sep. - 21)

★ சங்ககாலத்தில் சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.

★ திருமணம் செய்த பின்னரும் பெண் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்ந்தாள்.

★ குடும்பங்களில் குலத்தொடர்ச்சிக்கு பெண்களே உரியவர்களாயினர். பெண்குழந்தைகளின் பேறு பெரிதும் விரும்பப்பட்டது.

★ அதனால் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

## சிறுவினாக்கள்

1. **பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் தருக.** (PTA - 1,5, Sep.-21, 22, May - 22)

★ மனித சமூகத்தின் அடிப்படை அலகாக இருப்பது குடும்பமே. சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூகத்தில் இது வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி, தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்றது.

★ கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே, மேலும் வளர்ந்து, கூட்டுக் குடும்பமாக அமைந்தது.

★ பெருமை நிறைந்த மக்களுடன், அறத்தை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்லறப் பயனாகக் கருதப்பட்டது.

★ கணவனின் சகோதர சகோதரிகள், தாய் தந்தையர் இணைந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில், இன்றைய கூட்டுக்குடும்பம் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாக விளங்குகிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.** (PTA - 1,4,6)

★ காட்டிற்குப் போன இராமன், கங்கையைக் கடக்க வேடுவர் தலைவன் குகன் உதவினான். பேரரசனாக இருப்பினும், வேடன் குகனிடம் நட்பு முகிழ்த்ததால், ஐந்தாம் உடன்பிறந்தானாக ஏற்றான்.

★ கிட்கிந்தையில் அனுமன் அழைத்துவந்த சுக்ரீவனை, "உன் கிளை எனது; என் சுற்றம் உன் சுற்றம்; நீ என் இன்னுயிர்த் துணைவன்" எனக் கூறி, ஆறாம் உடன்பிறந்தானாக இராமன் ஏற்றான்.

★ சீதையைக் கவர்ந்துவந்தது தவறெனக் கூறியதை ஏற்காமல், அதற்காகக் கடிந்த அண்ணன் இராவணனை விலக்கித் தன்னிடம் அடைக்கலம் வேண்டி வந்த வீடணனை இராமன், ஏழாம் உடன்பிறந்தானாக ஏற்றான். இவையே, "குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான" நிகழ்வாகும்.

3. **"வருபவர் எவராயினும்**
**நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** (Sep.-20)

**இடம்** : இக்கவிதை வரி, என். சத்தியமூர்த்தி மொழிபெயர்த்த கவிதையில், ஜலாலுத்தீன் ரூமியின் '**விருந்தினர் இல்லம்**' என்னும் கவிதையில் இடம்பெற்றுள்ளது.

**விளக்கம்** : விருப்பு வெறுப்பின்றி நம்மை வந்தடையும் **வக்கிரம், அவமானம், வஞ்சனை** முதலான வற்றை வாயிலுக்கே சென்று, இன்முகத்துடன் வரவேற்க வேண்டும். ஏனென்றால், ஒவ்வொருவரும் நெடுந்தூரத்திலிருந்து நமக்கு வழிகாட்டுவதற்காக அனுப்பப்படுகிறார். எனவே, வருபவர் எவராயினும், வரவேற்று நன்றி செலுத்த வேண்டும் என்கிறார், ஜலாலுத்தீன் ரூமி.

4. **தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?** (July-23)

★ கூட்டுக் குடும்பத்தில் வாழ்கின்ற நான், தாத்தா, பாட்டிக்கு உதவி செய்கிறேன். அம்மா, அப்பா ஆகிய இருவரும் பணிக்குச் செல்வதால், குடும்ப வேலைகளைப் பகிர்ந்து செய்கிறேன்.

★ வீட்டிற்குத் தேவையான தண்ணீர் கொண்டு வருதல், மளிகைக் கடைக்குச் சென்றுவருதல், சில நேரங்களில் காய்கறிகள் வாங்கி வருதல் போன்ற வேலைகளையும் செய்கிறேன்.

★ விடுமுறை நாள்களில் என் ஆடைகளை நானே துவைத்துக் கொள்கிறேன்.

★ அப்பாவுடைய இரு சக்கர வாகனம், எனது மிதிவண்டி ஆகியவற்றை விடுமுறை நாள்களில் துடைத்துத் தூய்மையாக்குகிறேன். என்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறேன்.

5. **சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.** (Sep.-21, May-22, Mar.24)

★ சீதையைச் சிறை எடுத்த இராவணனைத் தடுத்துப் போரிட்டுத் தன் சிறகுகளை இழந்து, குற்றுயிராய்க் கிடந்த சடாயு, இராமனிடம் நடந்ததைக் கூறி இறந்தான். இறந்த சடாயுவைத் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் இறுதிச் சடங்குகளைச் செய்ய இராமன் முடிவெடுத்தான்.

★ மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். அகில், சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்தான். தேவையான அளவுக்குத் தருப்பைப் புற்களையும் சேர்த்து ஒழுங்குபட அடுக்கினான்; மலர்களைத் தூவினான்; நன்னீர் கொண்டுவந்தான்.

★ சடாயுவின் உடலைத் தன் தந்தையின் உடலாகவே கருதிப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்து, மேடையில் வைத்து இறுதிச் சடங்குகளை முடித்துக் கடமையாற்றினான்.

## நெடுவினாக்கள்

1. **குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. – எவ்வாறு? விளக்குக.** (July-21,23, May - 22)

**குடும்பம் என்னும் அமைப்பு :**

குடும்பம் எனும் அமைப்பு, குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என விரிவு பெறுகிறது. **குடும்பமே, மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.** குடும்பம், திருமணம் இரண்டும் இணைந்தே செயல்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, முன்றில், குடில் போன்ற சொற்கள், குடும்பங்களின் வாழ்விடங்களைச் சுட்டுகின்றன. மனைவியின் இல்லம், '**தம்மனை**' என்றும், கணவனின் இல்லம், '**நும்மனை**' என்றும் பிரித்தே காணப்பட்டிருக்கிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தாய், தந்தைவழிக் குடும்பம் :**

சங்க காலத்தில் கண சமூகத்திற்குத் தாயே தலைமை தாங்குகிறாள். தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி வளர்கிறது. சேரநாட்டு '**மருமக்கள் தாயமுறை**' இதற்குச் சிறந்த சான்றாகும். 'சிறுவர் தாயே', 'முதியோள் சிறுவன்', 'இவளது மகன்' முதலான தொடர்கள், தாய்வழிச் சமூக நிலையைக் காட்டுகின்றன. சங்க காலத்திலேயே ஆண் மையச்சமூக முறையும் காணப்படுகிறது. "**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே**" எனும் குறுந்தொகைப் பாடலால், பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறியமுடிகிறது. சங்க காலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை வலுவான, பரவலான முறையாக இருந்ததைக் காணலாம்.

**தனி, கூட்டுக் குடும்பங்கள் :**

தாய், தந்தை, குழந்தை என மூவருள்ள தனிக்குடும்பம், விரிவு பெற்றுக் கணவன், மனைவி, மகன், கணவனின் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்த குடும்பமுறை ஆகியவற்றைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம். சங்க காலத்தில் இல்லற வாழ்வின் இறுதியில் பெருமைமிகு மக்களுடன் நிறைந்து, சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே, **இல்வாழ்வின் பயனாகும்** எனப்பட்டது. குடும்பம் என்ற அமைப்பு, தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என விரிந்தது. தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டு, **பண்பாட்டின் அடையாளமாக** மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது.

**2. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.** (PTA - 3, Mar.-24, Sep.-20)

**முன்னுரை :**

கம்பர், தான் படைத்த காப்பியத்தின் தலைவனான இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளார். தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியம், பிற எல்லைகள் என அனைத்தையும் கடந்து, இவனுக்கு முன்போ, பின்போ இப்படி ஒருவன் இருந்தான் எனச் சுட்டிக் காட்ட முடியாத இயல்புகளைக் கொண்டவனாகப் படைத்துள்ளார்.

**வேடுவர் தலைவன் குகனுடன் உறவு :**

காடு செல்லும் இராமன், வேடுவர் தலைவன் குகனைக் காண்கிறான். கங்கை ஆற்றைக் கடக்க அந்தக் குகன் உதவுகிறான். கானகத்தில் இராமன் துன்பமடைவானே எனக் குகன் வருந்துகிறான். 'துன்பம் இருந்தால்தானே இன்பம் புலப்படும்' என்று கூறி, வேடனான குகனை இராமன் உடன் பிறந்தானாக ஏற்று, "அன்பு உள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" எனக் கூறினான். இவ்வுறவைப் பின்னர்க் குகனைச் சந்தித்த பரதனும் உறுதி செய்தான்.

**கழுகு வேந்தனுக்கு இறுதிச்சடங்கு :**

சீதையைப் பிரிந்து வாடிய இராமன், தம்பி இலக்குவனோடு சீதையைத் தேடிச் சென்றபோது, காயப்பட்டுக் கிடந்த கழுகுவேந்தன் சடாயுவைக் கண்டான். சீதையை மீட்க இராவணனோடு தான் போராடிக் காயப் பட்டதைக் கூறிச் சடாயு உயிர் துறந்தான். இராமன், தன் தந்தையின் நண்பரான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையிலிருந்து இறுதிச் சடங்குகளைச் செய்தான்.

**பெருமாட்டி சவரியிடம் கொண்ட அன்பு :**

தொடர்ந்து சீதையைத் தேடிய இராம இலக்குவர், சவரி என்னும் வயது முதிர்ந்த பெண்ணைக் கண்டனர். சவரி செய்த விருந்து உபசரிப்பால், அவள் தன்னைக் காணத் தவமிருந்தவள் என்பதை அறிந்து மனம் நெகிழ்ந்து, "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தா யல்லவா?" என விசாரித்தான். கண்ணீர் பெருக்கிய சவரி, "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; என் தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என மகிழ்ந்து கூறி, இராமனைச் சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு அறிவுறுத்திச் சீதையைத் தேடுதலில் ஒரு திருப்பத்தை உண்டாக்கினாள்.

**இன்னுயிர்த் துணைவன் :**

சவரியின் அறிவுரையை ஏற்றுச் சீதையைத் தேடிப் புறப்பட்ட இராம இலக்குவரைக் கண்ட அனுமன், நண்பனாக ஏற்கத்தக்க சுக்ரீவனை அழைத்து வந்தான். வானரராயினும் சுக்ரீவனிடம், "உன் கிளை எனது! என் சுற்றம் உன் சுற்றம்! நீ என் இன்னுயிர்த் துணைவன்" என்று கூறி, உறவு பூண்டான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஏழாம் உடன்பிறப்பு வீடணன் :**

இராமன் இலங்கையில் கால் பதித்தபோது, தான் கூறிய நல்லுரையை ஏற்காது கடிந்துரைத்த அண்ணன் இராவணனை வெறுத்து, வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அரக்கர் குலத்தில் பிறந்தவனாயினும், அவனைத் தன் உடன் பிறந்தானாக ஏற்ற இராமன், தன் உறவுகளை எல்லாம் கூறி, "குகனொடும் ஐவர் ஆனோம்; குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்! நின்னொடும் எழுவர் ஆனோம்" என்று, உடன் பிறந்தாரை உறுதி செய்தான்.

**முடிவுரை :**

இவற்றை எல்லாம் நோக்க, தாய் தந்தை மீதான அன்பு, உடன் பிறப்பியம் என்னும் எல்லைகள் அனைத்தையும் கடந்து, இராமன் அன்பு செலுத்துகிறான். இராமனின் அன்பிற்கு வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்னும் வேலிகள் இல்லை என்பதையும் தெளியலாம்.

**3. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

மூக்கம்மாள், அந்த வீட்டில் காலெடுத்து வைத்தபோது, வெள்ளைச்சாமி சிறு பையன். அவனைத் தன் மகனைப்போல் பாதுகாத்து வளர்த்தாள். 'இந்தாடா வெள்ளை' என்று, உரிமையுடன் அழைப்பாள். அவள் என்ன வேலை செய்துகொண்டு இருந்தாலும், 'மதனி கஞ்சி வேணும்' என்று பசியுடன் சிணுங்குவான். கலியாணம் ஆனவுடன், எல்லாம் முடிந்தது. அத்தனை பாசமும் அடிமனத்தில் அமுங்கிவிட்டது.

**மேலூரு பங்காருசாமியின் இறுதி முடிவு :**

தன்னை வந்து சந்தித்த வெள்ளைச்சாமியிடம், இறுதியாகச் சொன்னார் பங்காருசாமி: "இந்தா பாரு, எனக்குத் தரவேண்டிய முழுப்பணத்தையும் அடச்சிட்டு, அப்புறமா நிலத்துல இறங்கு. இல்லன்னா ரொம்ப சிரமப்படுவ" என, எச்சரித்து அனுப்பினார்.

**வெள்ளைச்சாமியின் இயலாத் தன்மை :**

முகத்தில் அறைந்தாற்போல் பேசிய பங்காருசாமியிடம், அதற்குமேல் கெஞ்ச மனமில்லாமல் வீடு திரும்பினான். என்ன செய்வதென்றே தெரியாமல் குழம்பிப்போய், வீட்டிலிருந்த ஆட்டுரலில் உட்கார்ந்திருந்தான். "என்னஙக, மேலூர்க்காரரு என்ன சொன்னாக" என்று, அவன் பெண்டாட்டி ஆர்வத்தோடு கேட்டாள். "விதப்பு நேரம், பாடுபட்டு அதுல வர்ற வருமானத்துல பணத்தக் குடுத்திருரேனு சொன்னேன். முடிவா முடியாது, நிலத்துல இறங்கவும் கூடாதின்னுட்டாரு" என்று சொல்லிவிட்டு, இரு கைகளையும் தலைக்கு அண்டக் கொடுத்துக் குனிந்து கொண்டான்.

**எல்லாம் உன்னால் வந்தது ! :**

"இதுக்குக் குனிந்துகொண்டு, உட்கார்ந்திருந்தா எப்படி? என்னத்தாச்சும் வித்துக் கொடுக்க வேண்டியதுதான்" என்று சலித்துக் கொண்டாள். வெள்ளச்சாமிக்குச் 'சுரீர்' எனக் கோபம் வந்து, "எல்லாம் உன் பேச்சக் கேட்டுக் கேட்டுத்தான் இந்த நிலைக்கு வந்திருக்கேன். பொறுப்பில்லாம நடந்துக்கிட்டா இப்படித்தான். என் மதனியப் பாரு. என்ன குடும்பப் பொறுப்பு! எவ்வளவு பொறுமை! பொம்பளன்னா அப்படி இருக்கணும்" என்று, ஆதங்கப்பட்டான்.

நடந்ததை மனைவி கூறக்கேட்ட முத்தையா, "தகப்பன் செத்த நாளிலிருந்து அவனைத் தோளில் தூக்கி வளர்த்தேன். ஆனால், பங்குபாகம் பிரிக்கும்போது அவன் கேட்ட 'நீ எனக்கு அண்ணனாக்கும்...' என்ற அந்த வார்த்தை, என் நெஞ்சில் நெருப்பாய்ச் சுடுகிறது. கண்ணீரை அடக்கமுடியாமல் விம்மியபடி, அவன் எனக்குத் தம்பி இல்லை. நான் முறையாகப் பிரித்துக் கொடுத்த நிலத்தை, அவன் காப்பாத்தலைனு வருத்தப்படாதே.

அவன், நானூறு ரூபாய்க்கு நிலத்தைக் கிரையம் எழுதிக் கொடுத்திருந்ததை மறைத்து, இருநூறு ரூபா வாங்கியதாகத்தானே அவன் மனைவி சொன்னாள். "பொய் சொல்வதை அவனும் அவன் மனைவியும் கைவிடவில்லை. உடம்பெல்லாம் பொய்" என்று வெகுண்டு, "பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆடியவன், அப்படித்தான் அழிவான்" என்று சொல்லிவிட்டு, நிலத்தை உழுவதற்குச் சென்றான்.

பங்காருசாமி ஆட்கள், பக்கத்து நிலத்தை உழுதுகொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்ட முத்தையா, மிகவும் வேதனை அடைந்தான். அவன் விழிகளில், நீர் கசிந்தது. வெள்ளைச்சாமி வெகு தொலைவில் நடந்து போய்க்கொண்டிருந்தான். முத்தையா, தன் வேலையை பார்த்தான். பகை போக வழியில்லை. தான் உதவ முயன்றால், தன் குடும்பம் கெட்டுப்போக வாய்ப்பு உண்டு என எண்ணினான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வளர்த்ததைச் சொல்லிச் சொல்லியே என் மனம் வேதனை கொள்ளச்செய்யும் அண்ணனையும் அண்ணியையும் உதவி நாடிப் போகமாட்டேன். கூலிவேலை செய்து பிழைத்தாலும் பிழைக்கலாமே தவிர, இனி அவர்களைத் தேடிப் போகக்கூடாது என்று, உறுதியுடன் ஊரை விட்டுச் செல்ல நடைபோட்டான் தம்பி. அண்ணன் தம்பி பாசத்தை நீக்கி, கோபத்தால் பகை வளர்த்தனர். அதன் விளைவை எதிர்காலம்தான் சொல்ல வேண்டும்.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
   அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.
   ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.
   இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.
   ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

   **விடை : இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.**

2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
   அ) பாலை பாடினான் – 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
   ஆ) பாலைப் பாடினான் – 2. தேரினைப் பார்த்தான்
   இ) தேரை பார்த்தான் – 3. பாலினைப் பாடினான்
   ஈ) தேரைப் பார்த்தான் – 4. பாலைத்திணை பாடினான்

   அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

   **விடை : இ) 4, 3, 1, 2**

3. **வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**
   மாணவர்கள் வரிசையில் நின்று, **அறிவியல் கண்**காட்சியைக் கண்டனர்.
   மாணவர்கள் வரிசையில் நின்று, **அறிவியல்கண்** காட்சியைக் கண்டனர்.

4. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**
   எ – கா : முன் : அவன் முன்வந்து கூறினான் / அவன்முன் வந்து கூறினான் (Mar.-20)
   1. **தானே** : கந்தன் **தானே** செய்தான் / கந்தன்**தானே** செய்தான்? (Mar.-22)
   2. **கொண்டு** : எடுத்து **கொண்டு**வந்தான் / எடுத்துக் **கொண்டு** வந்தான்
   3. **விட்டான்** : புறா பறக்க**விட்டான்**. / புறாபறக்க **விட்டான்**

5. **காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**
   சுந்தரி, அத்தை வீட்டிற்குச் சென்றாள்.
   சுந்தரி அத்தை, வீட்டிற்குச் சென்றாள்.

6. **சலசல, வந்துவந்து, கலகல, விம்மிவிம்மி – இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**
   சலசல, கலகல – இவை இரட்டைக்கிளவிகள். இச்சொற்களைப் பிரித்து எழுதக்கூடாது. சேர்த்தே எழுத வேண்டும். பிரித்தால் பொருள் தராது.
   i. மழைநீர் சலசலத்து ஓடியது. (சரி) மழைநீர் சல சலத்து ஓடியது. (பிழை)
   ii. சுந்தரி கலகலவெனச் சிரித்தாள். (சரி) சுந்தரி கல கலவெனச் சிரித்தாள். (பிழை)

7. **திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன்–இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?** (PTA - 1, July-21,23)
   ★ திருவளர் செல்வன் – சரி.
   ★ 'வளர்செல்வன்' என்பது வினைத்தொகை.
   ★ 'வினைத்தொகைச் சொல்லுக்கு இடையில், வல்லினமெய் மிகக்கூடாது' என்பது விதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணக்குறிப்பு – (கம்பராமாயணம்)

**உளது** – இடைக்குறை

**மாதவம்** – உரிச்சொற்றொடர்

**தாழ்கடல்** – வினைத்தொகை

**செற்றவர்** – வினையாலணையும் பெயர்

**நுந்தை** – ‘நும் தந்தை’ என்பதன் மரூஉ

## உறுப்பிலக்கணம்

1. **தந்தனன் – தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**

**தா** – பகுதி, ‘த’ ஆனது விகாரம்

**த்** – சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**அன்** – சாரியை

**அன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. **பொலிந்தான் – பொலி + த் (ந்) + த் + ஆன்**

**பொலி** – பகுதி

**த்** – சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்,

**த்** – இறந்தகால இடைநிலை;

**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சிவிதி

1. **அருங்கானம் – அருமை + கானம்**

“ஈறுபோதல்” – (அரு + கானம்); “இனம்மிகல்” – அருங்கானம்

## கற்பவை கற்றபின்

1. **கூட்டுக் குடும்பம் – தனிக் குடும்பம் குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.**

**கூட்டுக்குடும்பம் :**

நாம் இழந்து வரும் பண்பாடுகளில் மிக முக்கியமானது கூட்டுக் குடும்பமாகும். ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால், ‘இன்றோ கூடிவாழ்ந்தால் கோடி இன்னல்’ என்று நினைக்கிறார்கள். கூட்டுக் குடும்பம் என்பது, இக்காலத்தில் அரிதினும் அரிதாகி விட்டது. பலதரப்பட்ட உறவுகளோடு அவ்வப்போது ஏற்படும் பிணக்குகளைப் பிரச்சினைகளாக்காது, அனைவரின் நலன் கருதி விட்டுக் கொடுத்துப் போகும் தன்மையைக் கூட்டுக் குடும்பங்களில் அன்று கண்டோம்.

பெரிய குடும்பமாக இருந்தாலும் குடும்ப வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் எவ்விதப் பங்கமும் வந்திடாது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டனர். ஒரு குடும்பத்தைத் திறம்படக் கட்டிக்காக்கும் நிர்வாகவியலைக் குடும்பத் தலைவியர் அன்று பல்கலைக்கழகம் போகாமலே கற்றுத் தேர்ந்திருந்தனர். கூட்டுக் குடும்பங்களில் சிறுசிறு பிரச்சினைகள் வரத்தான் செய்யும். இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், பெரிய அளவில் பாதிப்புகள் வராது. வந்து நொடியில் மறையும் பிரச்சினைகளே அவை.

கூட்டுக் குடும்பமாய் வாழ்வதனால், நம் உடைமைக்கும் பொருளுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு உண்டு. வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்தனர். இல்ல நிகழ்ச்சிகளைக் கலந்து ஆலோசித்து நன்கு நடத்தினர். ஒரே சமையல் என்பதால் பொருள்கள் அதிகம் செலவு ஆகவில்லை. ஆபத்துக் காலங்களில் உதவி செய்யவும் பாதுகாக்கவும் ஆட்கள் இருந்தனர். குழந்தைகளுக்குக் கதை சொல்லத் தாத்தா, பாட்டி இருப்பார்கள். கொஞ்சிப் பேசி மகிழ்ந்து விளையாடத் தாய் மாமன். ஒரு குழந்தை, கூட்டுக் குடும்பத்தில்தான் பாசத்துடன் வளரும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தனிக் குடும்பம் :**

இன்றைய இளைய தலைமுறையினர், தனிக் குடும்பத்தையே விரும்புகின்றனர். தனிக்குடும்பத்தில் அன்பு, பாசம், நேசம் எவையும் தெரியாமல் குழந்தைகள் வளரும். தனிக்குடும்பத்தில் வெறுப்பு, தாழ்வு மனப்பான்மை, துவேசம், காழ்ப்புணர்ச்சி, பொறாமை ஆகியவையே புரையோடிக் கிடக்கின்றன. தனிக்குடும்பத்தில் இன்னல்கள் பல உள்ளன. குழந்தைகளைக் காப்பகத்தில் விட்டுச்செல்லும் அவலநிலை, தனிக்குடும்பத்தின் அவலம். வீட்டிற்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லை.

கணவன் இல்லாத நேரத்தில் பெண்ணுக்குப் பல கொடுமைகள் நடக்கும். கொலை, கொள்ளை நடப்பது தனிக்குடும்பத்தில்தான். தனிக்குடும்பத்தில்தான் மணமுறிவுகள் அரங்கேறுகின்றன. பிரச்சினைகளைத் தீர்க்க ஆளில்லாததால், கணவன் மனைவி விரைவில் பிரிந்து விடுகின்றனர். தனிக்குடும்பத்தால் வந்த அவல நிலைதான் முதியோர் இல்லங்கள்.

**2. குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| தாத்தா | – பாட்டி | அப்பா | – அம்மா |
| பெரியப்பா | – பெரியம்மா | சிற்றப்பா | – சிற்றன்னை |
| மாமா | – அத்தை | கணவன் | – மனைவி |
| தம்பி | – தம்பியின் மனைவி | தங்கை | – தங்கையின் கணவர் |
| அண்ணன் | – அண்ணி | பெயரன் | – பெயர்த்தி |
| கொள்ளுப் பெயரன் | – கொள்ளுப் பெயர்த்தி | எள்ளுப் பெயரன் | – எள்ளுப் பெயர்த்தி |
| கொள்ளுத் தாத்தா | – கொள்ளுப் பாட்டி | எள்ளுத் தாத்தா | – எள்ளுப் பாட்டி |

**3. உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.**

கம்பராமாயணத்தில் என் மனம் கவர்ந்த கதாபாத்திரம் இலக்குவன்.

இராமபிரானின் தம்பி இலக்குவன். இலக்குவனுடைய தாயார் சுமித்திரை; மனைவி ஊர்மிளை. கைகேயி, இராமனைப் பதினான்கு ஆண்டுகள் கானகத்திற்கு ஏவியபோது, இலக்குவன் கொதித்து எழுகிறான். கானகத்திற்குச் சீதையோடு இராமபிரான் புறப்பட்டதும், தானும் பிடிவாதமாகச் செல்கிறான் இலக்குவன்.

கானகத்தில் அண்ணனுக்கும் அண்ணிக்கும் பலவாறாகத் தொண்டுகள் செய்கிறான். கானகத்தில் பாதையில் கிடக்கும் முட்களையும் கற்களையும் அப்புறப்படுத்துகிறான். ஆங்காங்கே புற்களால் ஆன குடில்களை அமைத்துத் தருகிறான். அண்ணனும் அண்ணியும் தூங்க, அவன் இரவு முழுவதும் கண்விழித்துக் காவல் புரிகிறான். தொண்டு செய்யவே பிறந்தவன்போலப் பாடுபடுகிறான்.

இராமபிரான் மனைவியோடு கானகம் வந்தான். ஆனால், இலக்குவனோ, மனைவி ஊர்மிளையை அயோத்தியிலேயே விட்டுவிட்டு வந்தான். அண்ணன், அண்ணிக்குத் தொண்டு செய்வதில், மனைவியால் இடையூறு வருமோ என எண்ணி அழைத்து வரவில்லை.

யுத்த காண்டத்தில் இந்திரஜித்தை அழிக்கிறான். இலக்குவன் பெரும் சேவைகளைச் செய்கிறான். இத்தகைய செயல்பாடுகளாலேயே, இலக்குவனை நான் பெரிதும் விரும்புகிறேன்.

**4. 'நமது நிலமே நமது அடையாளம்' – இக்கூற்றை விவாதிக்க.**

உலகில் ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாளம் உண்டு. நமக்கு, நமது நிலமே அடையாளமாகும். எனினும், நமது அடையாளம், நமது மொழியை அடிப்படையாகக் கொண்டது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நம் அனைவருக்குமே, தமிழர் என்பது அடையாளத்தின் அடிப்படை வரையறையாகும். குறிஞ்சியும் முல்லையும் கோடையில் திரிந்துபட்ட நிலையே, 'பாலை' என ஐந்தாவதாகக் கொள்ளப்பட்டது. எனவே, அது நமது நிரந்தர நிலப் பிரிவில்லை.

தமிழ் நாட்டு நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை நான்கும் மக்கள் வாழ்வியலோடு பிணைந்துள்ளன. எனவேதான் உலகிற்கு 'நானிலம்' என்னும் பெயர் ஏற்பட்டது.உலகிலேயே தமிழர்கள்தாம் தங்கள் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாகப் பிரித்து வாழ்ந்தனர். அந்த அக வாழ்க்கையையும் களவியல், கற்பியல் எனப் பிரித்து வாழ்ந்தார்கள். களவியல் வாழ்க்கையையும் அலர், ஆம்பல் என இரண்டாகப் பிரித்தனர். அது தமிழர்கள் வாழும் தமிழ் நிலத்தின் அடையாளம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அழுவதில்கூட ஒரு முறையைத் தமிழர்கள் வகுத்தனர். பிள்ளை இறந்தால் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதனர் பெண்கள். ஏனெனில், வயிற்றில் வளர்ந்ததே பிள்ளை. கணவன் இறந்தால் மார்பில் அடித்துக்கொண்டு அழுதனர். ஏனெனில், கணவனை நெஞ்சில் வைத்துப் போற்றியவர்கள் பெண்கள். பொருளை இழந்துவிட்டால், தலையில் அடித்துக்கொண்டு அழுதனர். ஏனெனில், பொருள் பற்றிய சிந்தனை தோன்றிய இடம் அது. இப்படிப் பெண்கள் அழுவதில்கூடத் தமிழர்கள் தங்களுக்கென ஓர் அடையாளத்தை வகுத்திருந்தனர்.

பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம், பக்தி எனத் தமிழ்நிலம், தனி அடையாளங்களோடு விளங்குகிறது.

5. **வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறவினர்களின் பங்கு முக்கியமானது என்பதைக் குறித்துப் பேசுக.**

கிளை என்றால் உறவு என்பது பொருள். நமது வாழ்க்கை முன்னேற்றத்தில் உறவினர் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

**பெற்றோர் :**

பெற்றோர்கள்தாம் நமது வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடுகின்றனர். நமது கல்வித் தரத்தை உயர்த்தவும், கல்வியில் முன்னேற்றம் அடையவும் பெரிதும் உதவுகின்றனர்.

**தாத்தா – பாட்டி :**

இக்கட்டான கால கட்டங்களில், தமது அனுபவத்தைத் துணையாகக் கொண்டு, நமக்கு உதவுகின்றவர்கள் தாத்தா, பாட்டி. நல்லதைச் செய்யச் சொல்லி நம்மைத் தூண்டுபவர்களும் அவர்களே. நமது வழி தீயது எனில், திருத்தி நல்வழிப் படுத்துகின்றனர்.

**பெரியப்பா – சிற்றப்பா :**

அப்பாவின் உடன் பிறந்தவர்கள், அப்பாவின் அண்ணன், தம்பிகள். வீட்டில் உள்ளோருக்கு வெளியில் ஏற்படும் பல சிக்கல்களைத் தீர்த்து உதவுபவர்கள். அப்பாவின் வலிமையே அவர்கள்தாம்.

**உடன்பிறந்தோர் :**

நமக்குப் பணமுடை, மனக்கவலை ஏற்படும்போது, நம்முடன் இருந்து அவற்றைப் போக்குபவர்கள் உடன்பிறந்தோராவர். ‘தம்பி உடையான் படைக்கு அஞ்சான்’ என்பதற்கு இணங்க, நம் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்கள் நம் உடன் பிறந்தவர்களே.

**தாய்வழி உறவு :**

தாய்வழி உறவினர்கள், நம்மீது செலுத்தும் அன்பு அலாதியானது. நம்மைச் சீராட்டி உறவாடி அன்பு காட்டுபவர்கள். நமது இல்லத்தின் அனைத்து நிகழ்ச்சி களையும் முன்னின்று நடத்துபவர். நாம் பிறரைச் சார்ந்தே வாழ்கிறோம். அதற்கு உதவுபவர்கள் நம் உறவினர்களே. சுற்றத்தார் இல்லையெனில், வாழ்க்கையே இல்லை எனலாம். அளவளாவிப் பேசுகின்ற உறவினர்களைப் பெறாதவனின் வாழ்க்கையானது, கரை இல்லாத குளத்தில் நீர் நிறைந்ததற்குச் சமம் என வள்ளுவர் கூறுவார். கரை இல்லாத குளத்தில் நீர் தங்காது. சுற்றத்தவர் இல்லாதவன் குடும்பம் வறுமையிலும் வாழ்க்கை முறையாலும் சீரழியும்.

6. **தொடர்களைப் பொருள் மயக்கமின்றி எழுத, வழிகாட்டும் உரைநடை நெறிகளைப் பின்பற்றி ஐந்து தொடர்களை எழுதுக.**

★ கோவலன் மதுரைக்குச் சென்றான்.
★ மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டு தோறும் கூட்டம் நடைபெறும்.
★ அவன் வெண்மதியிடம் பேசினான்.
★ சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
★ பறவைகள், நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றன.
★ குதிரையும் யானையும் வேகமாக ஓடின.
★ பறவை, படபடவெனச் சிறகை அடித்தது. குரங்குகள், பழங்களைப் பறித்து உண்டன.

## மொழியை ஆள்வோம்

**தமிழாக்கம் தருக.** (PTA - 6)

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life - and that is the main theme of this chapter - let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

மனித வளர்ச்சியின் நோக்கத்தில் கல்வி என்பது ஒரு முடிவு அன்று; கல்வி என்பது, மனிதனின் அடிப்படை உரிமை. மக்களின் பொருளாதாரம், சமூகம், அரசியல் சார்ந்த பல கதவுகளைத் திறப்பதற்கு உதவும் திறவுகோலாகக் கல்வி அமைகிறது. வேலைவாய்ப்பு, பொருளீட்டல் போன்ற நடைமுறைகளை எளிமையாக்குகிறது. வாழ்க்கையின் பல நல்ல வாய்ப்புகளைப் பொதுவாக ஏற்படுத்திக் கொள்வதற்குக் கல்வியே அடிப்படை எனப் பொருளாதார வல்லுநர்கள் கூறுவர். அதாவது, இந்த அத்தியாயத்தில் இதுவே வலியுறுத்த – மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது, செலவழிக்கப்படும் பொருள், ஈடு செய்யப்படுமளவுக்கு வரவு இல்லை என்றாலும், மக்களுக்குக் கல்வியை வழங்குவது என்பது, உன்னதமான குறிக்கோளாகும்.

**இலக்கிய நயம் பாராட்டுக.** **(PTA - 3)**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி,
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க,
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று,
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

**– நாமக்கல் கவிஞர்.**

**ஆசிரியர் குறிப்பு** : மகாகவி பாரதியாரின் சிறப்பைப் போற்றும் இப்பாடலைப் பாடியவர் நாமக்கல் கவிஞர். இவரது இயற்பெயர் வெ. இராமலிங்கம். இவர் வாழ்ந்தது நாமக்கல். அதனால், 'நாமக்கல் கவிஞர்' எனப்பட்டார். இவர், பாரதியார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். இவர், பாரதியாரின் சிறப்பு குறித்துப் பாடியுள்ளதைக் காண்போம்.

**மையக்கருத்து** : "மக்களின் அறியாமை இருளைப் போக்கி அறிவுக் கண்ணைத் திறந்ததனால், பாரதியார் உறுதியாக ஒரு நல்லாசானும் ஆவார்" என்பது, பாடலின் மையக்கருத்து.

**எதுகை** : அடிகளில் முதல் எழுத்து அளவு ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது அடிஎதுகை.

பெ**ற்**றெடுத்த, ஊ**ற்**றெடுத்தே
க**ற்**றுணர்ந்தே, தெ**ற்**றெனநம் } அடிஎதுகை

**மோனை** : அடிகளின் சீர்களில் முதல் எழுத்து ஒன்றிவருவது சீர்மோனை.

**க**ற்றுணர்ந்தே, **க**ம்பனொடு
**தெ**ற்றெனநம், **தெ**ய்வக்கவி } சீர்மோனை

**அணி** : தமிழ்த்தாய், பாரதி ஓர் ஆசான் ஆகிய உருவகங்கள் அமைந்துள்ளதால், இப்பாடலில், 'உருவக அணி' பயின்று வந்துள்ளது.

**சந்தம்** : பாடலை இசையுடன் பாடும் ஓசை நயத்தைச் சந்தம் என்பர். இப்பாடல், **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில்** அமைந்து பாடி மகிழ்வதற்கு ஏற்ற சந்த நயத்துடன் அமைந்துள்ளது.

**சுவை** : பாடலின் கருத்தைக் கண்முன்னே காட்சிப்படுத்துவது சுவை. இப்பாடலில், '**பெருமிதச்சுவை**' பயின்று வந்துள்ளது.

"பெற்றெடுத்த தமிழ்த்தாயை..." எனத் தொடங்கும் நாமக்கல் கவிஞரின் பாடல் எதுகை, மோனை, அணி, சந்தம், சுவை என்றும் பல நயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.**

| | |
|---|---|
| எங்களுக்கும் ஓர் ஆறுண்டு | காகமோ குருவியோ |
| வெறுமணல் பரப்பாய் விரிந்து கிடக்க | நிழல் ஒதுங்க |
| ஓணான்கள் முட்டையிட | ஆறெங்கும் முள்மரமுண்டு |
| கள்ளிகள் பிழைத்திருக்க | எங்களுக்கும் ஓர் ஆறுண்டு |
| பிள்ளைகள் விளையாட | ஆற்றுக்கோர் ஊருண்டு |
| பன்றிகள் மேய்ந்திருக்க | ஊருக்கோர் சனமுண்டு |
| வானத்தில் மேகமுண்டு | வாழ்வைப்போல் ஒன்றுண்டு. |
| சூரியனில் மழையுண்டு | **– இளங்கோ கிருஷ்ணன்** |

**கிளர்ந்த விழிப்புணர்வு உரை**

வானம் பொய்க்காமல் பெய்யும் காலத்திலும், பெருகும் நீரைத் தேக்கிவைக்க ஏரிகளைக் காணோம். நீர்வளம் இல்லா நதிகளின் மணலை அள்ளி எடுத்து, அண்டை மாநிலங்களுக்கு விற்கிறார்கள். குப்பை கூளங்களையும், தொழிற்சாலைக் கழிவுகளையும் கொட்டும் இடங்களாக, ஏரிகளையும் குளங்களையும் பயன்படுத்துகின்றனர். ஏரிகளைக் கூறுபோட்டும், குளம் குட்டைகளைத் தூர்த்தும் மாடமாளிகைகளைக் கட்டுகிறார்கள். ஆறு, குளம், காடு, மலை என அனைத்தையும் விழுங்கும் பேரசுரர்களாகச் சிலர் மாறி வருகிறார்கள். எங்களுக்கென இருந்த ஆற்றில் பாடலைப் பாடியவர், ‘வெறுமணல் பரப்பாய் விரிந்து கிடந்த’தெனக் கூறுகிறார். இன்று அந்த மணலும் அங்கில்லை. அள்ளி எடுத்த பள்ளத்தில் குப்பை மலையே காணப்படுகிறது. பிள்ளைகள் எங்கும் விளையாடுவதில்லை! பன்றிகளோ, பறவைகளோ காணப்படுவதில்லை. அவை, மனிதரைச் சார்ந்து வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது! அது நல்ல காலம். இன்று தண்ணீருக்காய், மர நிழலுக்காய், மழைக்காய் அலையும் மனித இனத்தை மட்டுமே காணமுடிகிறது.

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினை களையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள். **(PTA-4)**

   **விடை :** என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா**ப்** பிரச்சினை களையும் ஒரு சிங்கத்தை**ப்** போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு, ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

   **விடை :** எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு, ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

3. நம் வாழ்க்கையின் தரம், நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும். **(PTA - 3, Mar.-20)**

   **விடை :** நம் வாழ்க்கையின் தரம், நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த கவனம், அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.

4. மாணவர்கள், பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக்கொள்ள வேண்டும். **(Mar.-24, Sep.-20)**

   **விடை :** மாணவர்கள், பெற்றோர்களை**த்** தம் நண்பர் களாக**ப்** பாவித்து நட்புகொள்ள வேண்டும். தம் இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையான வற்றை தெரிந்துக்கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும். **(Mar.-23)**

   **விடை :** ஆசிரியருக்கு**க்** கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை**த்** தெரிந்துகொண்டு, அறியாமை யினை அகற்றி**ப்** பல நல்லனவற்றை**க்** கற்று**க்** கொடுக்கும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே – 5, 2019**

**திருச்சிராப்பள்ளி**

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள், இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் – பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே – 5ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது.

உறவினர் கூட்டத்தில் தங்கவேல் – பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப்பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

**நிகழ்ச்சி நிரல்**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா**

நாள் : மே – 5, 2019

திருச்சி உறையூர் அன்புநகர்வாழ் தங்கவேல் – பொன்னம்மாள் இணையரின்
மூன்று தலைமுறைச் சந்திப்பு நிகழ்வு.

பணி நிமித்தம் வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர் சந்திப்பு.

இணையரின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள்
என, அனைவரும் வாழ்த்துப் பெறுவர்.

எல்லாரும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

நேரம் : மே – 5, 2019.

காலை 9மணிமுதல் மாலை 3மணிவரை

ஒருங்கிணைப்பாளர் : இணையரின் கொள்ளுப்பேத்தி செல்வி கண்மணி.

## மொழியோடு விளையாடு

**பட்டிமன்றம் தலைப்பு :**

**தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?**

**தலைவர் தொடக்க உரை :**

திரண்டுள்ள எல்லாருக்கும் அன்புகலந்த வணக்கம். நீங்கள் இங்குத் திரண்டிருப்பதில் பெருமகிழ்ச்சி! நீங்கள் எதற்காகத் திரண்டிருக்கிறீர்கள் என்பது, உங்களுக்குத் தெரியும். உறவினர்களும் நண்பர்களும் எவ்வெவ்வாறு தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவார்கள் எனவும், உதவ மாட்டார்கள் எனவும் இங்கு உங்கள்முன் இரு குழுக்கள் தங்கள் தங்கள் வாதங்களை எடுத்து முன்வைப்பார்கள். முகிலனும் எழிலரசியும், ‘தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களே’ என்னும் தலைப்பிலும், திலகவதியும் வேலனும், ‘தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் நண்பர்களே’ என்னும் தலைப்பிலும் வாதங்களையும் முன்வைப்பர். இறுதியாக நீங்கள் வாக்களிக்க வேண்டும். அதன் அடிப்படையில் என் தீர்ப்பை வழங்குவேன். நன்றி! முகிலன், நீங்கள் உங்கள் வாதத்தை முன்வைக்கலாம்.

**முகிலன்** : அவையில் திரண்டிருக்கும் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். உறவு என்பது, வேரும் வேரடி மண்ணும் போன்றது. மண் இல்லாமல் விதை வேரூன்றி விருட்சமாக வளரமுடியாது. நாம் பிறந்ததுமுதல் நம்மைப் பேணி வளர்ப்பன உறவுகளே. எனவே, ‘தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவுகளே’ என நான் கூறி முடிக்கிறேன்.

**திலகவதி** : எல்லாருக்கும் வணக்கம். நான் இந்தப் பட்டிமன்றத்தில் கலந்துகொள்ள, என் நண்பனே உதவி செய்தான். நான் இங்கு வருவதற்குப் புறப்பட்டபோது உறவினர் சிலர், சில வேலைகளைக் கூறி, அவற்றை முடித்துவிட்டுப் போகுமாறு கூறினார்கள். அவற்றைத் தட்ட முடியவில்லை. எல்லா வேலைகளையும் முடித்து விட்டுப் புறப்பட்டபோது, உரிய நேரத்தில் இங்கு வரமுடியாமல் போய்விடுமோ என்று நான் கருதினேன். என் நண்பன் அந்தச் சமயத்தில் ஏதோ வேலையாகச் சென்று கொண்டிருந்தான். அவனிடம் கூறியபோது, தன் வேலையை நிறுத்திவிட்டு என்னை உரிய நேரத்தில் இங்குக் கொண்டுவந்து சேர்த்தான். இந்த என் அனுபவமே, ‘தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் நண்பர்களே’ என்பதற்குச் சிறந்த சாட்சியாகியுள்ளது அல்லவா?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**எழிலரசி** : எல்லாருக்கும் வணக்கம். எனக்குமுன் பேசியவர், தனக்கு நண்பர் உதவியதைக் கூறித் தம் கருத்தை வலியுறுத்தினார். நண்பர் உதவி இருக்கலாம்! ஆனால், இதுபோன்ற நிகழ்வு எப்போதோ ஒரு வேளையில் நிகழ்வது. பிறந்ததுமுதல் இறப்பதுவரை ஒருவர் வாழ்வின் இன்பதுன்பங்கள் அனைத்திலும் பங்குபெறுவோர் உறவினர்களே. வாழ்விலும் தாழ்விலும் கை கொடுத்துக் காப்பது உறவுகளே. இன்பமோ, துன்பமோ காக்கைக் கூட்டம்போல் திரண்டு நின்று உதவுவது சுற்றத்தாரே! சுற்றம் தழுவி வாழாதவனின் வாழ்க்கை, கரை இல்லாத நீர்நிலைபோல் அழியும் என வள்ளுவர் கூறுகிறார். அதனால் தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களே என உறுதிபடக் கூறி என் உரையை முடிக்கிறேன்.

**வேலன்** : இங்குத் திரண்டிருக்கும் எல்லாருக்கும் வணக்கம். சுற்றம் என்பது காக்கைக்கூட்டம்போல் என்றார் எனக்குமுன் பேசியவர். உண்மைதான். சோறுவைத்தால் திரண்டு வரும் காக்கைக் கூட்டத்தில் சண்டை வந்தால் தன் இனம் என்றும் பாராமல் அந்த இனத்தில் ஒன்றை எல்லாம் சேர்ந்து துரத்தித் துரத்திக் கொத்திக் கொன்றுவிடும். இதுவும் சுற்றத்தின் இயல்புபோல் உள்ளது. நட்பு என்பது அப்படியன்று. 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' என்பது வள்ளுவம். அதற்கு அடிப்படை, 'உணர்வு' என்பது ஒன்றே! உணர்வு ஒத்து நண்பரானவர், ஒருவருக்கொருவர் உயிரையும் கொடுப்பர்; உறவையும் வெறுப்பர். கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு, நம் தமிழ்மண் கண்ட நட்பு. பேசினால் விரிவாகும். மகன்களே தன்னை எதிர்த்ததால், சோழன் உயிர்விடத் துணிந்தான். உணர்வால் ஒன்றிய நண்பர் பிசிராந்தையார் உடன் நின்றார். நம் இதிகாசத்தில் பொல்லாத துரியோதனனை நண்பனாக ஏற்ற கர்ணன், போர் நிகழ்ச்சிக்குமுன் பாண்டவர் தன் உடன்பிறந்தார் என அறிந்தும், நண்பனுக்காகப் போரிட்டு உயிர்விட்டான். எனவே, தனி மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் நண்பர்களே எனக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

**வாக்கெடுப்பு நடந்தபின் தலைவர் முடிவுரை** : வாக்குப் பதிவில் நீங்கள் எல்லாரும் பங்கேற்றீர்கள். நீங்கள் உண்மையில் நன்றாகவே சிந்தித்திருக்கிறீர்கள். இரு பக்கத்தவருக்கும் சமமாகவே வாக்களித்து உங்கள் மனக்கருத்தை வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். உறவும் நட்பும் வாழ்வின் இருகண்கள் போன்றவை. இரண்டில் எது சிறந்தது என்று எப்படிக் கூறமுடியும். இருகண்களுமே ஒரு மனிதனுக்கு அவசியமல்லவா? அதுபோல் நீங்கள் இருதரப்பையும் சமமாக ஆதரித்துள்ளீர்கள். உரையாற்றியவர்கள், நல்ல பல கருத்துகளை முன்வைத்தனர். உறவும் நட்பும் தனிமனித வாழ்வுக்கு இன்றியமையாதவையே என்று கூறி, இம்மன்ற நிகழ்வை முடித்துவைக்கிறேன். நன்றி. வணக்கம். வேறு தலைப்புடன் அடுத்து சந்திப்போம்.

## சுழிகுளம்

நவமதி மேவிடவே
வசிகுற ளுடனட
மகுடன ருளடவி
திறனறி வருளுமே!





**விளக்கம்:**

புதிய ஒளிமிக்க அறிவினைப் பெற வேண்டுமென்றால், அறிவுச்சுரங்க மாக விளங்கும் திருக்குறளைக் கற்று அதன்வழி வாழ்க்கையை மேற்கொள்வாய்! மேலும், சிறந்த தலைவர்களின் வாழ்த்துகளையும் பெற்றுத் திறன்மிக்க பல்துறை அறிவினையும் பெறலாம்.

நவ மதி – புதுமையான ஒளிமயமான அறிவு
வசி – உயர்ந்த
மகுடன் – தலைவன்
அடவி – பெருகுதல்

பொதுமதி பலமேவு
துணிதரம் தரமே
மதததவிர முதல
திரவிய நிரம்ப




**விளக்கம்:**

பல துறைகளிலும் பொதுஅறிவை வளர்த்துக்கொள். அது நல்லதொரு துணிச்சலைத் தரும். முனைப்பு தவிர்ந்தால் முதன்மைப் படுத்தப் படுவாய். செல்வமும் நிரம்பும்.


மத(ம்) – முனைப்பு நீங்க
திரவியம் – செல்வம்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



எண்ணங்களை எழுத்தாக்குக.



இந்தப் படம், அறிவியல் முன்னேற்றத்தின் பயன்களை மக்கள் எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதனைக் காட்டுகிறது. ஒருவர் கணினியுடன் பொழுதைக் கழிக்கிறார். ஒருவர் தொலைக்காட்சி நிகழ்வைக் கண்டு, பொழுதைப் போக்குகிறார். இன்னொருவர், கைப்பேசியில் உறவாடிக் கொண்டிருக்கிறார். எல்லாரும் ஒரே குடும்பத்து உறுப்பினர்கள்போல் உள்ளது. ஆனால், உறவுகளுக்குள் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இது, இன்றைய நாகரிகத்தின் உச்சமாக இருக்கிறது.

பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

**எ – கா :** குமரன் வீடு பார்த்தேன். – குமரனை வீட்டில் பார்த்தேன்.

1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும். **(Sep. - 21)**
   மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்.
2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
   போட்டியில் வெற்றி பெற்றதால், கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.
3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
   காலையில் எழுந்து படித்தால், நமக்கு நன்மை ஏற்படும்.
4. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.
   அனைவரையும் அன்புடன் அழைத்தவனுக்குத் துன்பம் தர யாருக்கு மனம் வரும்?
5. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம். **(Sep. - 21)**
   சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்தால், வாழ்வில் உயரலாம்.

## நிற்க அதற்குத் தக

| சூழல் | தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றைப் பட்டியலிடுக | பொறுப்புள்ள மகனாக / மகளாக உங்க5ள் பெற்றோர்க்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள் |
|---|---|---|
| உங்கள் பெற்றோர், வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம், குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும், தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள் வதற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக / மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? | ஆடம்பரப் பொருள்களை வாங்க மாட்டேன்.<br><br>பள்ளிக்குச் செல்ல, வண்டி வாங்கித் தருமாறு வற்புறுத்த மாட்டேன்.<br><br>குளிர்பானம் முதலானவற்றை வாங்கிப் பயன்படுத்தமாட்டேன். | பள்ளி செல்ல, அரசுப் பேருந்தை மட்டுமே பயன்படுத்துவேன்.<br><br>போட்டித் தேர்வுகள் எழுதிப் பரிசு பெற்று உதவுவேன். |

### படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

Lobby – ஓய்வறை
Tips – சிற்றீகை
Checkout – வெளியேறுதல்
Mini meals – சிற்றுணவு

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வாழ்வியல்

# திருக்குறள்

## குறுவினாக்கள்

1. ‘முயல்வாருள் எல்லாம் தலை’ என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவரையே, ‘முயல்வாருள் எல்லாம் தலை’ என, வள்ளுவர் சுட்டுகிறார்.

2. ஞாலத்தின் பெரியது எது? (Mar.-24)

★ உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், ஞாலத்தைவிட (உலகத்தை) மிகப் பெரியதாகும்.

3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை? (Mar.-23)

★ மறக்கக் கூடாதது, ஒருவர் செய்த நன்மையை; மறக்கக் கூடியது, ஒருவர் செய்த தீமையை.

4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாது?

★ செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழி, பிறருடைய கைப்பொருளை விரும்பாது இருத்தலாகும்.

5. சினத்தை ஏன் காக்க வேண்டும்? (May - 22)

★ ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொள்ளச் சினத்தைக் காக்கவேண்டும்.

## சிறுவினாக்கள்

1. “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக. (PTA - 6, Sep.-20,22, May - 22)

**அணி** : இக்குறளில் **நிரல்நிறை அணி** அமைந்துள்ளது.

**அணி இலக்கணம்** : செய்யுளில் முன்னர்க் கூறிய வற்றோடு தொடர்புடையவற்றைப் பின்னர்க் கூறும்போது, அவற்றை நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்ளுமாறு வரிசைபடக் கூறுவது நிரல்நிறை அணியாகும்.

**விளக்கம்** : இக்குறளில், ‘இல்வாழ்க்கைக்கு அன்பும் அறனும் இன்றியமையாதன’ எனக் கூறியவர், அதற்குரிய பண்பையும் பயனையும் அடுத்த அடியில் முறைப்பட வைத்து, ‘**இல்வாழ்க்கைக்கு அன்பு பண்பு**’ என்றும், ‘அறம் பயன்’ என்றும் பொருள் கொள்ளுமாறு வரிசைபடக் கூறியமையால் ‘**நிரல்நிறை அணி**’யாகும்.

2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

★ அறத்தோடு பொருந்திய இல்வாழ்க்கை வாழ்பவர் என்பவர், பல்வேறு முயற்சிகளைச் செய்து, உயர்வு அடைபவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஆவார்.

★ உலகத்தில் வாழும்போது, வாழவேண்டிய அறநெறியோடு பொருந்தி வாழ்கின்றவர், வானுலகத்தில் உள்ள தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படுவர்” என்று, வள்ளுவர் கூறியுள்ளார். அதனால், இல்வாழ்க்கை சிறப்படைய, அறநெறியோடு வாழவேண்டியதன் முக்கியத்துவம் புலப்படும்.

3. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? – குறள்வழி விளக்குக. (PTA - 5, Sep.-22)

★ வானகம், ஞாலம், கடல் ஆகியவற்றை எல்லாம்விட, நன்றி உயர்ந்தது என, வள்ளுவர் கூறுகிறார்.

★ செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், உரிய காலத்தில் செய்யப்பட்டதாயின், அது உலகத்தைவிட மிகப்பெரியதாகும்.

★ பயனை எதிர்பார்க்காமல், ஒருவர் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும். ஆதலால், நன்றி என்பது, மிகப் பெரியது என்பது புலப்படும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.** (PTA-1,4, Sep.-20)

★ சினத்தாலேயே தீமையான விளைவுகள் ஏற்படுவதனால், எவரிடத்திலும் சினம் கொள்வதை மறந்துவிட வேண்டும். சினத்தைவிடவும் அழிக்கின்ற பகை என்பது வேறு இல்லை.

★ தன்னைத்தானே ஒருவன் பாதுகாத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் காக்காவிட்டால், கொண்ட சினமே அவனை அழித்துவிடும்.

★ சினம் தன்னைச் சேர்ந்தவனை அழிப்பதோடு, அவனுக்குப் பாதுகாப்பாக விளங்கும் சுற்றமாகிய தெப்பத்தையும் சுட்டு அழிக்கும் என, வள்ளுவர் கூறியுள்ளார்.

**5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் (PTA- 5)

ஏமப் புணையைச் சுடும்.

★ செய்யுளில் கூற எடுத்துக்கொண்ட பொருள்களில் ஒன்றைமட்டும் உருவகம் செய்து, பிறிதொன்றை உருவகம் செய்யாமல் கூறுவது, ஏகதேச உருவக அணியாகும்.

★ இக்குறளில் சுற்றத்தவரைப் புணையாக (தெப்பமாக) உருவகம் செய்தவர், சினத்தை நெருப்பாக உருவகம் செய்யாமையால், ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.

## நெடுவினாக்கள்

**1. 'செய்ந்நன்றியறிதலே அறம்' என்பதை வாயுறைவாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.** (PTA-2,6, Mar.-20)

'செய்ந்நன்றி' மறத்தலாகாது என்பதைச் சான்றோர் வலியுறுத்துவர். இங்கு வள்ளுவர் கூறும் வாயுறை வாழ்த்தின் கருத்துவழி, 'செய்ந்நன்றி அறிதலே அறம்' என்பது குறித்துக் காண்போம்.

**கடலும் மண்ணும் விண்ணும் ஈடு ஆகாது :**

உதவி ஏதும் தான் செய்யாதிருந்தும், கைம்மாறு கருதாமல் தனக்கு ஒருவர் செய்த உதவிக்கு, **மண்ணுலகையும் விண்ணுலகையும்** கொடுத்தாலும் ஈடாகாது.

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், அது செய்யப்பட்ட காலத்தை நோக்க, **உலகத்தின் அளவைவிடவும்** மிகப் பெரியதாகும்.

இதைச் 'செய்வதனால் என்ன பயன் கிடைக்கும்?' என்று ஆராயாமல், நமக்கு ஒருவர் செய்த உதவியினை ஆராய்ந்து பார்த்தால், அதனால் விளையும் நன்மை, **கடலைவிடவும்** பெரிதாகும்.

ஒருவர் செய்த உதவி தினையளவினதாக இருந்த போதிலும், அதனால் விளையும் பயனைத் தெரிந்தவர்கள், அதனைப் **பனை அளவினதாகக்** கருதிப் போற்றுவர்.

**மறந்து விடு, மறக்காதே :**

நமக்கு ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று. ஆனால், அவர் செய்த **தீமையை** அப்பொழுதே **மறந்துவிடுவது** நல்லதாகும்.

**செய்ந்நன்றி அழித்தலின் கொடுமை :**

எந்த அறத்தை அழித்தவருக்கும் அதன் தீய விளைவில் இருந்து தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு. ஆனால், **செய்த நன்றியை** மறந்தவனுக்கு, அதன் விளைவிலிருந்து **தப்பிப் பிழைக்கும்** வாய்ப்பே கிடையாது. இவையே, திருக்குறள், 'செய்ந்நன்றி அறிதலே அறம்' என்பது குறித்துக் கூறும் செய்திகளாகும்.

**2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால்வழி விரித்துரைக்க.**

**வெகுளாமைக்கு இடம் :** (PTA-1, Sep.-22)

'வெகுளி' என்னும் சினம் தீமைகள் அனைத்திற்கும் அடிப்படையாகும். சினம் கொள்ளல் கூடாது என முப்பால் வலியுறுத்துகிறது.

தன் சினம் **செல்லத்தக்க** மெலியவரிடத்தில் அதனைச் செலுத்தாமல் காப்பவரே, உண்மையில் சினத்தைக் காப்பவராவார். தன் கோபம் **செல்லத்தகாத** வலியவரிடத்தில் அதனைக் காத்தால்தான் என்ன, காக்காவிட்டால்தான் என்ன?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சினத்தினால் (வெகுளியால்) தீய விளைவுகள் ஏற்படும் என்பதை அறிந்து, எவரிடத்திலும் சினம் கொள்ளுதலைத் தவிர்க்க வேண்டும். சினம் என்பது, **முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும்** கொன்று அழிக்கிறது. இதனால், சினத்தைவிட, அழிவுக்கு வேறு பகை தேவை இல்லை.

**சினம் கொண்டவருக்கு ஏற்படும் தீங்கு :**

ஒருவன், தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், **சினம் வெளிப்படாமல்** அடக்கிக் காத்தல் வேண்டும். அப்படிக் காத்துக்கொள்ளவில்லை என்றால், அச்சினமே அவனை அழித்துவிடும்.

சினம் (வெகுளி) என்பது, தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பைப் போன்றது. அந்தச் சினம் என்னும் நெருப்பானது, பாதுகாப்பாக அமையும் **சுற்றத்தவராகிய தெப்பத்தையும்** எரித்துவிடும்.

முப்பால் கூறும் இக்கருத்துகளால் '**சினத்தைக் காத்தலே வாழ்வை மேன்மைப்படுத்த வழி**' என்பதனைத் தெளியலாம்.

## கற்பவை கற்றபின்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.** (July-23)



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**விடை : இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.**

**2. கடலின் பெரியது ______.** (July-23)

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

**விடை : ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

அ) இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந்து உறும்.

**விடை : இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந்து உறும்.**

**4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக.**

உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை.

**விடை : இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.**

**5. இலக்கணக்குறிப்புத் தருக.**

அன்**பும்** அற**மும்**, பண்**பும்** பய**னும்**, வையக**மும்** வானக**மும்**, நகை**யும்** உவகை**யும்** – எண்ணும்மைகள்
நன்கலம் – பண்புத்தொகை
மறத்தல், பிறத்தல், வெஃகுதல் – தொழிற்பெயர்கள்
உலகு – ஆகுபெயர்.

**6. பொருள் கூறுக.**

| | | | |
|---|---|---|---|
| வெகுளி | – சினம் | புணை | – தெப்பம் |
| ஏமம் | – பாதுகாப்பு | திரு | – செல்வம் |
| வையகம் | – மண்ணுலகம் | வானகம் | – விண்ணுலகம் |
| ஞாலம் | – உலகம் | துணை | – அளவு |
| வெஃகி | – விரும்பி | அஃகாமை | – குறையாமை |
| நகை | – முகமலர்ச்சி | உவகை | – மனமகிழ்ச்சி |
| கொள்ளி | – நெருப்பு | தெள்ளியர் | – தெளிந்த அறிவுடையார் |

**7. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?**

அ) செய்யாமல் செய்த உதவி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி
ஈ) காலத்தினால் செய்த நன்றி

**விடை : அ) செய்யாமல் செய்த உதவி**

**8. பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக.**

(சினத்தைவிட) வேறு பகையும் உண்டோ?

**9. செல்லிடத்து – புணர்ச்சிவிதி கூறுக.**

செல்லிடத்து – செல் + இடத்து
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்னும் விதிப்படி – (செல்ல் + இடத்து)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி – 'செல்லிடத்து' எனப் புணர்ந்தது.

**10. பொருத்துக.** (PTA - 3,5)

| | |
|---|---|
| அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | – 1. சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) பயன்தூக்கார் செய்த உதவி | – 2. ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) சினம் | – 3. தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) காலத்தினாற் செய்த நன்றி | – 4. நன்மை கடலின் பெரிது |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

**விடை : ஆ) 3, 4, 1, 2**

# PTA, அரசுத்தேர்வு, மற்றும் கூடுதல் வினா – விடைகள்

## இயல் - 1 கவிதைப்பேழை

## இளந்தமிழே!

### பலவுள் தெரிக

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் (PTA - 4)

அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி

இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

**விடை : ஆ) ஒரு கிராமத்து நதி**

2. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்? (PTA - 6)

அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி

**விடை : ஆ) சீறி**

3. "தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர் : (May-22)

அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பாரதியார்

இ) சுரதா ஈ) பாரதிதாசன்

**விடை : அ) சிற்பி பாலசுப்பிரமணியம்**

4. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் (Mar. - 20)

அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம்

**விடை : ஆ) நிலவுப் பூ**

5. 'முத்தமிழே' என்பது, ______ எனப் பிரியும்.

அ) முத் + தமிழே ஆ) மு + தமிழே

இ) முத்து + தமிழே ஈ) மூன்று + தமிழ் + ஏ

**விடை : ஈ) மூன்று + தமிழ் + ஏ**

6. 'குளிர்பொதிகை' என்பதன் இலக்கணக் குறிப்பு ______

அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை

**விடை : இ) வினைத்தொகை**

### குறுவினா

1. **"முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலு விருந்தாய்"–யார், யாரைப் பற்றிக் கூறியது ?** (PTA - 5)

➤ சிற்பி பாலசுப்பிரமணியம், தமிழ்த் தாயைப் பற்றிக் கூறியது.

2. **முத்தமிழ் எங்கு, எப்போது கொலு இருந்தது?**

➤ முன்னொரு காலத்தில், பாண்டியர் அமைத்த சங்கத்தில் முத்தமிழ், கொலு இருந்தது.

3. **முத்தமிழ் ஈன்று தந்த வள்ளல்கள் யாவர்?**

➤ அதியன், பாரி, காரி, பேகன், ஆய், ஓரி, நள்ளி ஆகியோர், முத்தமிழ் ஈன்று தந்த வள்ளல்கள் ஆவர்.

4. **தமிழ்க்குயில் எதற்குக் கூவி வரவேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**

➤ தமிழகத்தின் பழமையான நலன்களை எல்லாம் புதுப்பிப்பதற்குத் தமிழ்க்குயில் கூவி வரவேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. **தென்தமிழ் எவ்வாறு சீறிவர வேண்டுமெனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**
   - அடைத்துள்ள கூண்டை உடைத்துக்கொண்டு, சிங்கத்தைப்போலத் தென்தமிழ் சீறிவர வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

6. **தமிழ்மொழியின் சிறப்புகளாக நீ அறிந்தன யாவை?**
   - நம் அடையாளமாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும், தோன்றிய காலம்முதல் மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும், உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது தமிழ்மொழி. எத்திசையிலும் புகழோடு இலங்கும் தமிழ்மொழியின் பெருமையைப் புகழ்ந்து பாடாத மரபுக் கவிஞர்கள் இலர்.

7. **தமிழ்க் கவிஞர்களின் அவா யாது?**
   - பல புதிய உள்ளடக்கங்களால் தமிழ் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு, பழஞ்சிறப்பையும் தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்பது, தமிழ்க் கவிஞர்களின் அவா ஆகும்.

8. **தொழிலாளர் எவ்வாறு உழைக்கின்றனர்?**
   - கதிரவன் மலைமுகட்டில் தலைசாய்க்கும் அந்திவேளையில் வானில் பரவும் செவ்வொளிபோல் தம் கைகள் சிவக்குமாறும், உடல் நோக உழைக்கும் தோள்களின்மேல் வியர்வைவெள்ளம் முத்து முத்தாக வீற்றிருக்குமாறும் தொழிலாளர் கடுமையாக உழைக்கின்றனர்.

## சிறுவினாக்கள்

1. **'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?** (Mar.-23)
   - மூதறிவாளர்களின் நெஞ்சிலே பூத்த தமிழ்மொழி, மொழிகளுள் மூத்த மொழியாகும். பாண்டியரின் சங்கத்தில் அத்தமிழ் வீற்றிருந்தது என்றால், தமிழின் தொன்மை புரியும்.
   - முற்காலத்தில் முதற் இடைச்சங்கங்கள் கடல்கோளால் அழிந்தபோதிலும், மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டியரின் அவை முன்னிலையில் தமிழ் அன்னை கொலுவாக வீற்றிருந்தாள். பாண்டிய நாடெங்கும் தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளம் பெற்றுத் தழைத்தோங்கியது.
   - தமிழன்னை ஈன்றுதந்த பாரி முதலான கடையெழு வள்ளல்கள் தமிழ்ப் புலவர்களை பெரிதும் ஆதரித்தனர். இத்தகைய பழமை நலமிக்க தமிழ்மொழி காலத்திற்கேற்ப புதிய புதிய இலக்கியங்களைப் பெற்று மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டும், பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொண்டும் மிளிர வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

2. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் குறித்துக் குறிப்பெழுதுக.** (PTA - 1)
   - பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், கவிஞர் எனப் **பன்முக ஆற்றல்** கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம். பாரதியார் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்தவர்.
   - ஒரு கிராமத்து நதி, நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி முதலிய **பல கவிதை நூல்கள்** இயற்றியவர். இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும் என்னும் **உரைநடை நூல்களையும்** எழுதியவர்.
   - மலையாளக் கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர். மொழிப்பெயர்ப்புக்காக ஒரு முறையும், **'ஒரு கிராமத்து நதி'** என்னும் கவிதை நூலுக்காக ஒருமுறையும் என, **சாகித்திய அகாதமி விருதை** இருமுறை பெற்றவர். இவர் நூல்கள், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

3. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழைக் கூவி அழைப்பது ஏன்?**
   - எதையும் வியந்து பாடும் ஆற்றல் தமிழுக்கு உண்டு.
   - எதையும் பாட வேண்டும் என்கிற கவிதை வெறிக்கு உணவாக அமுதத்தமிழே அமையும்.
   - அந்தத் தமிழே பாண்டியரின் சங்கத்தில் கொலு வீற்றிருந்தது.
   - தமிழகத்தில் பாரி முதலான வள்ளல்கள் எழுவரை ஈன்றளித்தது.
   - இவ்வகையில், தமிழ்ச் சமூகத்தில் பழமைநலத்தைப் புதுக்குவதற்கும், தமிழர்களை மெய்சிலிர்க்க வைத்துப் புத்தெழுச்சி பெறவைப்பதற்கும் தமிழ்க்குயில் கூவி வரவேண்டும்.
   - அதற்குத் தடையாகச் சிறையிடப்பட்டிருந்தால், சிங்கம்போல் சிலிர்த்தெழுந்து கூண்டை உடைத்துக் கொண்டு வெளிவர வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கருதியதால், தமிழைக் கூவி அழைக்கிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### இலக்கணக்குறிப்பு

**முத்தமிழ், இளந்தமிழ்** – பண்புத்தொகைகள்
**வியர்வைவெள்ளம், தமிழ்க்குயில்** – உருவகங்கள்
**வியந்து, ஈன்று, கூவி, உடைத்து** – வினையெச்சங்கள்

### உறுப்பிலக்கணம்

1. **தந்தாய் – தா (த) + த் (ந்) + த் + ஆய்**
   **தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்
   **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
   **த்** – இறந்தகால இடைநிலை
   **ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

### புணர்ச்சி விதி

1. **வீற்றிருக்கும் – வீற்று + இருக்கும்**
   'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி – வீற்ற் + இருக்கும்
   'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – 'வீற்றிருக்கும்' எனப் புணர்ந்தது.
2. **எம்மருமை – எம் + அருமை**
   'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி – எம்ம் + அருமை
   'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – 'எம்மருமை' எனப் புணர்ந்தது.

## உரைநடை உலகம்

# தமிழ்மொழியின் நடை அழகியல்

### பலவுள் தெரிக

1. கீழுள்ள கூற்றில் சரியானதைக் கண்டறிக.
   1) சங்க இலக்கியம், அகம், புறம் சார்ந்த செய்திகளைப் பாடற்பொருளாகக் கொண்டுள்ளது.
   2) ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் கொள்கின்றன.
   அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டுமில்லை
   **விடை : இ) இரண்டும் சரி**
2. கவிதையின் இயங்காற்றல் என்பது ______.
   அ) ஒலி ஆ) சொல் இ) பொருள் ஈ) நடை
   **விடை : ஈ) நடை**
3. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ______ ஓர் உள்ளமைப்பாகக் கருதுகிறது.
   அ) அகத்தியம் ஆ) புறநானூறு இ) தொல்காப்பியம் ஈ) நற்றிணை
   **விடை : இ) தொல்காப்பியம்**
4. அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது ______.
   அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு இ) அற இலக்கியம் ஈ) சங்க இலக்கியம்
   **விடை : ஈ) சங்க இலக்கியம்**
5. கலைப் படைப்பை, அழகியல் நெறியை ______ சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது.
   அ) இலக்கிய மரபாக ஆ) வரலாற்றுச் செய்தியாக
   இ) பண்பாட்டின் இலச்சினையாக ஈ) அறவியல் கருத்துகளாக
   **விடை : இ) பண்பாட்டின் இலச்சினையாக**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. 'நடை' என்பது கவிதையின் ______.
அ) மொழியாற்றல் ஆ) கவிதையாற்றல் இ) இயங்காற்றல் ஈ) சொல்லாற்றல்
**விடை : இ) இயங்காற்றல்**

7. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.
1. சொல்வளம், ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது.
2. தொடரியல் பிறழ்வு, சங்கப் பாடல்களில் காணப்படவில்லை.
மேற்கூறியவற்றில் தவறானதைக் கண்டறிக.
அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) இரண்டும் ஈ) இரண்டுமில்லை
**விடை : ஆ) 2 மட்டும்**

8. 'அழகின் சிரிப்பு' என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்
**விடை : ஆ) பாரதிதாசன்**

9. "அந்நில மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப"
இந்நூற்பா இடம்பெறும் இலக்கண நூல் ______.
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) யாப்பருங்கலம் ஈ) யாப்பருங்கலக்காரிகை
**விடை : ஆ) தொல்காப்பியம்**

10. ஒருபொருள் குறித்துவரும் பலசொல் பலபொருள் குறித்து வரும் ஒருசொல் என்பது ______ எனப்படும்.
அ) ஒலிக்கோலம் ஆ) சொல்வளம்
இ) சொற்றொடர்நிலை ஈ) சொற்பொருள் தொடர்நிலை
**விடை : ஆ) சொல்வளம்**

11. 'தமிழ் அழகியல்' என்ற நூலின் ஆசிரியர் ______.
அ) மா. இராசமாணிக்கம் ஆ) வா.வே. சுப்பிரமணியம்
இ) தி. சு. நடராசன் ஈ) சிற்பி. பாலசுப்பிரமணியம்
**விடை : இ) தி. சு. நடராசன்**

12. சங்கப் பாடல்களில் அமைந்த முக்கியமான ஒரு பண்பு ______.
அ) இசைநயம் ஆ) சொல்நயம் இ) ஒலிக்கோலம் ஈ) ஓசைநயம்
**விடை : இ) ஒலிக்கோலம்**

13. **கூற்று 1** : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
**கூற்று 2** : சொல்வளம் என்பது, தனிச் சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்; ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.
அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி
இ) இரு கூற்றுகளும் தவறு ஈ) இரு கூற்றுகளும் சரி
**விடை : ஈ) இரு கூற்றுகளும் சரி**

14. **கூற்று** : மொழியில் காணப்படும் சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது.
**காரணம்** : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
அ) கூற்று, காரணம் தவறு ஆ) கூற்றும் காரணமும் சரி
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி
**விடை : ஆ) கூற்றும் காரணமும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



15. ‘நீர்படு பசுங்கலம்’ என்பது ______.
அ) தொகாமொழி ஆ) பெயரெச்சம் இ) வினைத்தொடர் ஈ) தொகைமொழி
விடை : ஈ) தொகைமொழி

## குறுவினாக்கள்

1. **மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை? (May-22, Mar.-23)**
   - மொழியின் இயல்பு வழக்குகளை உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை கலை இயல் வழக்குகளாக மாற்றுகின்றன.
2. **தொல்காப்பியம் எவற்றைத் தன் உள்ளமைப்பாகக் கொண்டுள்ளது?**
   - எழுத்து, சொல், செய்யுள் ஆகிய மூன்றையும், தொல்காப்பியம் தன் உள்ளமைப்பாகக் கொண்டுள்ளது.
3. **இலக்கிய உருவாக்கத்தில் எவை இடம்பெறவேண்டும்?**
   - இலக்கியத்தின் பயன்களாகிய அறம், பொருள், இன்பமோ, வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளோ இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும்.
4. **சங்க இலக்கியம் எவற்றைப் பாடற் பொருள்களாக வடிவமைத்துள்ளது?**
   - சங்க இலக்கியம், அகத்திணை சார்ந்த செய்தி களையும், புறத்திணைசார்ந்த செய்திகளையும் பாடற் பொருள்களாக வடிவமைத்துள்ளது.
5. **மொழிசார்ந்த பொருள் எவ்வாறு மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது?**
   - மொழியில் உள்ள சொற்கள், பேசப்படும் செய்திகள், மொழியின் தனித்துவமான பண்புகள் ஆகியவை, அழகியல் சார்ந்த சாதனமாக மாறும்போது, மொழி சார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.
6. **இலக்கியம் எவற்றை அழகியல் சாதனமாக மாற்றுகிறது?**
   - பேசுபவன், கேட்பவன் ஆகியோரின் தனிச்சூழல்கள் மட்டுமல்லாது, வரலாறு முழுக்க மொழியானது மனித நாக்குகளின் ஈரம் பட்டுக் கிடக்கிறது. இலக்கியம், அவற்றைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்றுகிறது.
7. **கவிதையின் உந்து சக்திகளாக அமைவன எவை?**
   - மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்திகளாக அமைகின்றன.
8. **கவிதையின் இயங்காற்றல் என்பது எது?**
   - கவிதைக்காக, இலக்கியத்துக்காக மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அந்த அழகியல் நடையே, கவிதையின் இயங்காற்றல் எனப்படும்.
9. **பாடலின் ஒலிப்பின்னல் (Sound texture) என்பது என்ன?**
   - சமிக்ஞையிலிருந்தும் ஒலியிலிருந்தும் இசையிலிருந்தும் மொழி தொடங்குகிறது.
   - மொழி சார்ந்த கவிதையும், இசையோடும் இசைக் கருவியோடும்தான் பிறக்கிறது.
   - ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் கொள்கின்றன.
   - இதனையே பாடலின் ஒலிப்பின்னல் (Sound texture) என்கிறோம்.
10. **தி. சு. நடராசன் இயற்றிய நூல்களைக் கூறுக.**
    - கவிதையெனும் மொழி, திறனாய்வுக் கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் ஆகியவை, தி. சு. நடராசன் இயற்றிய நூல்களாகும்.
11. **செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் யாது?**
    - சமூக – பண்பாட்டு மரபிற்கு ஏற்பக் கலைப்படைப்பை, அழகியல் நெறியை, பண்பாட்டின் சிறப்புகளை யெல்லாம் அறவியல் கருத்துகளோடு இணைத்துக் கூறுவதே, செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறமாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**12. சொல்வளத்தின் சிறப்புகளைக் கூறுக.**

- ஒருபொருள் குறித்த பல சொல்லாய், பல பொருள் குறித்த ஒரு சொல்லாய் வருவதும், பல சூழல்களுக்கும் துறைகளுக்கும் புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும், உணர்வும் தெளிவும் கொண்டதாய் வருதலும் சொல்வளத்தின் சிறப்புகளாகும்.

**13. சங்கப் பாடல்களின் முக்கியமான பண்பு எது?**

- சங்கப்பாடல்களில் உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் சங்கப்பாடல்களில் காணப்படும் முக்கியமான ஒலிக்கோலப் பண்பாகும்.

**14. தொகைமொழி என்பது யாது?**

- தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு; அது வாக்கிய அமைப்பில், ஒரு சொல் போலவே நடைபெறும்.

## சிறுவினாக்கள்

**1. கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.** (Mar - 20)

- இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும். இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை எனப்படுகிறது.
- தொல்காப்பியமானது **புணர்தல், பிரிதல்** முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் **'லட்சியப்' பொருள்களோடு** இரண்டற இணைத்துவிடுகிறது. இது செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறமாகும். சமூக–பண்பாட்டு மரபிற்கு ஏற்பவே, கலைப்படைப்பை, அழகியல் நெறியை பண்பாட்டின் இலச்சினையாகச் சித்திரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்து முன்மொழிந்திருக்கிறது. தமிழ் **அழகியலின் நெடும்பரப்பு** இது.

**2. கவிதை மறுதலைத் தொடர் – சான்று தந்து விளக்குக.** (PTA - 6, Sep. - 20)

- பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்குகளில் தொடரமைப்பு என்பது "எழுவாய் + செயப்படு பொருள், அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை" என்று வருவது மரபு. ஆனால், **சங்கப் பாடல்கள் பலவற்றில் இம்முறை பிறழ்ந்து வருகிறது.** இதுவே, கவிதை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

**சான்று :** "இடுக வொன்றோ, சுடுக வொன்றோ
படுவழிப் படுக இப்புகழ் வெய்யோன் தலையே" (புறநானூறு. 239)

- என்னும் பாடலின் இறுதி அடி பிறழ்வோடு அமைந்துள்ளது. இதற்கு முந்தைய ஒவ்வோர் அடியும் **மணந்தான், சூடினான், பேசினான், வழங்கினான் என நேர்பட,** தன்னிறைவோடு முடிகின்றன. இறுதியில் **"அவன் மறைந்தான்! புதைத்தால் புதை; சுட்டால் சுடு"** என இயல்பு நிலை பிறழ்ந்து வருகிறது. இதுவே, கவிதை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

**3. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை" – இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.(May-22)**

"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம்.145)

- இவ்வடிகளில், உயிர் ஒலிகளுள், குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகைக்குப்பின், மேலும் **நீண்டு ஒலிப்பதும்** செய்யுளுக்குத் தனிச்சுவையைச் சேர்க்கிறது.
- அவ்வகையில், **சில ஒலிகளும், சில சொற்களும்,** திரும்பவரப் பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப் பெறும் **சொல் விளையாட்டுகளும்** கவனத்திற்குரியன. ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் நிகழ்த்தப் பெற்றுள்ளமையையும் தெளியலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. **‘தொடரியல் போக்குகள்’ குறித்து விளக்குக.**

➤ ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர்நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன. எனினும் தொடரியல் வடிவம், **பாத்தி கட்டி வரப்பு உயர்த்தும்** பணிகளைச் செய்கிறது. பேசுவோருடைய மொழித்திறன் என்பது கேட்போர், வாசிப்போருடைய உளப்பாடாக (Purport) மறித்தாக்கம்பெற (transform) வேண்டும். பரிமாறப் படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்ப, தொடர்கள் நேர் நடந்தும் ஏறியிறங்கியும், திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.

➤ உரைநடையும் பேச்சும் உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடர் அமைப்பு என்பது, **“எழுவாய் + செயப்படுபொருள் பயனிலை”** என்று வருவதே மரபு. இந்த அமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. இதனைக் **கவிதை மறுதலைத்தொடர்** (Poetic inversion) என்பர்.

## கவிதைப்பேழை

# தன்னேர் இலாத தமிழ்

### பலவுள் தெரிக

1. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ______. (May - 22)
அ) முத்து வீரியம் ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) வீர சோழியம்
**விடை : இ) தண்டியலங்காரம்**

2. வெங்கதிர்–இலக்கணக் குறிப்பைக் கண்டறிக. (Sep.- 21)
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை : அ) பண்புத்தொகை**

3. தண்டியலங்காரம், ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது. (Mar.-23)
அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம் இ) காவியதர்சம் ஈ) முத்துவீரியம்
**விடை : இ) காவியதர்சம்**

4. அணி இலக்கணத்தையும் கூறும் நூல்களுள் ஒன்று ______.
அ) தண்டியலங்காரம் ஆ) வீரசோழியம் இ) குவலயானந்தம் ஈ) மாறனலங்காரம்
**விடை : ஆ) வீரசோழியம்**

5. தண்டியலங்காரம், ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி இயற்றப்பட்டது.
அ) முத்துவீரியம் ஆ) குவலயானந்தம் இ) காவியதர்சம் ஈ) மாறனலங்காரம்
**விடை : இ) காவியதர்சம்**

6. ‘தன்னேர் இலாத தமிழ்’ என்னும் பாடலில் அமைந்துள்ளது ______.
அ) பொது வேற்றுமை அணி ആ) சொல் வேற்றுமை அணி
இ) பொருள் வேற்றுமை அணி ஈ) இடவேற்றுமை அணி
**விடை : இ) பொருள் வேற்றுமை அணி**

7. “ஏங்கொலிநீர்’ என்னும் தொடரின் சரியான பிரிப்பு ______.
அ) ஏங் + கொலி + நீர் ஆ) ஏங்கொலி + நீர்
இ) ஏங்கு + ஒலிநீர் ஈ) ஏங்கு + ஒலி + நீர்
**விடை : ஈ) ஏங்கு + ஒலி + நீர்**

### குறுவினாக்கள்

1. **தமிழ் மொழியானது எத்தகைய வலிமை வாய்ந்தது?** (PTA - 3)

➤ தமிழ் மொழியானது பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழுப்பட்டு, உலகின் புற இருளைப் போக்கும் ஆற்றல் கொண்ட கதிரவனுக்கு ஒப்பாகவும், அதற்கு மேலாக மக்களின் அக இருள் போக்கும் வலிமை வாய்ந்ததும் ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை? (PTA - 6)

➤ தமிழ்மொழி, தொன்மையான இலக்கியங்களைப் பெற்று உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது.

➤ பொதிகை மலையில் தோன்றிச் சான்றோரால் தொழுது வணங்கப்பட்டு, உலக மக்களின் அறியாமை என்னும் அகஇருளைப் போக்கி, ஒப்புமை இல்லாததாகத் திகழ்வது.

3. பொருள் வேற்றுமை அணியாவது யாது?

➤ இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் அவற்றிடையே உள்ள வேற்றுமையைக் கூறுவது, பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

4. அணி இலக்கணத்தைமட்டும் கூறும் இலக்கண நூல்கள் எவை?

➤ தண்டி அலங்காரம், மாறன் அலங்காரம், குவலயானந்தம் என்பன அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களாகும்.

5. அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் எவை?

➤ தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியன அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்களாகும்.

6. தண்டியலங்காரத்தின் முப்பெரும் பிரிவுகள் யாவை?

➤ பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்பன தண்டியலங்காரத்தின் முப்பெரும்பிரிவுகளாகும்.

## சிறுவினாக்கள்

1. 'தன்னேர் இலாத தமிழ்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (May - 22)

**இடம்** : தண்டியலங்காரம் என்னும் நூலின் 'உரை மேற்கோளாக இடம்பெற்ற பாடலில்' இத்தொடர் இடம் பெற்றுள்ளது

**பொருள்** : "தனக்கு நிகரில்லாத தமிழ்" என்பது இத்தொடரின் பொருள்.

**விளக்கம்** : பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அக இருளாகிய அறியாமையைப் போக்குவதோடு உலக இருளைப் போக்கும் கதிரவனுக்கும் ஒப்புவமை இல்லாதது தமிழ் எனக் கூறப்பட்டுள்ளது.

2. பொருள் வேற்றுமை அணியை விளக்குக. (Sep. - 22)

**இலக்கணம்** : செய்யுளில் இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர், அவற்றை ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறுவது, 'பொருள் வேற்றுமை அணி'யாகும்.

**எ – கா** : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ் !

**விளக்கம்** : இப்பாடலில் தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன்சார்ந்த ஒற்றுமை முதலில் கூறப்பட்டது. பின்னர், அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது எனும் தன்மை, வேறுபடுத்திக் காட்டப்பட்டது. எனவே, இப்பாடலில் 'வேற்றுமை அணி'யின் ஒரு பிரிவான 'பொருள் வேற்றுமை அணி' அமைந்துள்ளது.

3. 'தண்டியலங்காரம்' குறித்து நீ அறிவன யாவை?

➤ அணியிலக்கணம் குறித்துச் சிறப்பாக விவரித்துரைக்கும் நூல்களுள் ஒன்று தண்டியலங்காரம்.

➤ '**தண்டி**' என்பார் பாடிய '**அலங்காரம்**' என்பது பொருள்.

➤ '**காவியதர்சம்**' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.

➤ இதனை இயற்றியவர், கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'தண்டி' ஆவர்.

➤ பொதுவியல், **பொருளணியியல், சொல்லணியியல்** என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

➤ உரையாசிரியர் பலர், இந்நூலைச் சான்றுகளாக எடுத்தாண்டுள்ளமை சிறப்பாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### இலக்கணக்குறிப்பு

**வந்து, தொழ, விளங்கி** – வினையெச்சங்கள்

**ஒலிநீர்** – வினைத்தொகை

**இருளகற்றும்** – இரண்டாம் வேற்றுமைத்தொகை

### உறுப்பிலக்கணம்

1. **இலாத – இலா + (ஆ) + த் + அ**

**இலா** – பகுதி;

(ஆ) – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது;

**த்** – இறந்தகால இடைநிலை;

**அ** – பெயரெச்ச விகுதி.

### புணர்ச்சி விதி

1. **(i) ஓங்கலிடை – ஓங்கல் + இடை**

**(ii) இருளகற்றும் – இருள் + அகற்றும்**

**(iii) கதிரொன்று – கதிர் + ஒன்று**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – (i) ஓங்கலிடை (ii) இருளகற்றும் (iii) கதிரொன்று எனப் புணர்ந்தது

### துணைப்பாடம்

## தம்பி நெல்லையப்பருக்கு

### பலவுள் தெரிக

1. பெண்ணைத் தாழ்வு செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர் (PTA - 1)

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

**விடை : ஆ) பாரதியார்**

2. பாரதியார் எங்கிருந்து பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்? (PTA - 3)

அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை

**விடை : அ) புதுச்சேரி**

3. தம்பி நெல்லையப்பருக்கு – கட்டுரையின் ஆசிரியர் (Sep.-22)

அ) பாரதியார் ஆ) ஐராவதம் மகாதேவன்

இ) பூமணி ஈ) உத்தமசோழன்

**விடை : அ) பாரதியார்**

4. தமிழ்நாட்டின் வீதிதோறும் ______ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அ) ஆங்கில ஆ) உருது இ) தமிழ் ஈ) தெலுங்கு

**விடை : இ) தமிழ்**

5. எட்டயபுர மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி எழுதியவர் ______.

அ) சு. நெல்லையப்பர் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்

இ) வெங்கடேசுவரர் ஈ) பாரதி

**விடை : ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. பாரதி, ______ என்பவருக்குக் கடிதம் எழுதினார்.
அ) வேங்கடேசுர எட்டப்பர் ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) பரலி சு. நெல்லையப்பர் ஈ) வீரேசலிங்கம் பந்துலு
**விடை : இ) பரலி சு. நெல்லையப்பர்**

7. வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ______.
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) பரலி சு. நெல்லையப்பர்
**விடை : ஈ) பரலி சு. நெல்லையப்பர்**

8. பாரதி எழுதிய கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர் ______.
அ) சி. வை. தாமோதரம் பிள்ளை ஆ) பரலி சு. நெல்லையப்பர்
இ) பாரதியார் ஈ) அயோத்தி தாசர்
**விடை : ஆ) பரலி சு. நெல்லையப்பர்**

9. பாரதியார் நடத்திய இதழ்கள் _______.
அ) சூரியோதயம், கர்மயோகி ஆ) கர்மயோகி, நவ இந்தியா
இ) சக்கரவர்த்தினி, யங் இந்தியா ஈ) சூரியோதயம், தி இந்து
**விடை : அ) சூரியோதயம், கர்மயோகி**

10. பாரதி பதினைந்து வயதில் யாருக்குக் கடிதம் எழுதினார்?
அ) தந்தைக்கு ஆ) உறவினர்க்கு
இ) எட்டயபுர அரசருக்கு ஈ) நண்பருக்கு
**விடை : இ) எட்டயபுர அரசருக்கு**

11. பாரதி எழுதிய இறுதிக் கடிதம் ______.
அ) குத்தி கேசவருக்கு ஆ) வ. உ. சி.க்கு
இ) பாரதிதாசனுக்கு ஈ) மனைவிக்கு
**விடை : அ) குத்தி கேசவருக்கு**

12. வம்சமணி தீபிகை நூலின் மூல வடிவம் மறுபதிப்பாக ______ என்பவரால் 2008இல் வெளியிடப்பட்டது.
அ) மகாகவி பாரதியார் ஆ) பரலி சு. நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசை மணி
**விடை : ஈ) இளசை மணி**

13. பாரதியார், நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர் ______.
அ) இளசை மணி ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) கி. ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்
**விடை : ஆ) ரா. அ. பத்மநாபன்**

14. கருத்து 1 : ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.
கருத்து 2 : பரலி சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப் பாட்டைப் பதிப்பித்தவர்.
அ) இரண்டு கருத்துகளும் தவறு ஆ) இரண்டு கருத்துகளும் சரி
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
**விடை : ஆ) இரண்டு கருத்துகளும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினா

**1. ‘கடிதம் – ஓர் இலக்கிய வகை’ – நிறுவுக.**

உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில், அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. கடித வடிவில், சொல்ல வேண்டியவற்றை வெளியிடும்முறை உண்டு. பாரதியார், தாம் நேரில் பேசுவது போன்றே, கடிதத்தில் எழுத்து வடிவில் பேசிவிடுகிறார். இது, ஒரு வகையான புது உத்தியாகும்.

**கடித இலக்கியம் :**

கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள். தனிப்பட எழுதும் கடிதங்களிலும் ஈர்க்கும் மொழியில் அழுத்தமான எண்ணங்களை, ஆழமான கருத்துகளைத் தந்து, அவற்றைப் பொதுவெளிக்குக் கொண்டு வருகிறார்கள்.

**கடிதத் தாக்கங்கள் :**

பண்டித நேரு, தம் மகளுக்கு எழுதிய கடிதங்கள், அறிஞர் அண்ணா தம் தம்பிமார்க்கு எழுதிய கடிதங்கள், அரசியலிலும் சமூகத்திலும் தாக்கங்களை ஏற்படுத்திப் புதுப்பாதைக்கு வழிவகுத்தன.

**கற்பனையும் கருத்துச் செறிவும் :**

நேரில் கண்டு அன்பைத் தெரிவிப்பதும், பாராட்டுவதும் மகிழ்ச்சியைத் தரவல்லன என்றாலும், கடிதம் மூலமாக உணர்த்துவது, வெளிப்படுத்துவது என்பது, உள்மனத்தில் பதிய வைப்பது; உணர்ச்சி வயப்படுத்துவது. கற்பனைநயம், சொல்நயம், கருத்துநயம் அமைந்த கடிதங்கள், இலக்கிய வகையில் இடம் பெற்றுள்ளன. கண்டு பேசுவதிலும், காணாமல் கடிதத்தின்மூலம் கருத்துகளையும், கற்பனைகளையும், வருணனைகளையும் நிரம்பத் தரமுடியும் என்பதுவே உண்மை.

## இலக்கணம்

# தமிழாய் எழுதுவோம்

## பலவுள் தெரிக

1. உயிரெழுத்துகள் ______ வகைப்படும். **(PTA - 2)**

அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு

**விடை : ஈ) இரண்டு**

2. பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க. **(Sep. - 20)**

அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?

ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?

இ) உங்களை யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

**விடை : ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?**

3. எவ்வகை வாக்கியம் என்பதைக் கண்டறிக. **(PTA - 3)**

அ) ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்?

**விடை : வினா வாக்கியம்.**

ஆ) நீச்சல் தன்னம்பிக்கையைத் தரும்.

**விடை : செய்தி வாக்கியம்.**

4. தமிழில் உயிர்மெய் எழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள் : **(Mar. - 23)**

அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116

**விடை : இ) 126**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### குறுவினாக்கள்

1. **தமிழை எழுதும்போது ஏற்படும் பிழைகள் யாவை?** (PTA-1)
   - எழுத்துப் பிழை, சொற்பொருள் பிழை, சொற்றொடர்ப் பிழை, பொதுவான பிழை என்பவை, தமிழை எழுதும்போது ஏற்படும் பிழை வகைகளாகும்.
2. **தமிழைப் பிழை இல்லாமல் எழுத என்ன செய்ய வேண்டும்?**
   - தமிழ்மொழியின் இயல்பை உணர்ந்தும், **இலக்கண விதிகளை** அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும். **முயற்சியும் பயிற்சியும்** பிழை இல்லாமல் எழுதத் துணைபுரியும்.
3. **எழுதும்போது பிழை மலியக் காரணம் யாது?**
   - பேச்சுத் தமிழை எல்லா இடங்களிலும் எழுத முடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மைக் காரணமாகும். **குறில், நெடில்** வேறுபாடுகளை அறியாது இருப்பதும், எழுத்துகள் சொற்களில் வரும் முறை குறித்துத் தெளிவு பெறாமல் இருப்பதும் **பிழைகள் மலியக்** காரணமாகும்.
4. **எழுதும்போது எப்படிப் பிழைகளைத் தவிர்க்கலாம்?**
   - சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிறபோது, பிழைகளைத் தவிர்க்க முடியும்.

   **எ – கா :** அறம் – அரம் /குறை – குரை / வளம் – வலம் / களம் – கலம் / போனாள் – போனால்/ கள் – கல் / மழை – மலை / அழை – அலை.

### சிறுவினாக்கள்

1. **தமிழ் எழுதுவதற்கு எழுத்துத் தெளிவு தேவை என்பதைச் சான்று தந்து விவரி.**
   - ந, ண, ன / ற, ர / ல, ள, ழ – எழுத்து ஒலிகளில் தெளிவு இருக்க வேண்டும்.
   - உயிர்மெய் எழுத்துகளில் வரும் மேல்விலங்கு (மி), கீழ்விலங்கு (பூ), கொம்புகள் (கெ, கே), துணைக்கால் (கா, கொ, கோ) போன்றவற்றை எழுதும் முறையிலும் கவனம் செலுத்த வேண்டும்.
   - சொல்லை எழுதும்போது பிழை ஏற்பட்டால், பொருள் பிழை ஏற்படும். '**அவன் கறிச்சோறு உண்டான்**' என்பதை '**அவன் கரிச்சோறு உண்டான்**' என எழுதினால் பொருள் வேறுபடும்.
2. **தமிழில் எழுதும்போது எழுத்துப் பிழைகளைத் தவிர்க்க அறிய வேண்டுவன யாவை?**
   - தமிழ்ச்சொல்லின் முதல் எழுத்து மெய்யெழுத்தில் தொடங்காது.
   - வல்லின மெய்யில், எந்தத் தமிழ்ச்சொல்லும் முடியாது.
   - சொற்களின் இடையில், ட், ற் மெய்களை அடுத்து, இன்னொரு மெய் வராது.
   - ஆய்த எழுத்து, சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
   - ண, ன சொல்லின் தொடக்கத்தில் வராது. தனிக்குறிலை அடுத்து ர், ழ் மெய்கள் வரா.

## இயல் – 2

### உரைநடை உலகம்

# பெருமழைக்காலம்

### பலவுள் தெரிக

1. வங்க அரபிக் கடல்களில் உருவாகும் புயலுக்குப் பெயர் வைக்கும் சர்வதேச வானிலை ஆய்வு நிறுவன கூட்டமைப்பு நாடுகள் : (Mar.-20)

   அ) பத்து ஆ) எட்டு இ) ஐந்து ஈ) பதினெட்டு

   **விடை : ஆ) எட்டு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது ______. (PTA-5)
அ) புயல் அபாயக் குறியீடுகள் ஆ) உத்தரவுக் குறியீடுகள்
இ) எச்சரிக்கைக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள்
**விடை : அ) புயல் அபாயக் குறியீடுகள்**

3. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் நிறுவப்பட்ட நாள் (PTA-4)
அ) 2005 ஏப்ரல் 22 ஆ) 2010 டிசம்பர் 22
இ) 2005 டிசம்பர் 23 ஈ) 2010 ஜூன் 5
**விடை : இ) 2005 டிசம்பர் 23**

4. உழவுக்கும் உயிரினங்கள் வாழ்வதற்கும் அடிப்படையானது ______.
அ) காற்று ஆ) தண்ணீர் இ) மழை ஈ) பருவம்
**விடை : இ) மழை**

5. இன்றைய சூழலில் ______ பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாத தேவையாகும்.
அ) இயற்கை போற்றுதல் ஆ) வெள்ளப்பெருக்கு
இ) இயற்கை நிகழ்வுகள் ஈ) சூழலியல்
**விடை : இ) இயற்கை நிகழ்வுகள்**

6. பெருமழைக் காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கக் காரணம் ______.
அ) உலகு மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டிருப்பதால்
ஆ) நெகிழி மற்றும் திடக்கழிவுகளைக் கொட்டி நீர்வழிகளை அடைத்து விடுவதால்
இ) நீர்நிலைகளை அழித்துக் குடியிருப்புகளை தொழிற்சாலைகளை உருவாக்குவதால்
ஈ) புவி வெப்பமயமாதலால்
**விடை : இ) நீர்நிலைகளை அழித்துக் குடியிருப்புகளை தொழிற்சாலைகளை உருவாக்குவதால்**

7. புயல், பெருமழை, பெருவெள்ளம் ஏற்படக் காரணம் ______.
அ) பெருநகர அமைப்பு இல்லை ஆ) சரியான திட்டமிடல் இன்மை
இ) இயற்கை, சமநிலை இழத்தல் ஈ) மேலாண்மைத் துறையின் கவனக்குறைவு
**விடை : இ) இயற்கை, சமநிலை இழத்தல்**

8. உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்வதற்கான உணவுச்சங்கிலியே, ______ எனப்படும்.
அ) புவி வெப்பமாதல் ஆ) பசுமைப் புரட்சி
இ) இயற்கைச் சமநிலை ஈ) காலநிலை மாறுதல்
**விடை : இ) இயற்கைச் சமநிலை**

9. ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரண் ______.
அ) வெள்ளச் சமவெளி ஆ) விண்வெளி
இ) சூறாவளி ஈ) வெளி வளிமண்டலம்
**விடை : அ) வெள்ளச் சமவெளி**

10. வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையன ______.
அ) குடியிருப்புகளும் தொழிற்சாலைகளும்
ஆ) நெகிழிக் குப்பைகளும் திடக்கழிவுகளும்
இ) உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளச்சமவெளிகளும்
ஈ) திட்டமிட்ட கட்டமைப்புகளும் விழிப்புணர்வு பிரச்சாரமும்
**விடை : இ) உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளச் சமவெளிகளும்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. **கூற்று 1** : மழைக்காலங்களில் பெறும் நீரைச் சேமித்து வைக்கும் நீர் மேலாண்மை அமைப்புகள் தமிழ்நாட்டில் இருந்தன.

**கூற்று 2** : இன்று ஆற்றில் பாறைகள் தெரியும் அளவிற்கு மணல் அள்ளியதன் விளைவாகத் தான் வெள்ளச் சமவெளிகள் அழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி

இ) இரு கூற்றும் தவறு ஈ) இரு கூற்றும் சரி

**விடை : ஈ) இரு கூற்றும் சரி**

12. பேரிடர்க் காலங்களில் தற்காத்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் முக்கியமானது ______.

அ) வரைபடம் உருவாக்கல் ஆ) சமூகக் காடு வளர்த்தல்

இ) சதுப்பு நிலக் காடுகளை உருவாக்கல்

ஈ) பாதுகாப்பான புதிய கட்டுமானங்களை அமைத்தல்

**விடை : ஈ) பாதுகாப்பான புதிய கட்டுமானங்களை அமைத்தல்**

13. முட்டைகளைச் சார்ந்திருக்கும் எறும்புகள், பறக்கும் பருந்து, சூரியனைச் சுற்றி ஒளிவட்டம், வெப்பமும் ஈரப்பதமுமான வானிலை, தூசுப்பனிமூட்டம் ஆகியன மழையைக் கணிக்கும் அறிகுறிகள் என அறிவித்தது ______.

அ) சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிட்டது

ஆ) தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்டது

இ) ஐக்கிய நாடுகள் அவை காலநிலை மாற்றப் பணித்திட்டப் பேரவை வெளியிட்டது

ஈ) குஜராத்தில் உள்ள ஆனந்த் வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் குறிப்பு

**விடை : ஈ) குஜராத்தில் உள்ள ஆனந்த் வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் குறிப்பு**

14. ஆற்றுச் சமவெளியில் அடுக்குப் படிவமாக உருவாவது ______.

அ) மணல், சேறு ஆ) மணல், செங்கல் இ) மணல், சிமெண்ட் ஈ) மணல், மரங்கள்

**விடை : அ) மணல், சேறு**

## குறுவினாக்கள்

1. **பசுமைக்குடில் வாயுக்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?** (PTA-3)

➤ கார்பன் – டை – ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றைப் பசுமைக்குடில் வாயுக்கள் என அழைக்கின்றோம்.

2. **தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் எப்போது அமைக்கப்பட்டது?** (PTA - 5)

➤ 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் நாள், தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் நடுவண் அரசால் அமைக்கப்பட்டது.

3. **தமிழ்ச் சமூகம் மழையை எவ்வாறு கொண்டாடியது?**

➤ தமிழ்ச் சமூகம், '**மாமழை போற்றுதும்**' என்றும், '**நீரின்றி அமையாது உலகு**' என்றும், '**மாரியல்லது காரியமில்லை**' என்றும் மழையைக் கொண்டாடியது.

4. **அளவிற்கு அதிகமாக நம் நாட்டில் மழைப்பொழிவு பதிவாகியுள்ள இடங்களைக் கூறுக.**

➤ நம் நாட்டில் மும்பையில் ஒரே நாளில் 994 மி.மீ. மழையளவும், ஜம்மு காஷ்மீரில் 'லே' பகுதியில் 30 நிமிடத்தில் 150முதல் 250மி.மீ. வரை மழையளவும் பதிவாகியுள்ளன.

5. **இயற்கையில் மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கக் காரணம் என்ன?**

➤ இயற்கையானது **சமநிலையை இழக்கும்போது**, இயல்பான பருவ நிலைகளில் மாற்றம் ஏற்படுகிறது.

➤ அதனால் புயல், பெருமழை, பெருவெள்ளம், புவி வெப்ப மாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கின்றன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6. புவி வெப்பம் அடைவது எதனால் நேர்கிறது?**

- மனிதனின் பேராசை காரணமாக, இயற்கை வளங்கள் கடுமையாகச் சேதம் அடைகின்றன.
- "புவி வெப்பமடைதல், மனிதரது செயல்பாடுகளால் நேர்கிறது.
- இதனை, இங்கிலாந்து அறிவியலாளர் டேவிட்கிங், "**புவி வெப்பமடைதல், மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே**" எனக் கூறுவதனால் தெளியலாம்.

**7. புவி வெப்பம் அடைவதைத் தடுக்க உதவும் மாற்று ஆற்றல்களைக் கூறுக.**

- சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்ற கார்பன் அற்ற ஆற்றல்களைப் பயன்படுத்துவது, புவி வெப்பம் அடைவதைத் தடுக்க உதவும் மாற்று ஆற்றல்களாகக் கூறுகின்றனர்.

**8. மழைக் காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுவது ஏன்?**

- இயற்கைச் சமநிலையைச் சீர் குலைத்ததன் விளைவான பருவநிலை மாற்றம், திட்டமிடலின்றி உருவாக்கப்படும் பெருநகர அமைப்பு, நீர் மேலாண்மையில் கவனம் செலுத்தாமை ஆகியன மழைக்காலங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

**9. ஆற்றங்கரைப் படிவு எவற்றைத் தடுத்துப் பாதுகாக்கும்?**

- ஆற்றங்கரையில் உருவாகும் படிவு நீர் மாசடைவதையும் மண் அரிப்பையும் தடுக்கும்; வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்து விடாமல் பாதுகாக்கும்.

**10. அடுக்குப் படிவம் எவ்வாறு உருவாகிறது? அதன் பயன் யாது?**

- ஆற்று வெள்ளம் அடித்து வரும் பொருள்களால் ஆற்றங் கரைப் படிவு ஏற்படுகிறது. ஆற்றுச் சமவெளியில் அடர்த்தியான **மணலாலும் சேற்றினாலும்** அடுக்குப் படிவம் உருவாகிறது. வெள்ளப் பெருக்குக் காலங்களில் **இப்படிவு நீரை உறிஞ்சுவதால்** வெள்ளப் பெருக்கு குறையும்.

**11. தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைவது ஏன்? அதன் விளைவு யாது?**

- தமிழகத்தில் குறிப்பிட்ட **அளவையும் கடந்து மணலை** எடுத்துப் பயன்படுத்தியதன் விளைவாகவும் **நீர்நிலைகள் பராமரிப்பு** இன்மையாலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் **வேளாண்மை** முதல் பல **தொழில்கள்** பாதிப்பு அடைய, இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

**12. பேரிடர் மேலாண்மை ஆணையம் எவ்வாறு செயல்பட வழிவகை செய்துள்ளது?**

- பேரிடர் மேலாண்மை ஆணையமானது **மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி** என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர்க் காலங்களில் செயலாற்ற வழிவகை செய்துள்ளது.

**13. மாணவர்களிடையே எவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்?**

- புயல், மழை, பெருவெள்ளம், இயற்கைச் சமநிலை, புவி வெப்பமயமாதல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், நீர்நிலைகளைப் பெருக்கிப் பாதுகாத்தல், பேரிடர்க் காலங்களில் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**14. இயற்கைச் சமநிலை குலைந்து பேரிடர் ஏற்படக் காரணம் என்ன?**

- நாளும் பெருகிவரும் நம் தேவைகளுக்காக இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை குலைந்து, பேரிடர் ஏற்படுகிறது.

**15. ஆற்றங்கரைப் படிவு என்றால் என்ன?**

- வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில் ஆற்றில் அடித்து வரப்படும் பொருள்கள், ஆற்றின் ஓரங்களில் படிந்துவிடும். இது, ஆற்றங்கரைப் படிவு எனப்படும்.

**16. நீர்நிலைகளில் உள்ள மணலை எடுப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

- நீர்நிலைகளில் உள்ள மணலை அளவு கடந்து எடுப்பதால், நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது.
- ஏரி குளங்கள், காணாமல் போகின்றன. விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன.
- வேளாண்மைத் தொழில், இழப்புகளைச் சந்திக்க நேரிடுகிறது.
- நீரோட்டத் தடையால், ஏராளமான எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிறுவினாக்கள்

**1. புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த, உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன? (PTA - 4)**

- காா்பன் இல்லாத மாற்று ஆற்றலாக விளங்கக்கூடிய சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்றவற்றை, உலக நாடுகள் பயன்படுத்த முயன்று வருகின்றன.
- 193 உலக நாடுகளை உள்ளடக்கிய ஐக்கிய நாடுகள் அவை, 1992இல் ரியோ டி ஜெனிரோவில் கூடி, காலநிலை மாற்றம்பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியது.
- இந்த அவை ஆண்டுதோறும் கூடிப் பசுமைக் குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்தத் திட்டங்களை வகுத்து வருகிறது. பசுமைக்குடில் வாயுக்களை அதிகம் வெளியேற்றும் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், இந்தியா முதலான நாடுகளைக் கட்டுப்பாடு விதிக்க வலியுறுத்துகிறது.
- புவி வெப்பமயமாதலால் விளையும் கேடுகள், நம் எதிர்கால வாழ்வையும் எதிர்வரும் தலைமுறை மக்களையும் அச்சுறுத்தும் எனக் கூறி எச்சரித்து வருகிறது.

**2. இயற்கைச் சமநிலை என்றால் என்ன? விளக்குக.**

- மழைப்பொழிவால் மண்பரப்பில் நீா் நிறைந்து, ததும்புகிறது. செடி கொடிகள் வளா்கின்றன. காய் கனிகளும் நெல் தானிய வகைகளும் விளைகின்றன. ஆடு, மாடு முதலான விலங்கினங்கள் செடி கொடிகளை மேய்ந்து உயிா் வாழ்கின்றன.
- புலி, சிங்கம் போன்ற ஊன் உண்ணிகள், தாவரங்களை உண்டு வாழும் ஆடு, மாடு, மான் போன்றவற்றை உண்டு வாழ்கின்றன. தாவர உண்ணிகள், தாவர வகைகளையும், ஊன் உண்ணிகள் தாவர உண்ணிகளையும் பிடித்து உண்கின்றன.
- மனிதன் காய்கறிகளையும், சில விலங்குகளையும் உண்கிறான். இதுவே உயிரினங்களின் உணவுச்சங்கிலி முறையாக உள்ளது. இந்த இயற்கைச் சுழற்சியே, இயற்கைச் சமநிலை எனப்படும்.

**3. ஆற்றங்கரைகளில் உருவாகும் அடுக்குப் படிவத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

- ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது அடித்து வரப்படும் பொருள்கள், ஆற்றின் ஓரங்களில் படியும். இப்படிப் படிகின்ற பொருள்களால் ஆற்றுச் சமவெளியில் அடா்த்தியான மணலாலும் சேற்றாலும் அடுக்குப் படிவம் உருவாகும்.
- ஆற்றங்கரைகளில் உருவாகும் அடுக்குப் படிவம், வெள்ளப்பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும்; நீா் மாசடைவதைத் தடுக்கும். மண் அரிப்பைத் தடுக்கும்; வறட்சிக் காலங்களில் நிலத்தடி நீா் மட்டம் குறைந்துவிடாமல் பாதுகாக்கும்.

**4. வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணம் என்ன?**

- வாய்க்கால்கள், வெள்ளத்தைத் தாங்கும் குளம் குட்டைகள் முதலானவற்றை அழித்துக் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் முதலானவற்றை உருவாக்கிக் கொள்கிறோம். அதனால் ஏற்படும் வெள்ளப்பெருக்கில் உயிா், உடைமை இழப்புகள் ஏற்படுகின்றன.
- நீா்வழிப் பாதைகளில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புகளும், திடக்கழிவுகளைக் கொட்டுதலும் நீா்வழிப் பாதைகளைக் குறுக்கி வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமாகிறது.
- ஆற்றில் மணல் அள்ளியதன் விளைவாகச் சமவெளிகள் அழிந்தன. 40 ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடா்களில் 85 விழுக்காடு, வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டவையே.

**5. பேரிடா்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நீவிா் கூறும் திட்டங்கள் யாவை?**

- பேரிடா்க் காலங்களில் தாங்கக் கூடியவையாகப் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும். **நீா்வழிப் பாதைகளைக் கட்டும்** தெளிவான வரைபடங்களை உருவாக்கி அவற்றைத் தொடா்ந்து பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். காடுகள் வளா்ப்புத் திட்டத்தைச் சமூக இயக்கமாக வளா்த்தெடுக்க வேண்டும். **கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை** வளா்க்க வேண்டும்.
- பேரிடா் வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை முன்னரே சிந்தித்துத் திட்டமிட்டு எதிா்கொள்ள ஆயத்தமாக வேண்டும். பதற்றமடைதலைத் தவிா்க்க வேண்டும். **வதந்திகளை நம்பவோ பரப்பவோ கூடாது.** புயல், மழை தொடா்பாக வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் தகவல்களின் அடிப்படையில் மக்கள் செயல்படப் பழக வேண்டும்.
- காவல்துறை, தீயணைப்புத் துறை, அரசு, தன்னாா்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் மீட்பு, பாதுகாப்பு ஆகிய பணிகளில் ஈடுபட வேண்டும். **பாதுகாப்பு மையங்களையும் மருத்துவக் குழுக்களையும்** அண்மையில் வைத்திருக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### கவிதைப்பேழை

# பிறகொரு நாள் கோடை

### பலவுள் தெரிக

1. பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது _______.
அ) வெளிச்சம் ஆ) நீர்நிலை இ) மரங்கள் ஈ) நகரம்

**விடை : ஈ) நகரம்**

2. உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைப்பவை ______.
அ) மரங்கள் ஆ) நீர்ச்சுவடுகள் இ) நரம்புகள் ஈ) பறவைகள்

**விடை : ஈ) பறவைகள்**

3. இதயத்தில் தடமாய் வழிகின்றது ______.
அ) பகலும் இரவும் சந்திக்கும் அந்தி ஆ) கடலும் கரையும் சேரும் ஓரம்
இ) மழையூடே வெயில்வரும் வேளை ஈ) வீட்டுச் சுவரில் இறங்கிய மழை

**விடை : ஈ) வீட்டுச் சுவரில் இறங்கிய மழை**

4. 'பிறகொரு நாள் கோடை' இடம்பெற்ற நூல் ______.
அ) நீர்வெளி ஆ) மழைக்குப் பிறகும் மழை
இ) அய்யப்ப மாதவன் கவிதைகள் ஈ) நானென்பது வேறொருவன்

**விடை : இ) அய்யப்ப மாதவன் கவிதைகள்**

### குறுவினாக்கள்

1. **சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்? (May -22)**
   - மழைக்கால முடிவில் சூரியன் திடீரெனப் பயணப்பட, வெளிச்சம் பெற்ற நகர் வைரமாகப் பளபளத்தது; எஞ்சிய நீர்த்துளிகளை மரங்கள் உதிர்த்தன; உற்சாகம் பீறிட பறவைகள் சங்கீதம் இசைக்கின்றன. இவற்றால் சூரிய ஒளிபட்ட நகரம் மழைக்கனவிலிருந்து விடுபட்டு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்.

2. **பார்க்கத் திகட்டாத அழகுகள் எவை?**
   - பகலும் இரவும் சந்திக்கும் அந்தி, கரையும் கடலும் சேரும் ஓரம், மழையினூடே வெயில் வரும்வேளை ஆகிய அழகுகள், பார்க்கத் திகட்டாதவை.

3. **நெஞ்சில் தடமாய் வழிபவை எவை?**
   - நீரில் நனைந்து வெயிலில் காயும் நகரத்தின் பளபளப்பு, மரக்கிளைகள் சொட்டும் நீர்த்துளிகள், வெயில் கண்டு மகிழ்ந்த பறவைகளின் இசைப்பு ஆகியன, நெஞ்சில் தடமாய் வழிகின்றன.

4. **மகிழும் நெஞ்சம் எதற்கு ஏங்குகிறது?**
   - வெயிலைக் கண்டு மகிழ்ந்தாலும், நெஞ்சம் மீண்டும் மழைக்காக ஏங்கத்தான் செய்கிறது.

### சிறுவினாக்கள்

1. **பார்க்கத் தெவிட்டாத அழகாய் நெஞ்சில் தடமாய் வழிவன எவை? கவிஞர் பாடியது என்ன?**
   - பகலும் இரவும் சந்திக்கும் அந்தி, கரையும் கடலும் சேரும் ஓரம், மழையினூடே வெயில் வரும் வேளை ஆகியவற்றில் வெளிப்படும் அழகுகள், பார்க்கத் தெவிட்டாதவையாகும்.
   - மழைநீரில் நனைந்த நகரம், வெயில் காயும்போது தோன்றும் பளபளப்பும், மரக்கிளைகள் சொட்டும் நீர்த்துளிகளும், வெயிலைக் கண்டு மகிழ்ந்த பறவைகள் பாடும் இசையும், நெஞ்சில் தடமாய் வழியும் எனக் கவிஞர் பாடியுள்ளார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. கவிஞர் அய்யப்ப மாதவன் குறித்து நீ அறிவன யாவை?**

- கவிஞர் அய்யப்ப மாதவன், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்தவர்.
- திரைத்துறை சார்ந்த இதழியல் துறையில் இயங்கி வருபவர். 'இன்று' என்னும் கவிதைக் குறும்படத்தை வெளியிட்டுள்ளார்.
- மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி, அய்யப்ப மாதவன் கவிதைகள் என்னும் நூல்களை எழுதியுள்ளார்.
- பாடப்பகுதியான 'பிறகொரு நாள் கோடை' என்னும் பாடல், 'அய்யப்ப மாதவன் கவிதைகள்' தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

**3. "வெயில் கண்ட பறவைகள் உற்சாகம் மீறிட சங்கீதம் இசைக்கின்றன" – இடம் சுட்டி விளக்குக.**

**இடம்** : 'பிறகொரு நாள் கோடை' கவிதையில் கவிஞர் அய்யப்ப மாதவன், மழைக்காலத்தில் சூரியனின் திடீர்ப் பயண விரைவினை வருணிக்கும்போது, இவ்வடிகள் இடம் பெறுகின்றன.

**விளக்கம்** : சூரியன் திடீரெனத் தோன்றியதும் மழை பெய்த சுவடு மறைகிறது. நீர்த்துளிகள் மறைய, மேகம் நீங்கி வானம் வெளிச்சம் பெறுகிறது. அதனால் வெயிலைக் கண்டு மகிழ்ந்த பறவைகள், தங்கள் துயர் நீங்கியதுபோல உற்சாகம் பீறிட ஒலி எழுப்புகின்றன. இதனைக் கவிஞர், 'பறவைகள் உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன' என்கிறார்.

**4. "பிறகொரு நாள் கோடை வந்துவிட்டது" – இடம் சுட்டி விளக்குக.**

**இடம்** : கவிஞர் அய்யப்ப மாதவனின் 'பிறகொரு நாள் கோடை' வந்தது என்னும் கவிதையில், மழைக்கால முடிவை விளக்கும் பகுதியின் இறுதியில், இடம்பெற்றுள்ளது இந்த அடி.

**விளக்கம்** : மழைக்கால முடிவில் சூரியன் திடீரெனப் பயணப்பட, வெளிச்சம் பெற்ற நகர் வைரமாகப் பளபளத்தது; மரங்கள், எஞ்சிய நீர்த்துளிகளை உதிர்த்தன; பறவைகள், உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன. மழைக்கனவிலிருந்து ஊர் விடுபடுகிறது. எனினும், சுவரில் வழிந்த நீரை மனத்தில் வழியவிட்டுக்கொண்டும், கையில் ஏந்திய துளிகளால் நரம்புகளை வீணையாக மீட்டிக்கொண்டும் போன மழை திரும்பவரும் என்று, மேகங்களை வெறித்துப்பார்த்து அலைந்து கொண்டிருந்த வேளையில், ஒருநாள் கோடை வந்துவிட்டதாகக் கவிஞர் கூறுகிறார்.

## இலக்கணக்குறிப்பு

**காய்கிறது, உறிஞ்சுகிறது, உதறுகிறது, தோய்கிறது, விடுபடுகிறது** – படர்க்கை ஒன்றன்பால் நிகழ்கால வினைமுற்றுகள்.

**இசைக்கின்றன** – படர்க்கைப் பலவின்பால் நிகழ்கால வினைமுற்று.

**இருக்கிறேன், அலைகிறேன்** – தன்மை ஒருமை நிகழ்கால வினைமுற்றுகள்.

**நனைந்து, குவித்து, அசைத்து, ஏந்தி** – வினையெச்சங்கள்.

**இருந்த, தீட்டிய, அழிந்த, கண்ட, இறங்கிய, வாங்கிய, போன** – இறந்தகாலப் பெயரெச்சங்கள்.

## உறுப்பிலக்கணம்

1. **அசைத்து – அசை + த் + த் + உ**

**அசை** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **உதறுகிறது – உதறு + கிறு + அ + து**
**உதறு** – பகுதி
**கிறு** – நிகழ்கால இடைநிலை
**அ** – சாரியை
**து** – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

3. **இசைக்கின்றன – இசை + க் + கின்று + அன் + அ**
**இசை** – பகுதி
**க்** – சந்தி
**கின்று** – நிகழ்கால இடைநிலை
**அன்** – சாரியை
**அ** – பலவின்பால் வினைமுற்று விகுதி.

4. **இறங்கிய – இறங்கு + இ (ன்) + ய் + அ**
**இறங்கு** – பகுதி
**இ(ன்)** – இறந்தகால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது விகாரம்
**ய்** – (உடம்படுமெய்) சந்தி
**அ** – பெயரெச்ச விகுதி.

5. **அலைகிறேன் – அலை + கிறு + ஏன்**
**அலை** – பகுதி
**கிறு** – நிகழ்கால இடைநிலை
**ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

### புணர்ச்சி விதி

1. **தலையசைத்து – தலை + அசைத்து**
"உயிர்வரின்... இ, ஈ, ஐ வழி யவ்வும்" என்னும் விதிப்படி – தலைய் + அசைத்து எனப் புணர்ந்தது.
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி – தலையசைத்து எனப் புணர்ந்தது.

2. **வீட்டுச்சுவர் – வீடு + சுவர்**
"நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் டறஒற்று இரட்டும்" என்னும் விதிப்படி – வீட்டு + சுவர் எனப் புணர்ந்தது.
"வன்றொடர்க் குற்றிய லுகரத்தின்முன் வலிமிகும்" என்னும் விதிப்படி – வீட்டுச் + சுவர் – வீட்டுச்சுவர் எனப் புணர்ந்தது. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்".

### கவிதைப்பேழை

## நெடுநல்வாடை

### பலவுள் தெரிக

1. பழந்தமிழர், ஓராண்டை ______ பருவங்களாக வகைப் படுத்தினர். (PTA - 2)
அ) பன்னிரண்டு ஆ) மூன்று இ) ஆறு ஈ) நான்கு
**விடை : இ) ஆறு**

2. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ______. (PTA - 4)
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நெடுநல்வாடை ஈ) நற்றிணை
**விடை : இ) நெடுநல்வாடை**

3. நெடுநல்வாடை, ______ அடிகளைக் கொண்டது. (PTA - 2)
அ) 202 ஆ) 185 இ) 188 ஈ) 306
**விடை : இ) 188**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. பொருத்துக. (Mar.-24)

அ. குரங்குகள் – 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ. விலங்குகள் – 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ. பறவைகள் – 3) குளிரால் நடுங்கின
ஈ. பசுக்கள் – 4) மேய்ச்சலை மறந்தன

அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv) ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)
இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv) ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

**விடை : ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)**

5. 'நெடுநல்வாடை' என்பது ______ எனப் பிரிவது சரி.

அ) நெடு + நல்வாடை ஆ) நெடுநல் + வாடை
இ) நெடு + நன்மை + வாடை ஈ) நெடுமை + நன்மை + வாடை

**விடை : ஈ) நெடுமை + நன்மை + வாடை**

6. வெற்றியின் அடையாளமாகச் சூடுவது ______.

அ) காந்தள் பூ ஆ) கரந்தைப் பூ இ) வஞ்சிப்பூ ஈ) வாகைப்பூ

**விடை : ஈ) வாகைப்பூ**

7. 'கூதிர்ப் பருவம்' என்பது ______ மாதங்கள்.

அ) ஐப்பசி, புரட்டாசி ஆ) கார்த்திகை, மார்கழி
இ) புரட்டாசி, கார்த்திகை ஈ) ஐப்பசி, கார்த்திகை

**விடை : ஈ) ஐப்பசி, கார்த்திகை**

8. உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை மாற்றம் பெறுவது, ______.

அ) பருவமழையால் ஆ) ஆயர் பசு மேய்ப்பதால்
இ) புது வெள்ளத்தால் ஈ) பருவ மாற்றங்களால்

**விடை : பருவ மாற்றங்களால்**

9. ஆயர், எதனால் வருத்தம் அடைந்தனர்?

அ) மேகம் சூழ்ந்ததால். ஆ) புதிய மழை பொழிந்ததால்.
இ) நிரைகளை மேடான நிலத்தில் மேயவிட்டதால்.
ஈ) தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால்.

**விடை : ஈ) தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால்.**

10. ஆர்கலி <u>**முனைஇய**</u> – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

**விடை : ஈ) சொல்லிசை அளபெடை**

11. கவுள் <u>**புடையூஉ**</u> நடுங்க – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.

அ) உயிர் அளபெடை ஆ) இசைநிறை அளபெடை
இ) சொல்லிசையளபெடை ஈ) இன்னிசையளபெடை

**விடை : ஈ) இன்னிசையளபெடை**

12. குன்று குளிர்ப்<u>**பன்ன**</u> கூதிர் – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.

அ) உவமானம் ஆ) உவமை இ) உவமை உருபு ஈ) உவமைச்சொல்

**விடை : இ) உவமை உருபு**

13. 'தலையில் சூடும் மாலை' என்னும் பொருள் தரும் சொல் ______.

அ) கன்னி ஆ) கந்நி இ) கண்ணி ஈ) காந்தள்

**விடை : இ) கண்ணி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **வாகைத்திணை, கூதிர்ப்பாசறை விளக்குக.** (PTA - 1,3)

**வாகைத்திணை** : போரில் வெற்றி பெற்ற அரசனும் அவனுடைய வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூச்சூடி, வெற்றியை விழாவாகக் கொண்டாடுவது 'வாகைத்திணை' ஆகும்.

**கூதிர்ப்பாசறை** : கூதிர்ப்பாசறை என்பது, போர்மேற் சென்ற அரசன், குளிர்காலத்தில் தங்கும் படைவீடாகும்.

2. **பொய்யா வானம் எவ்வாறு பொழிந்தது?**

➤ பொய்த்தல் இல்லாத மேகம், தான் தங்கி இருந்த மலையை வலப் பக்கமாகச் சூழ்ந்து சுழன்று எழுந்து, உலகம் குளிர்ச்சி பெறுமாறு, புதிய மழையைப் பொழிந்தது.

3. **கொடுங்கோல் கோவலர் – விளக்குக.**

➤ 'கோவலர்' என்பது, ஆநிரைகளைப் பாதுகாக்கும் ஆயரைக் குறிப்பது.

➤ அவர்கள் தம் கையில் கோல் வைத்திருப்பர். அது வளைந்திருக்கும்.

➤ அதனால், 'கொடுங்கோல் கோவலர்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

4. **ஆயர் எவ்வாறு வருந்தினர்?**

➤ பழகிய நிலத்தை விட்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டதால், ஆயர்தம் தலையில் சூடி இருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மலர்மாலை கசங்கியது; பலர் சேர்ந்து குளிர் நடுக்கம் போக்கக் கைகளுக்குக் கொள்ளி நெருப்பினால் சூடு ஏற்றியபோதிலும், பற்கள் நடுங்க வருந்தினர்.

5. **சங்க இலக்கியப் பதிவால் பெறப்படும் வாழ்வியல் மாற்றம் யாது?**

➤ முல்லைநில மக்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்வில், மழையாலும் குளிராலும் ஏற்படும் மாற்றத்தைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

6. **'நெடுநல்வாடை' – பிரித்துப் பொருள் தருக. (அ) நெடுநல்வாடை பெயர்க்காரணம் தருக.** (Mar.-24)

➤ நெடுநல்வாடை – நெடுமை + நன்மை + வாடை.

➤ அதாவது, தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுந்ததால், 'நெடுவாடை';

➤ போர்ப் பாசறையில் தங்கிய தலைவன் வெற்றி பெற ஏதுவானதால், 'நல்வாடை'.

➤ எனவே, 'நெடுநல்வாடை' ஆயிற்று.

## சிறுவினாக்கள்

1. **குளிர்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் எவ்வாறு நடுங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது?** (Mar.-20, PTA - 6)

➤ மிகுந்த குளிரால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.

➤ பெண் குரங்குகளின் உடல்கள், குளிரால் கூனிப் போயின.

➤ பறவைகள், குளிரால் நடுங்கி மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன.

➤ கன்றுகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்கள், கன்றுகளைத் தவிர்த்தன.

➤ குன்றையே குளிர்விப்பதுபோலக் கூதிர்காலத்து நள்ளிரவு இருந்தது.

➤ குளிர்க்காலத்தின் தன்மையால் நிகழ்ந்தனவாக, இவற்றை நெடுநல்வாடை கூறுகிறது.

2. **வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.** (Mar.-24)

➤ போர்க்களத்தில் எதிர்நின்ற பகைவரை வென்று அழித்துப் பெற்ற வெற்றியை அரசனும் அவன் வீரர்களும் அவ்வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியை விழாவாகக் கொண்டாடுவர். இதனை 'வாகைத் திணை' எனக் கூறுவர்.

➤ பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ" எனத் தொடங்கும் 'நெடுநல்வாடை' வாகைத் திணைக்குச் சிறந்த சான்றாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



- பத்துப்பாட்டுள் நெடுநல்வாடை என்பது, தலைவனைப் பிரிந்த தலைவிக்குப் பிரிவுத் துன்ப மிகுதியால் 'நெடுவாடை'யாகவும், போர்ப் பாசறையில் தங்கி இருந்த தலைவனுக்கு (நெடுஞ் செழியனுக்கு) வெற்றி பெறுவதற்கு ஏதுவான 'நல்வாடை'யாகவும் இருந்தமையை விளக்குவதாகும். இது பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றி குறித்துப் பேசுவதனால் வாகைத் திணைக்குச் சிறந்த சான்றாகும்.

1. **நெடுநல்வாடை குறித்து நீ அறிவன யாவை?**
   - நெடுநல்வாடை, சங்க இலக்கியம் சார்ந்த 'பத்துப்பாட்டு' நூல்களுள் ஒன்று.
   - இப்பாட்டின் தலைவன், பாண்டியன் நெடுஞ்செழியன்.
   - இதனை இயற்றியவர், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்.
   - இதனை, 188 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவாக நக்கீரர் இயற்றியுள்ளார்.
   - இப்பாட்டுள் வரும் தலைவி, தன் தலைவனைப் பிரிந்து துன்புற்றதனால், 'நீண்டவாடை' ஆயிற்று.
   - தலைவியைப் பிரிந்து போர்ப்பாசறையில் தங்கி இருந்த தலைவனுக்கு, வெற்றிபெற ஏற்றதாக இருந்ததால், 'நல்லவாடை' ஆயிற்று. எனவே, நூலுக்கு 'நெடுநல்வாடை' என்பது பெயராயிற்று.

## இலக்கணக்குறிப்பு

**முனைஇய** – சொல்லிசை அளபெடை.

**புடையூஉ** – இன்னிசையளபெடை.

**பனிப்ப, பரப்பி, கலங்கி, நலிய, மறப்ப, வீழ** – வினையெச்சங்கள்.

**பெரும்பனி** – பண்புத்தொகை.

**படிவன** வீழ – வினையெச்ச விகுதி.

## உறுப்பிலக்கணம்

1. **படிவன – படி + வ் + அன் + அ**

**படி** – பகுதி

**வ்** – எதிர்கால இடைநிலை

**அன்** – சாரியை

**அ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **பெரும்பனி – பெருமை + பனி**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – பெரு + பனி

'இனமிகல்' என்னும் விதிப்படி – பெரும் + பனி – பெரும்பனி எனப் புணர்ந்தது.

2. **கொடுங்கோல் – கொடுமை + கோல்**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – கொடு + கோல்

'இனமிகல்' என்னும் விதிப்படி – கொடுங் + கோல் – கொடுங்கோல் எனப் புணர்ந்தது.

## துணைப்பாடம்

# முதல்கல்

## பலவுள் தெரிக

1. முதல்கல் – என்னும் சிறுகதையின் ஆசிரியர் : (PTA -2,6, Mar. - 20)

அ) குலோத்துங்கச் சோழன் ஆ) உத்தம சோழன்

இ) இராசராச சோழன் ஈ) இராசேந்திர சோழன்

**விடை : ஆ) உத்தம சோழன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. 'முதல்கல்' சிறுகதை உணர்த்தும் கருத்து, ______. (Sep.-20)
அ) ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
ஆ) தனிமரம் தோப்பாகாது
இ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
ஈ) மாற்றம் ஒன்றே மாறாதது

**விடை : ஆ) தனிமரம் தோப்பாகாது**

3. மனிதத் தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளின் ஆசிரியர் ______.
அ) சோலை சுந்தரப் பெருமாள் ஆ) உத்தம சோழன்
இ) மேலாண்மை பொன்னுசாமி ஈ) ஜெயகாந்தன்

**விடை : ஆ) உத்தம சோழன்**

4. முதல்கல் கதையில் மருதன் தொடங்கிய பணி ______.
அ) நெல் அறுவடை ஆ) வடிவாய்க்கால் தூய்மை
இ) கல் அறுத்தல் ஈ) குளம் வெட்டுதல்

**விடை : ஆ) வடிவாய்க்கால் தூய்மை**

5. உத்தம சோழனின் புதினம் ______ ஆகும்.
அ) கசக்கும் இனிமை ஆ) கிழக்கு வாசல் உதயம்
இ) குருவி மறந்த வீடு ஈ) மனிதத் தீவுகள்

**விடை : அ) கசக்கும் இனிமை**

6. 'தொலைதூர வெளிச்சம்' என்ற புதினத்தின் ஆசிரியர் ______.
அ) வண்ணதாசன் ஆ) புதுமைப்பித்தன் இ) டாக்டர் மு. வ. ஈ) உத்தம சோழன்

**விடை : ஈ) உத்தம சோழன்**

## நெடுவினா

**'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை 'முதல்கல்' கதை எவ்வாறு வலியுறுத்துகிறது?**

**ஊருக்கு வந்த சோதனை :**

காவிரிக் கரையின் கடைமடையில் அமைந்ததுதான் அந்தக் கிராமம். எந்த மழையின் உதவியில் 'சம்பா'ப் பயிர்களை நட்டார்களோ, அதே மழையின் 'அதிகப்படியான அன்பினால்' இப்போது அப்பயிர்களெல்லாம் நீரில் தத்தளிக்கின்றன. இது போதாதென்று வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்று, அச்சுறுத்தக் காத்திருக்கிறது. கடன்மேல் கடன் வாங்கி நட்ட பயிர்கள் தண்ணீரில் தத்தளிக்க, மேலும் மழை என்றால், பயிர்கள் நீரில் மூழ்கி அழுகும் நிலை உருவாகும்.

**சோதனையைச் சாதனையாக்க நினைத்த மருதன் :**

மழை பெய்வது இயற்கை. மழைநீரை வடித்தெடுத்துத் தற்காத்துக் கொள்வது மனிதனின் கடமை. வெள்ளைக்காரன் கட்டிய வடிமதகு, எவ்வளவு நீர் வந்தாலும் விழுங்கி அமைதியாய் வடிவாய்க்கால் வழியாக வெளியேற்றும். வடிவாய்க்கால் முழுக்கக் காட்டாமணக்குச் செடிகள் முளைத்து, நீரை வடியவிடாமல் தடுத்து நிற்கின்றன. இதனால் மழைநீர் வயல்வெளிகளில் தேங்கிப் பயிர்களைப் பாழ்படுத்துகிறது. இந்தச் சோதனையிலிருந்து விடுபட, மருதன் செடிகளை அகற்றிச் சாதனை படைக்க விரும்பினான்.

**தனிமரம் தோப்பாகாது :**

பெருவெள்ளத்தை வடியச் செய்யத் தனிமனிதனால் முடியுமா? எனவே, மருதன் ஊர்மக்களின் உதவியை நாடினான். உதவிக்கரம் நீட்ட எவரும் முன்வரவில்லை. தானே தனித்து நின்று, பணி செய்யத் துணிந்தான்.

**சமூகப் பற்றின்மை :**

பயிர்களை வாழவைப்பது மழை. அது பெருமழையாகி வெள்ளமாய்த் திரண்டு தேங்குகையில், தான் உயிர்ப்பித்த பயிர்களையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது. அது மழையின் குற்றமன்று; வெள்ளம் தேங்காமல் வடிய வழிவகை செய்யாதது மனிதனின் குற்றம். அந்தப் பழியிலிருந்து விடுபட, மருதன் சொன்ன கருத்தை எவரும் ஏற்கவில்லை. இது, சமூகப் பற்றின்மையைக் காட்டுகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஊர் கூடித் தேரிழுத்தல் :**

தேரை வடம்பிடித்து இழுக்கப் பல கைகள் தேவைப்படும். அதுபோன்று மூன்றுமைல் தொலைவு வளைந்து செல்லும் வாய்க்காலில் மண்டியுள்ள காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்து, நீரை வடியச் செய்ய வேண்டும். இது ஊர்கூடிச் செய்ய வேண்டிய பணியல்லவா? மருதனின் விடாமுயற்சியும் சமூகப்பற்றும் ஊரைக் கூட்டிப் பணிசெய்யத் தூண்டின. எவரையும் எதிர்பார்க்காமல் மருதன் அடி எடுத்து வைத்தான். அனைவரும் அவனைப் பின்பற்றினர். இப்பொழுது ஊர் ஒன்றுபட்டது. பயிர்ப் பாதுகாப்பின்மூலம் ஊர், மகிழ்ச்சியின் வாழ்விற்குத் திரும்பியுள்ளது.

## இலக்கணம்

# நால்வகைப் பொருத்தங்கள்

### பலவுள் தெரிக

1. தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு, _____ பாகுபாடு அமைந்துள்ளது. (PTA - 4)
அ) இட ஆ) பால் இ) இருதிணை ஈ) எண்
**விடை : இ) இருதிணை**

2. இருதிணைக்கும் பொதுவாக வரும் சொற்கள் ______. (PTA - 5)
அ) குழந்தை, கதிரவன் ஆ) மரம், மனிதர்கள் இ) சீதா, இராமன் ஈ) நாம், நாங்கள்
**விடை : அ) குழந்தை, கதிரவன்**

3. தமிழ்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துவன ______.
அ) பெயர்ச்சொற்களும் திசைச்சொற்களும் ஆ) வினைச்சொற்களும் இயற்சொற்களும்
இ) பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் ஈ) வடசொற்களும் திரிசொற்களும்
**விடை : இ) பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும்**

4. எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தங்கள் உடையதாய் அமைவது ______.
அ) செயப்படுபொருள் ஆ) பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) வினைமுற்று
**விடை : ஈ) வினைமுற்று**

5. தொடர்களின் ______வைத்துக்கொண்டே, வினைமுற்றின் திணை, பால், எண் ஆகியவற்றைச் சொல்லிவிடலாம்.
அ) பயனிலையை ஆ) செயப்படுபொருளை
இ) சொல்லை ஈ) எழுவாயை
**விடை : ஈ) எழுவாயை**

6. எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை உணர்த்தும் தொடர் ______
அ) நூலகத்திற்குச் செல்வோமா? ஆ) பத்துத் தேங்காய்.
இ) பத்து மரம் வீழ்ந்தது. ஈ) முருகன் நூலகம் சென்றான்.
**விடை : ஈ) முருகன் நூலகம் சென்றான்.**

7. அஃறிணையை அறிய உதவும் வினாச்சொல் பயனிலை ______
அ) யார்? ஆ) எவன்? இ) எது? ஈ) எவர்?
**விடை : இ) எது?**

8. உயர்திணையை அறிய உதவும் வினாச்சொல் பயனிலை ______
அ) எவன்? ஆ) எது? இ) எவை ஈ) யார்?
**விடை : ஈ) யார்?**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் ______.
அ) கதிரவன், தங்கமணி ஆ) குழந்தை, தங்கமணி
இ) கதிரவன், குழந்தை ஈ) தங்கமணி, மாணவர்

**விடை : இ) கதிரவன், குழந்தை**

10. இருதிணைப் பொதுப்பெயர் எழுவாய், பெருவழக்காக அஃறிணை முடிவைப் பெற்றுவருவது ______.
அ) எழுத்து வழக்கில் ஆ) பழைய தமிழ் வழக்கில்
இ) சங்ககால வழக்கில் ஈ) பேச்சு வழக்கில்

**விடை : ஈ) பேச்சு வழக்கில்**

11. பால் காட்டும் விகுதிகள் இன்றித் தத்தம் பால் உணர்த்தும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் ______.
அ) குழந்தை, அம்மா ஆ) மாணவர், தங்கை இ) தம்பி, தங்கை ஈ) குழந்தை, அப்பா

**விடை : இ) தம்பி, தங்கை**

12. **கூற்று 1** : அஃறிணை எழுவாய்ப் பெயர்களில் ஆண்பால், பெண்பால் பகுப்புமுறை, தமிழ்மரபில் இருக்கிறது.
**கூற்று 2** : பயனிலையாய் அமையும் வினைமுற்றில் பால்வேறுபாடு காட்டும் விகுதி பெறாமல் ஒன்றன்பால் விகுதிபெற்று முடியும்.
அ) கூற்று 1 தவறு; 2 சரி ஆ) கூற்று 1 சரி, 2 தவறு
இ) இரு கூற்றுகளும் சரி ஈ) இருகூற்றுகளும் தவறு

**விடை : இ) இரு கூற்றுகளும் சரி**

13. 'பால் காட்டும் விகுதி பெறாமல், ஒன்றன் பால்விகுதி பெற்று முடிவதற்கு' எடுத்துக்காட்டுகள் ______.
அ) தங்கமணி பாடினாள், பசு பார்த்தது ஆ) குழந்தை சிரித்தது, காளை உழுதது
இ) கதிரவன் உதித்தது, காளை உழுதது ஈ) காளை உழுதது, பசு பால் தந்தது

**விடை : ஈ) காளை உழுதது, பசு பால் தந்தது**

## குறுவினாக்கள்

**1. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை – விளக்குக.** (Sep.-20)
- பேசுபவர், முன்னிலையில் உள்ளவரையும் தம்முடன் இணைத்துக்கொண்டு, இருவரையும் உள்ளடக்கியதாகப் பேசுவது உளப்பாட்டுத் தன்மையாகும்.

**2. மொழியின் அடிப்படைப் பண்புகள் எவை? அவை எதற்கு உதவும்?**
- திணை, பால், எண், இடம் ஆகியவை, மொழியின் அடிப்படைப் பண்புகளாகும்.
- சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் அவை உதவும்.

**3. பெயர், வினைச்சொற்கள் எவற்றை உணர்த்தும்?**
- தமிழ்மொழியின் பெயர்ச்சொற்களும் வினைச்சொற் களும், திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும்.

**4. எழுவாய்த் தொடர் எவ்வாறு அமையும்?**
- எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று, எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தம் உடையதாய் அமையும்.

**5. தொல்காப்பியம் கூறும் திணைப் பிரிவுகள் யாவை?**
- 'மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை. அவர் அல்லாத பிற அஃறிணை' என்பன, தொல்காப்பியம் கூறும் இருதிணைப் பிரிவுகளாகும்.

**6. இன்றைய தமிழில் திணை வேறுபாடு எவ்வாறு அறியப்படுகிறது?**
- இன்றைய தமிழில் 'யார்?', 'எது?' போன்ற வினாச் சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு அறியப்படுகிறது.

  **எ–கா :** அங்கே நடப்பது யார்?'யார்?' என்னும் வினாப் பயனிலையால், 'உயர்திணை' அறியப்பட்டது.
  அங்கே நடப்பது எது? 'எது?' என்னும் வினாப் பயனிலையால், 'அஃறிணை' அறியப்பட்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. பலர்பால்சொல் பழந்தமிழில் எவ்வாறு வழங்கி வந்துள்ளது?
   - ஐம்பால்களுள் பலர்பால்சொல், பழந்தமிழில் பன்மையிலும், சில வேளைகளில் உயர்வு கருதி ஒருமையிலும் வழங்கி வந்துள்ளது.

   **எ – கா :** மாணவர் வந்தனர். (பன்மை), ஆசிரியர் வந்தார். (ஒருமை)

8. பால் சுட்டும் விகுதிகள் இல்லாமலும் பால் உணர்த்தும் உயர்திணைப் பெயர்ச் சொற்களைக் கூறுக.
   - அப்பா, தந்தை (பால் காட்டும் விகுதி இல்லாமல் ஆண்பாலை உணர்த்தின)
   - அம்மா, தாய், தங்கை (பால் காட்டும் விகுதி இல்லாமல் பெண்பாலை உணர்த்தின)

9. மூவிடப் பெயர்களில் பால்பாகுபாட்டை உணர்த்துவது எது?
   - தன்மை, முன்னிலைப் பெயர்கள், ‘எண்’ (ஒருமை, பன்மை) பாகுபாட்டை உணர்த்துமே தவிர, பால் பாகுபாட்டை உணர்த்தாது.

   **எ – கா : நான்** புத்தகம் கொடுத்தேன் (ஒருமை), **நாம்** புத்தகம் கொடுத்தோம். (பன்மை)

   **நீ** புத்தகம் கொடுத்தாய் (ஒருமை), **நீவிர்** (நீங்கள்) புத்தகம் கொடுத்தீர் (பன்மை)

10. இடப்பெயர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
    - பேசுபவர் ‘தன்மை’ எனவும், கேட்பவர் ‘முன்னிலை’ எனவும், பேசப்படும் பொருள் ‘படர்க்கை’ எனவும் இடப்பெயர்கள் அழைக்கப்படுகின்றன.

11. இக்காலத் தமிழில் ‘தாங்கள்’ எவ்வாறு கையாளப்படுகிறது?
    - ‘தாங்கள்’ என்பது, படர்க்கைப் பலர்பால்சொல். இக்காலத் தமிழில், ‘தாங்கள்’ என்னும் இச்சொல், முன்னிலை இடத்தில் கையாளப்படுகிறது.

    **எ – கா :** தாங்கள் எப்போது பதவி உயர்வில் செல்வீர்கள்?

12. தற்காலத் தமிழில் விலங்கினப் பொதுப்பெயர் பால் பிரிவைக் காட்ட எவ்வாறு பயன்படுத்துகின்றனர்?
    - தற்காலத் தமிழில் விலங்கினப் பொதுப்பெயர் பால் பிரிவைக் காட்ட, ஆண், பெண் என்னும் அடைகளைச் சேர்த்து வழங்குகின்றனர்.

    **எ – கா :** ஆண்குரங்கு, பெண்குரங்கு; பசுமாடு, காளைமாடு.

13. தற்காலத் தமிழில் விலங்கினப் பொதுப்பெயர் பால் வேறுபாடு காட்ட எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது?
    - மாட்டினத்தில் பெண்பால் (பசு) ‘பசுமாடு’ எனவும், ஆண்பால் (எருது) ‘காளைமாடு’ எனவும் வழங்கப் படுகின்றன. பிற விலங்குகள், ‘ஆண்’, ‘பெண்’ அடைகள் சேர்த்து வழங்கப்படுகின்றன.

    **எ – கா :** ஆண்குரங்கு, பெண்குரங்கு.

14. ‘பத்துத் தேங்காய்கள்’ என ஏன் எழுதுவதில்லை?
    - அஃறிணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெறுவது கட்டாயம் இல்லை. ஆதலால், ‘பத்துத் தேங்காய்கள்’ என எழுதாமல், ‘பத்துத் தேங்காய்’ என, எழுதுகின்றனர்.

15. இக்காலத் தமிழில் அஃறிணை ஒருமை, அஃறிணைப் பன்மை வேறுபாடு எப்படி வெளிப்படுகிறது?
    - இக்காலத் தமிழ் வழக்கில், அஃறிணைப் பன்மைக்கு எனத் தனிவினைமுற்றுகள் இல்லை. எனவே, ஒருமை, பன்மை வேறுபாடு எழுவாயில் வெளிப்படுத்தப்படுகிறது.
    - **எ – கா :** ஒருமரம் வீழ்ந்தது – பத்து மரம் வீழ்ந்தது.

## சிறுவினாக்கள்

1. முருகன் நூலகம் சென்றான் – இத்தொடரால் எவ்வெவற்றை அறியமுடியும்?
   - இத்தொடரால் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை அறியமுடியும்.
   - முருகன் – எழுவாய்: உயர்திணை, ஆண்பால், ஒருமை (எண்), படர்க்கை (இடம்)
   - சென்றான் – வினைமுற்று: உயர்திணை, ஆண்பால், ஒருமை (எண்), படர்க்கை (இடம்)
   - இதன்மூலம், எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறியலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்களில் வினைமுடிவு எவ்வாறு அமையும்?**

- குழந்தை, கதிரவன் போன்றவை, இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள். இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது, அவற்றின் வினைமுடிவு இருதிணை பெற்றும் வருகிறது.

  **எ – கா :** குழந்தை சிரித்தான் (உயர்திணை முடிவு), குழந்தை சிரித்தது. (அஃறிணை முடிவு)

  கதிரவன் உதித்தான் (உயர்திணை முடிவு),

  கதிரவன் உதித்தது. (அஃறிணை முடிவு)

- பேச்சுவழக்கில் இவ்வகைப் பெயர்கள், அஃறிணை வினைமுடிவைப் பெற்றுவருவதே, பெருவழக்காக உள்ளது.

**3. எப்பெயர்கள் பால் உணர்த்தா?**

- (நான், நாம் என்னும்) தன்மைப் பெயர்களும், (நீ, நீர், நீவிர் என்னும்) முன்னிலைப் பெயர்களும் 'பாலை' உணர்த்தா. 'எண்ணை' மட்டுமே உணர்த்தும்.

  (எண் : ஒருமை, பன்மை)

  நான் – தன்மை ஒருமைப்பெயர்; நாம் – தன்மைப் பன்மைப்பெயர்

  நீ – முன்னிலை ஒருமைப்பெயர்; நீர், நீவிர் – முன்னிலைப் பன்மைப்பெயர்.

(இன்றைய தமிழில் 'நாம்' என்பது 'நாங்கள்' எனவும், 'நீர்', 'நீவிர்' என்பது 'நீங்கள்', 'தாங்கள்' எனவும் வழங்குகின்றன)

**4. இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் எவ்வாறு வழங்குகிறது?**

- பலர்பாலை உணர்த்தும் சொல் இக்காலத்தில், பன்மைப் பொருளை உணர்த்தாமல், ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது.

  **எ – கா :** அவர் வந்தார். (ஒருமை)

- பலர்பால் சொல் இக்காலத்தில் பன்மைப் பொருளை உணர்த்துவதற்கு, 'கள்' என்னும் விகுதிமேல் விகுதி பயன்பாட்டில் உள்ளது.

  **எ – கா :** அவர்கள் வந்தார்கள். (பன்மை)

**5. உயர்திணை ஆண் – பெண் பாலுக்குரிய பொதுப் பெயர்களில் பால் எவ்வாறு அறியப்படுகிறது?**

- தமிழ்மொழியில் உயர்திணையின் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்குமுரிய பொதுப்பெயர்கள் உண்டு.

  **எ – கா :** தங்கமணி

- இத்தகைய பெயர்கள் தொடர்களில் அமையும்போது, வினைமுற்றைக் கொண்டே பால் அறியப் படுகிறது.

  **எ – கா :** தங்கமணி பாடினாள். (பெண்பாலை உணர்த்தும் பயனிலை)

  தங்கமணி பாடினான். (ஆண்பாலை உணர்த்தும் பயனிலை)

**6. அஃறிணை எழுவாயில் பால் எவ்வாறு அறியப்படுகிறது?**

- அஃறிணை எழுவாயில் ஆண், பெண் பகுப்புமுறை, மரபில் இருக்கிறது. இருந்தாலும், அவற்றை வேறு படுத்தும் பால் காட்டும் விகுதிகள், வினைமுற்றில் இல்லை.

  **எ – கா :** காளை உழுதது (ஒருமை);

  காளை உழுதன (பன்மை).

  பசு பால் தந்தது (ஒருமை);

  பசு பால் தந்தன (பன்மை).

(வினைமுற்றின் அடிப்படையில் ஒன்றன்பால், பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.)

**7. பால் பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல் வினை முற்று முடிவதற்குச் சான்று தருக.**

- அஃறிணை எழுவாய்களில் பால் பகுப்புச் சொற்கள் இருந்தாலும், வினைமுற்று விகுதி, பால் பாகுபாடின்றி முடிவது உண்டு.

  **எ – கா :** காளை உழுதது, பசு பால் தந்தது.

- காளை (ஆண்பாலை), பசு (பெண்பாலை)உணர்த்தின. வினைமுற்று, ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. தற்காலத்தில் அஃறிணை எழுவாயில், பொதுப்பெயரின் பால் உணர்த்த ஏற்பட்டுள்ள மாற்றத்தை விளக்குக.**

➤ தற்காலத்தில் ஆண், பெண் என்னும் பால் பாகுபாட்டுப் பெயர்கள், எழுவாய்ப் பொதுப் பெயரின்முன் சேர்த்து வழங்கும் வழக்கம் உள்ளது.

**எ–கா :** மாட்டு இனத்துள் பெண்பாலைக் குறிக்கப் 'பசுமாடு' எனவும், ஆண்பாலைக் குறிக்கக் (எருது) காளைமாடு எனவும் வழங்கப் படுகிறது. பிற விலங்குகளை ஆண்குரங்கு, பெண்குரங்கு என்பனபோல் வழங்குகிறது.

**9. இக்காலத் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் காணப்படும் குழப்பம் யாது?**

➤ இக்காலத் தமிழில், 'ஒவ்வொரு' என்னும் சொல், பேச்சிலும் எழுத்திலும் பன்மைக் குழப்பத்தோடு கையாளப்படுகிறது.

**எ – கா :** ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது. ஒவ்வொரு சுளைகளும் சுவையாக உள்ளது.

➤ 'ஒவ்வொரு' என்பதை ஒருமையைக் குறிக்கப் பெயர் முன் சேர்க்கவேண்டும். எனவே, 'ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது', 'ஒவ்வொரு சுளையும் சுவையாக உள்ளது' என்றே பேசவும் எழுதவும் வேண்டும்.

**10. பால் பாகுபாடு எவ்வெவ் விடங்களுக்கு இல்லை? எடுத்துக்காட்டுத் தருக.**

➤ தமிழ்மொழியில் தன்மை, முன்னிலை, என்னும் இரண்டு இடங்களுக்கும் ஒருமை, பன்மை, (எண்) பாகுபாடு உண்டே தவிர, பால் பாகுபாடு இல்லை.

**எ – கா :** நான் புத்தகம் கொடுத்தேன். (நான், கொடுத்தேன்) 'ஒருமை' என்பதை மட்டும் அறியமுடியும்.

நாம் பள்ளி செல்வோம். (நாம், செல்வோம்) 'பன்மை' என்பதை மட்டும் அறியமுடியும்.

நீ விளையாடச் செல். 'ஒருமை' என்பதை மட்டும் அறியமுடியும்.

நீவிர் (நீங்கள்) விளையாடச் செல்லலாம். 'பன்மை' என்பதை மட்டும் அறியமுடியும்.

(இவற்றில் – நான், நாம்; நீ, நீவிர்) (ஆணா, பெண்ணா என்று கூறமுடியாது).

## இயல் – 3

### உரைநடை உலகம்

# தமிழர் குடும்ப முறை

### பலவுள் தெரிக

1. சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றவர்: (Sep. -20)

அ) தாயே ஆ) தந்தையே இ) தலைவியே ஈ) தலைவனே

**விடை : அ) தாயே**

2. மனித சமூகத்தின் அடிப்படை அலகு _____. (PTA -2,6)

அ) கணவன் ஆ) மனைவி இ) திருமணம் ஈ) குடும்பம்

**விடை : ஈ) குடும்பம்**

3. 'தம்மனை' என்பது ______ இல்லம். (Mar. -23)

அ) தந்தையின் ஆ) மனைவியின் இ) உடன்பிறந்தானின் ஈ) கணவனின்

**விடை : ஆ) மனைவியின்**

4. குடும்பம் எனும் சொல், முதன்முதலில் ______ நூலில்தான் வருகிறது.

அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) அகநானூறு

**விடை : ஆ) திருக்குறள்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. சங்கப் பாடல்களில், 'மனை' எனும் சொல் குறிப்பது ______.
அ) வாழ்விடம் ஆ) காவற்காடு இ) கோட்டை ஈ) சமவெளி
**விடை : அ) வாழ்விடம்**

6. மணந்தகம் என்பது ______.
அ) திருமணக்கூடம் ஆ) வீடு
இ) கோவில் ஈ) இல்லறத் தொடக்கம்
**விடை : ஈ) இல்லறத் தொடக்கம்**

7. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.
1. சங்க காலத்தில், கண சமூகத்திற்குத் தாயே தலைமை வகித்தார்.
2. திருமணம், குடும்பம் எனும் சொற்கள், தொல்காப்பியத்தில் எங்கும் இடம் பெறவில்லை.
மேற்கூறியவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடு.
அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் சரியில்லை
**விடை : இ) இரண்டும் சரி**

8. சங்ககாலக் குடும்ப அமைப்பில் முதல்நிலை உறவினர் ______.
அ) தந்தை ஆ) நற்றாய் இ) தோழி ஈ) செவிலித்தாய்
**விடை : ஈ) செவிலித்தாய்**

9. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் ______.
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து
**விடை : ஆ) குறுந்தொகை**

10. "சிலம்புகழி நோன்பு" செய்வதற்கு உரியவர் ______.
அ) நற்றாய் ஆ) செவிலித்தாய் இ) தலைவனின் தாய் ஈ) தலைவியின் தாய்
**விடை : இ) தலைவனின் தாய்**

11. 'இலக்கிய மானிடவியல்' என்னும் நூலை இயற்றியவர் ______.
அ) சுப்பிரமணிய பாரதி ஆ) பக்தவச்சல பாரதி இ) திரு. வி. க. ஈ) சோமசுந்தர பாரதி
**விடை : ஆ) பக்தவச்சல பாரதி**

## குறுவினாக்கள்

**1. குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?** (May - 22)
- மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக்கு அடிப்படையான குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு, **திருமணம்** என்பதே அடிப்படையாக இருக்கிறது.

**2. குடும்பம் எனும் சொல் எவ்வாறு அமைந்தது?**
- கூடி வாழ்தல் என்னும் பொருளுடைய, 'குடும்பு' எனும் சொல்லுடன் 'அம்', எனும் விகுதி சேர்த்துப் பொருண்மை விளக்கமாகக் 'குடும்பம்' எனும் சொல் அமைந்தது.

**3. சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்விடங்களின் பெயர்களைக் கூறுக.**
- இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலியன, சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்விடங்களின் பெயர்களாகும்.

**4. அகநானூற்றுப் பாடல் 'மனை' என்பதை எவ்வாறு பிரித்துப் பேசுகிறது?**
- மனைவியின் இல்லத்தைத் '**தம்மனை**' என்றும், கணவனின் இல்லத்தை '**நும்மனை**' என்றும் அகநானூற்று மருதத்திணைப் பாடல் பிரித்துப் பேசுகிறது.

**5. தாயமுறை என்பது என்ன?**
- சங்க காலத்தில் திருமணம் செய்த பின்னரும், பெண் தன் இல்லத்திலேயே வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தும் முறை இருந்துள்ளது. அதாவது, மனைவியின் இல்லத்திற்குக் கணவன் சென்று வாழ்வது நடைமுறையாக இருந்துள்ளது. இதுவே, 'தாயமுறை' எனப்பட்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**6. 'மணந்தகம்' என்றால் என்ன?**

- குடும்பத்தின் தொடக்கமாகத் திருமணம் புரிந்த கணவனும் மனைவியும் இல்லற வாழ்வில் சேர்ந்து ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே, 'மணந்தகம்' எனப்படுகிறது.
- தனக்குரிய உருவாக்கத்தின் தொடக்க நிலையான இது, முதல் குழந்தை பிறக்கும் வரையிலான காலக்கட்டத்தையும் குறிக்கிறது.

**7. சிலம்புகழி நோன்பு என்பது என்ன?**

- திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனுடைய தந்தை இல்லத்திற்கு வாழ வந்தபோது, அவனுடைய தாய், பெண்ணிற்குப் பூச்சூட்டி, பழைய கன்னிச் சிலம்புகளைக் களைந்து, புதுச்சிலம்பு பூட்டுவது 'சிலம்புகழி' நோன்பாகும்.

**8. சங்க காலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை இருந்துள்ளமையை எவ்வாறு அறியலாம்?**

- தந்தைவழிக் குடும்பமுறை, சங்க காலத்தில் மிகவும் வலுவான, ஒரு பரவலான முறையாக இருந்துள்ளது. அதனைப் பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் என்னும் பல்வேறு சமூகக் களங்களில் காணமுடிகிறது.

**9. நேர்வழி விரிந்த குடும்பமுறை என்றால் என்ன?**

- கணவன், மனைவி, மகன் ஆகியோருடன், பெற்றோர் ஒருவரின் தந்தையும் சேர்ந்து வாழ்வதே, நேர்வழி விரிந்த குடும்பமுறை எனப்படும்.

**10. சங்ககால மக்கள் இல்வாழ்வின் பயன் என எதைக் கருதினார்கள்?**

- மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறங் காத்தலே, இல்லறவாழ்வின் பயனாகும் எனச் சங்ககால மக்கள் கருதினார்கள்.

**11. இன்றைய சமூக அமைப்பு எவ்வாறு உள்ளது?**

- கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாகவும், தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாகவும் இன்றைய சமூக அமைப்பு இருக்கிறது.

**12. தாய்வழிச் சொத்துகள் யாருக்குப் போய்ச் சேர்ந்தன?**

- தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத் தொடர்ச்சிக்கு உரியவர்களாய் இருந்தனர். பெண் குழந்தைகளின் பேறு, முதன்மையாக விரும்பப்பட்டது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

**13. தமிழர் பரம்பரைக் குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.**

- ஒரு குடும்பத்தின் பழமைதொட்டுப் பிற்கால நிலைவரை தொடரும் உறவுமுறைப் பெயர்கள் :
- பரன், பரை; சேயோன், சேயோள்; ஓட்டன், ஓட்டி; பூட்டன், பூட்டி; பாட்டன், பாட்டி; தந்தை, தாய்; நாம்; மகன், மகள்; பெயரன், பெயர்த்தி; கொள்ளுப் பெயரன், கொள்ளுப் பெயர்த்தி; எள்ளுப் பெயரன், எள்ளுப் பெயர்த்தி என, உறவுமுறைப் பெயர்கள் தமிழர் பரம்பரை வழக்கில் உள்ளன.

## சிறுவினாக்கள்

**1. தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளை விவரிக்கவும். (Mar.-23)**

- சங்ககாலத்தில் தாயே கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றிருந்தாள். குலத் தொடர்ச்சியும் தாய் வழியாகவே குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேர நாட்டு மருமக்கள் தாயமுறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சங்கப்பாடல் தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டதும் தாய்வழிச் சமூகத்தின் நிலையை உறுதிப்படுத்துகின்றன.
- திருமணம் செய்த பின்னரும், பெண் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை சங்ககாலத்தில் இருந்துள்ளது.
- திருமணத்திற்குப்பின்னர், கணவன் மனைவியின் இல்லத்தில் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது. குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் தாய்வழி முறையில் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்னும் இவையே தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. வாழிடம் பற்றிச் சங்க இலக்கியம் கூறுவது யாது?**

- தொல்காப்பியம் இல், மனை என்னும் இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள், வாழிடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.
- அகநானூற்று மருதநிலப் பாடல் ஒன்று, மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் முறையே தம்மனை, நும்மனை எனப் பிரித்துப் பேசுகிறது. புறநானூற்றுப் பாடல், தற்காலிகத் தங்குமிடத்தைப் 'புக்கில்' எனவும், திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் பெற்றோரைப் பிரிந்து தனியே வாழ்ந்த இடத்தைத் தன்மனை' எனவும் குறிப்பிடுகிறது.
- 'மனை' என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளது. நம்மனை, தம்மனை, எம்மனை, இம்மனை, உம்மனை, நின்மனை, நுந்தைமனை, நன்மனை, வறுமனை, வளமனை, இடிமனை, தாய்மனை என்பன, சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

## கவிதைப்பேழை

# விருந்தினர் இல்லம்

### பலவுள் தெரிக

1. எந்த மொழியில் இருந்தாலும், பண்பாட்டை வலியுறுத்துவன ______.

அ) திரைப்படங்கள் ஆ) சிறுகதைகள் இ) பாட்டுகள் ஈ) இலக்கியங்கள்

**விடை : ஈ) இலக்கியங்கள்**

2. 'மஸ்னவி' என்பது ______.

அ) ஆப்கானியள இலக்கியம்

ஆ) சத்தியமூர்த்தியின் மொழிபெயர்ப்பு

இ) ஜலாலுத்தீன் ரூமியின் சூஃபி தத்துவப்படைப்பு

ஈ) பண்பாட்டை வலியுறுத்தும் இலக்கியம்

**விடை : இ) ஜலாலுத்தீன் ரூமியின் சூஃபி தத்துவப்படைப்பு**

### குறுவினாக்கள்

**1. எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாரை?** (May - 22)

★ மகிழ்ச்சி, மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு ஆகியவற்றை எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்.

**2. எவற்றையெல்லாம் வாசலுக்குச் சென்று வரவேற்க வேண்டுமென ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்?** (PTA -1,4)

- வக்கிரம், வஞ்சனை, அவமானம் ஆகியவற்றை வாசலுக்கே சென்று வரவேற்க வேண்டும் என ஜலாலுத்தீன் குறிப்பிடுகிறார்.

**3. எப்பண்பாடு வளர வேண்டும்?**

- நம்மை வந்தடைபவற்றை வேறுபடுத்தாமல் ஏற்றுக் கொண்டு, அவற்றிலிருந்து நல்லனவற்றைக் கற்றுக் கொள்ளும் பண்பாடு வளர வேண்டும்.

**4. ஜலாலுத்தீன் ரூமி என்பவர் யார்?**

- ஆப்கானிஸ்தான் நாட்டில் கி. பி. 1207இல் பிறந்த ஜலாலுத்தீன் ரூமி, பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர் ஆவார். மஸ்னவி, திவான்–ஈ– ஷம்ஸ்– ஈ– தப்ரீஸி என்பவை, இவர் இயற்றிய நூல்கள்.

**5. மஸ்னவி – குறித்து அறிவன யாவை?**

- 'மஸ்னவி' என்பது, ஆழமான ஆன்மிகக் கருத்துகள் நிரம்பிய இசைக் கவிதைகளின் தொகுப்பு.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**6. 'தாகங்கொண்ட மீனொன்று' – விளக்குக.**

- பாரசீகக் கவிஞரான ஜலாலுத்தீன் ரூமியின் கவிதை களுள் தேர்ந்தெடுத்த சில கவிதைகளை **'கோல்மன் பர்க்ஸ்'** என்பார், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றை என். சத்தியமூர்த்தி, **'தாகம் கொண்ட மீன் ஒன்று'** என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்துள்ளார். இத்தொகுப்பின் ஒரு பாடலே, **'விருந்தினர் இல்லம்'** என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

## சிறுவினாக்கள்

**1. எவ்விருந்தினரைக் கௌரவமாக நடத்தவேண்டும்? ஏன்?**

- எதிர்பாராமலே வருகின்ற ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு என்னும் விருந்தினரை வரவேற்று, விருந்தோம்ப வேண்டும்.
- துக்கங்களின் கூட்டமாக, வீட்டைத் துப்புரவாக வெறுமைப்படுத்தும்போதும், ஒவ்வொரு விருந்தினரையும் கௌரவமாக நடத்தவேண்டும். ஏனென்றால், அவை உன்னைப் புதியதோர் உவகைக்காக, தூசி தட்டித் தயார்படுத்தக் கூடும் என்கிறார் ஜலாலுத்தீன் ரூமி.

**2. ஜலாலுத்தீன் ரூமி குறித்து நீ அறிவன யாவை?**

- என். சத்தியமூர்த்தி தமிழில் மொழிபெயர்த்த **'தாகம் கொண்ட மீன் ஒன்று'** என்னும் நூலிலிருந்து பாடமாக அமைந்த **'விருந்தினர் இல்லம்'** என்னும் கவிதை வாயிலாக, ஜலாலுத்தீன் ரூமி குறித்து அறியமுடிந்தது. இவர், பாரசீகக் கவிஞர்களில் மிகச் சிறந்தவர்.
- இவரது 'மஸ்னவி' என்னும் படைப்பு, 25,600 பாடல் களைக் கொண்டது. **'மஸ்னவி'**, ஆழமான ஆன்மிகக் கருத்துகள் நிரம்பிய இசைக் கவிதைகளின் தொகுப்பு.

## கவிதைப்பேழை

# கம்பராமாயணம்

## பலவுள் தெரிக

1. சரியானதைத் தேர்க. **(PTA - 5)**

அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் புறப்பட்டான்.

**விடை : இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.**

2. 'குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்' இங்கு குறிப்பிடப்படுபவர் ______. **(PTA - 5)**

அ) வாலி ஆ) சுக்ரீவன் இ) வீடணன் ஈ) குகன்

**விடை : ஆ) சுக்ரீவன்**

3. "உவாஉற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – 'உவா' என்பதன் பொருள் ______. **(Dept., Sep. - 20)**

அ) சந்திரன் ஆ) சூரியன் இ) பௌர்ணமி ஈ) அமாவாசை

**விடை : ஈ) அமாவாசை**

4. 'அருங்கானம்' – புணர்ச்சிவிதி தருக. **(Mar.-20)**

அ) ஈறுபோதல், ஆதிநீடல் ஆ) ஈறுபோதல், இணையவும் பண்பிற்கு இயல்பே
இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல்

**விடை : இ) ஈறுபோதல், இனமிகல்**

5. வேடுவர் தலைவன் ______ ஆவான். **(May-22)**

அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) வீடணன்

**விடை : ஆ) குகன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. ‘தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ______.
அ) யாவரும் கேளிர் ஆ) சிறியோரை இகழ்தல் இலமே
இ) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஈ) காக்கை குருவி எங்கள் சாதி
**விடை : ஈ) காக்கை குருவி எங்கள் சாதி**

7. “அமலனும் உரை நேர்வான்” ‘அமலன்’ எனக் குறிப்பிடப் பட்டவன் ______.
அ) குகன் ஆ) பரதன் இ) இராமன் ஈ) இலக்குவன்
**விடை : இ) இராமன்**

8. ‘இன்னுரை’ என்பது ______ எனப் பிரியும்.
அ) இன் + னுரை ஆ) இன் + உரை இ) இனிமை + உரை ஈ) இனி + உரை
**விடை : இ) இனிமை + உரை**

9. ‘நன்னுதலவள்’ என்னும் தொடர், _______ எனப் பிரியும்.
அ) நன் + னுதலாள் ஆ) நல் + நுதலவள்
இ) நல்ல + நுதலவள் ஈ) நன்மை+நுதல்+அவள்
**விடை : ஈ) நன்மை + நுதல் + அவள்**

10. ‘நளிர்கடல்’ என்பதற்கு இலக்கணக்குறிப்பு ______.
அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை
**விடை : ஈ) வினைத்தொகை**

11. ‘துன்பு உளது எனின் அன்றோ, சுகம் உளது?’ யார், யாரிடம் கூறியது?
அ) குகன் இராமனிடம் கூறியது ஆ) பரதன் குகனிடம் கூறியது
இ) இராமன் இலக்குவனிடம் கூறியது ஈ) இராமன் குகனிடம் கூறியது
**விடை : ஈ) இராமன், குகனிடம் கூறியது.**

12. ‘இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்’ – இதில் குறிக்கப்பட்ட ஐந்தாவது நபர் யார்?
அ) சடாயு ஆ) சுக்ரீவன் இ) குகன் ஈ) வீடணன்
**விடை : இ) குகன்**

13. ‘இன்னுரை’ என்பது ______ எனப் பிரியும்.
அ) இன் + உரை அ) இன் + னுரை இ) இனிய + உரை ஈ) இனிமை + உரை
**விடை : ஈ) இனிமை + உரை**

14. இராம இலக்குவரிடம் சுக்ரீவனை அழைத்து வந்தது ______.
அ) சடாயு ஆ) சவரி இ) குகன் ஈ) அனுமன்
**விடை : ஈ) அனுமன்**

15. ‘புதல்வரால் பொலிந்தான் நுந்தை’ – இதில், ‘நுந்தை’ எனக் குறிப்பிடப்பட்டவன் ______.
அ) குகன் ஆ) இராவணன் இ) சடாயு ஈ) தசரதன்
**விடை : ஈ) தசரதன்**

16. அ. யாவரும் கேளிர் – 1. தமிழர் உயிர்ப் பண்பின் முதிர்ச்சி
ஆ. சிறியோரை இகழ்தல் இலமே – 2. தமிழர் நற்பண்பின் மலர்ச்சி
இ. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் – 3. தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி
ஈ. காக்கை குருவி எங்கள் சாதி – 4. தமிழர் நற்பண்பின் வளர்ச்சி
அ) 4, 1, 2, 3 ஆ) 4, 2, 3, 1 இ) 4, 2, 1, 3 ஈ) 3, 2, 1, 4
**விடை : இ) 4, 2, 1, 3**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **குகன் குறித்து நீ அறிவன யாவை?**
   - வேடுவர் தலைவன் குகன்; பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன்;
   - இராமன் காட்டிற்குச் சென்றபோது, கங்கையைக் கடக்க உதவியவன்.
   - பேரரசனாக இருந்தும், அன்பினால் நட்பு முகிழ்ந்த இராமன், வேடுவனான குகனை உடன்பிறந்தானாக ஏற்றான். இராமன் இளவல் பரதனும், குகனைத் தனக்கு மூத்தவனாக ஏற்றான்.

2. **குகனுடன் இராமன் எவ்வாறு உறவு பாராட்டினான்?**
   - தான் காடு செல்வதால் வருந்திய குகனை நோக்கி இராமன், “இப்பிரிவை எண்ணி வருந்தாதே! இதுவரை நாங்கள் உடன்பிறந்தார் நால்வராக இருந்தோம்.
   - இப்போது உன்னையும் சேர்த்து, உடன்பிறந்தார் ஐவரானோம்” என்று, உறவு பாராட்டி ஆறுதல் கூறினான்.

3. **சடாயு குறித்து நீ அறிவன யாவை?**
   - கழுகு வேந்தன் சடாயு, இராமனின் தந்தை தயரதனுக்கு நண்பன்.
   - சீதையைச் சிறை எடுத்துவந்த இராவணனைத் தடுத்துப் போரிட்டுக் காயப்பட்டு வீழ்ந்தவன்.
   - இராமன் தேடிவரும்வரை காத்திருந்து, நடந்ததைக் கூறியபின் உயிர்விட்டவன்.
   - தந்தை நிலையில் வைத்து இராமனால் இறுதிச் சடங்குகள் செய்யப்பெற்றவன்.

4. **சவரி குறித்து அறிந்த செய்திகளை எழுதுக.**
   - இராமனிடம் பக்தி கலந்த அன்பு கொண்டவள் சவரி. சீதையைத் தேடிவந்த, இராமனின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில், சுக்கிரீவனுடன் நட்பு கொள்ளச் செய்தவள்.
   - இராம இலக்குவரை வரவேற்று விருந்துபசாரம் செய்த சவரியிடம், இராமன் தாயன்பைப் பெற்றான்.

5. **அமுது இழி அருவிக் கண்ணாள் யார்? அவள் கூறியது என்ன?**
   - அன்பின் கனிவால் அருவி இழிவதுபோல் கண்ணீர் வடித்தவள் சவரி.
   - இராமனைக் கண்ட மகிழ்ச்சியில், “என் பொய்யான உலகப்பற்று அழிந்தது.
   - அளவற்ற காலம் நான் மேற்கொண்ட தவம் பலித்தது. என் பிறவி ஒழிந்தது” என்றாள்.

6. **சுக்ரீவனை இராமன் எவ்வாறு நண்பனாக ஏற்றான்?**
   - சீதையைத் தேடி வந்த இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான்.
   - அந்தச் சுக்ரீவனை இராமன், நண்பனாக ஏற்றுக் கொண்டான்.

7. **சுக்ரீவனை உயிர்த்துணையாய் ஏற்ற இராமன் கூறியது என்ன?**
   - சுக்ரீவனை உயிர்த்துணையால் ஏற்ற இராமன், “இனி, விண்ணிலும் மண்ணிலும் உன் பகைவர், என் பகைவர்; உன் நண்பர், என் நண்பர்;
   - உன் உறவினர், என் உறவினர்; என் சுற்றம், உன் சுற்றம்.
   - நீ என் உயிர்த்துணைவன்” என்று கூறி நட்பை உறுதி செய்தான்.

8. **வீடணன் யார்? இராமனை அடைக்கலம் புகுந்தது ஏன்?**
   - இலங்கை வேந்தன் இராவணனுக்குத் தம்பி வீடணன்.
   - இராவணனிடம் சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என, வீடணன் கூறினான்.
   - அதனை ஏற்காத இராவணன், இழிமொழிகள் கூறி, வீடணனைக் கடிந்து உரைத்தான்.
   - அதனால், இலங்கையை விட்டு நீங்கிய வீடணன், இராமனைத் தேடிவந்து, அடைக்கலம் வேண்டினான்.

9. **அடைக்கலம் வேண்டி வந்த வீடணனுக்கு இராமன் எதனைக் கொடுத்தான்?**
   - அடைக்கலம் வேண்டி வந்த வீடணனிடம், “ஈரேழாகிய பதினான்கு உலகங்களும் என் பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம்வரை, ஆழமான கடல் நடுவே அமைந்த அரக்கர் வாழ் இலங்கை அரசாட்சி உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்” என்று கூறினான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. **காவிய இராமனைக் கம்பன் எப்பண்புகளின் படிமமாகப் படைத்துள்ளான்?**

- "யாவரும் கேளிர், சிறியோரை இகழ்தல் இலமே, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். காக்கை குருவி எங்கள் ஜாதி" என்னும் பண்புகளின் படிமமாக, இராமனைக் கம்பன் படைத்துள்ளான்.

11. **இராமன் எவற்றை எல்லாம் கடந்து தன் அன்பை விரிவுபடுத்துகிறான்?**

- தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியமாகிய எல்லைகள் அனைத்தையும் கடந்து வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகளைக் கடந்து, இராமன் தன் அன்பின் எல்லையை விரிவுபடுத்துகிறான்.

12. **கம்பராமாயணம் எவ்வாறு போற்றப்படுகிறது?**

- கவிச்சக்கரவர்த்தி கம்பர், தாம் இயற்றிய நூலுக்கு 'இராமகாதை' என்றே பெயர் சூட்டினார்.
- கம்பனது கவிநலத்தின் காரணமாக இது, 'கம்பராமாயணம்' என்றே அழைக்கப்படுகிறது.
- பன்னிரண்டாம் நூற்றாண்டு முதலே, மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுகிறது.

13. **கம்பர் – சிறு குறிப்பு வரைக.**

- கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தார். இவர் தந்தை ஆதித்தர். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல். இவர் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- கம்பராமாயணம் எழுதப்பட்ட காலந்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே காரணம்.

## சிறுவினாக்கள்

1. **"அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : அயோத்தியா காண்டத்தின் குகப் படலத்துள், வேடுவர் தலைவன் குகனிடத்தில் பேரரசனாயினும், கானகம் சென்ற இராமன் கூறியதாக இத்தொடர் இடம் பெற்றுள்ளது.

**விளக்கம்** : கங்கையைக் கடக்க உதவிய குகன், 'இராமன் காட்டிற்குச் சென்று வருந்துவானே' என எண்ணியபோது, இராமன், "குகனே! துன்பம் என ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும்! இப்போது நம்மிடையே பிரிவு நேரிடுகிறதே என்று எண்ணாதே. நாங்கள் இதுவரை உடன்பிறந்தார் நால்வராக இருந்தோம்! உறவு என்பது எங்கள் நால்வரோடு முடிவதில்லை. இப்போது அன்பினால் இணைந்த உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம்" என்று கூறி, உறவை உறுதிப்படுத்தினான்.

2. **"தீது இன்றி இருந்தனை போலும்" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : ஆரணிய காண்டம் 'சவரி பிறப்பு நீங்கு படலம்' பகுதியில் சவரியைச் சந்தித்த இராமன், தன்பால் சவரி கொண்ட அன்பையும் பக்தியையும் கண்டு மகிழ்ந்து, தாயென அன்பு காட்டிப் பரிவுடன் பேசியது இது.

**விளக்கம்** : சீதையைக் காணாது காட்டில் அலைந்து திரிந்த இராமன், அன்பும் பக்தியும் நிறைந்த சவரியைக் கண்டான். தாய்போல் பாசம் காட்டிய சவரி, இராமனின் வாழ்வில் ஒரு திருப்பத்தை உண்டாக்கும் வகையில், சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு கூறினாள். தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம் இராமன், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா" என்று, பரிவுடன் கேட்டான்.

3. **"நீ என் இன்னுயிர்த் துணைவன்" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : கிட்கிந்தா காண்டத்தின் நட்புகோட் படலத்தில், அனுமனால் சுக்ரீவனைக் கண்ட இராமன் கூறிய கூற்று இது.

**விளக்கம்** : சீதையைத் தேடிக் கானகத்தில் அலைந்தபோது, அனுமன் அழைத்துவந்த சுக்ரீவனைச் சந்தித்து நண்பனாக ஏற்றான். அரக்கர்களை அழித்து, அறத்தை உலகில் நிலைநாட்ட இராமனும் சுக்ரீவனும் இணைந்தனர். அப்போது சுக்ரீவனிடம் இராமன், "இனி நான் உரைப்பதற்கு என்ன இருக்கிறது? இம்மண்ணிலும் விண்ணிலும் இருக்கும் உன் பகைவர் என் பகைவராவர். தீயவராக இருப்பினும், உன் நண்பர் எனக்கு உற்ற நண்பராவர். உன் உறவினர் என் உறவினராவர். அன்பு மிகுந்த என் சுற்றத்தவர், உனக்குச் சுற்றத்தவராவர்! நீ என் இனிய உயிர்த் துணைவனாவாய்" என்று கூறினான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. கம்பராமாயணம் – குறிப்பு வரைக.**

- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு 'இராமாவதாரம்' என்றே பெயரிட்டார்.
- அயோத்யா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோருடன், இராமன் கொண்ட உறவு பற்றிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- கம்பராமாயணம், பல்வேறு விதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது, சமமாக அன்பு காட்டும் பாத்திரமாக இந்நூலில் படைக்கப்பட்டிருக்கிறான்.
- இந்நூல் எழுதப்பட்ட காலந்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் காரணம், கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே.

**5. அடைக்கலம் புகுந்த வீடணனுக்கு இராமன் அளித்த உறுதிமொழி யாது?**

- சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என வீடணன் கூறியதால், அவனை அண்ணன் இராவணன் கடிந்து உரைத்தான். எனவே, வீடணன் இலங்கையைவிட்டு வெளியேறி, இராமன் இருக்குமிடம் அடைந்து, அடைக்கலம் வேண்டினான்.
- தன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனை அணைத்து, "ஆழமான கடல் நடுவே உள்ளதும், அரக்கர்கள் வாழ்வதுமான இலங்கையின் ஆட்சி உரிமையை, ஈரேழு பதினான்கு உலகங்களும் என் பெயரும் நிலைத்துள்ள காலம்வரை உனக்கே தந்தேன்" என்று, இராமன் உறுதியளித்தான்.

## நெடுவினா

**இராமனிடம் வெளிப்படும் உடன்பிறப்பியப் பண்பினைக் கம்பராமாயணம் வழிநின்று விளக்குக (Sep.-20)**

**முன்னுரை :**

குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் என்று அனைவரிடத்திலும் இராமன் கொண்டிருந்த உறவுநிலை, கம்பராமாயணத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. "தன்னைப்போலப் பிறரை நினை" என்னும் கூற்றை மெய்ப்பிப்பதுபோல் அமைந்த இராமனின் வாழ்க்கையைப் பற்றி, இப்பகுதி தெளிவாக எடுத்துரைக்கிறது.

**குகன் :**

வேடுவர் தலைவன் குகன்; பாறை உடலையும், பஞ்சுபோன்ற மென்மையான உள்ளத்தையும் கொண்டவன்; காட்டிற்குச் சென்ற இராமனுக்குக் கங்கை நதியைக் கடக்க உதவுகிறான். குகனுக்கும் இராமனுக்கும் இங்கு நட்புறவு உருவாகிறது. அதனால், பேரரசனான இராமன், வேடனான குகனைத் தன் உடன்பிறந்தவனாக ஏற்றுக்கொள்கிறான்.

**சடாயு :**

கழுகுகளின் அரசன் சடாயு. சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது, சடாயு அவனைத் தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமன் சந்தித்தபோது, இராமனிடம் நடந்தவற்றைக் கூறியபின் உயிர்விடுகிறான். தன் தந்தையின் நண்பனான கழுகு வேந்தன் சடாயுவைத் தன் சொந்தத் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் தன்னை நிறுத்தி, அச்சடாயுவுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான் இராமன்.

**சவரி :**

இராமனிடம் மிகுதியான அன்பையும், பக்தியையும் கொண்டவள் சவரி. சீதையைத் தேடி வந்த இராமனைச் சுக்ரீவனுடன் நட்புகொள்ளுமாறு, செய்தவள் இந்தச் சவரி. இவ்வகையில் காப்பியத்தின் போக்கில், ஒரு நல்ல திருப்பத்தை உருவாக்கியவள் சவரி.

**சுக்ரீவன் :**

சீதையைத் தேடி வந்த இராமஇலக்குவரைச் சந்தித்த அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். வானரனாயினும் சுக்ரீவனிடம் இராமன், "உன் சுற்றம் என் சுற்றம். இனி நீ வேறு நான் வேறு அல்ல" என்று கூறி, அவனைத் தன் உறவாக ஏற்றுக் கொள்கிறான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வீடணன் :**

சீதையைக் கவர்ந்தது தவறெனத் தன் அண்ணன் இராவணனிடம் கடிந்து உரைத்து, அவனைப் பிரிந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான். அவனையும் இராமன் தன் உடன்பிறந்தவனாக ஏற்று, இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான்.

**முடிவுரை :**

அனைத்து உயிர்களையும் நேசிக்கும் பண்புடைய இராமன், வேடுவன் குகனைத் தன் உடன்பிறப்பாகவும், சடாயுவைத் தன் தந்தையாகவும், சவரியைத் தன் தாயாகவும், சுக்ரீவனைத் தன் உறவினனாகவும், வீடணனைச் சகோதரனாகவும் ஏற்றுக்கொண்டு பண்பின் சிகரமாக விளங்குகிறான்.

## இலக்கணக்குறிப்பு

**தடக்கை** – உரிச்சொற்றொடர்

**நளிர்கடல், இழிஅருவி** – வினைத்தொகைகள்

**நோற்கும்** சவரி – பெயரெச்சம்

**தாவா** வலி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பொலிந்தான்** – படர்க்கை ஆண்பால் இறந்தகால வினைமுற்று

**வலிஅரக்கர்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**நன்னுதல், இன்னுரை, அருங்கானம்** – பண்புத்தொகைகள்

## உறுப்பிலக்கணம்

1. **தந்து – தா (த) + த் (ந்) + த் + உ**

**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்;
**த்** – இறந்தகால இடைநிலை;
**உ** – வினையெச்ச விகுதி.

2. **தந்தேன் – தா (த) + த் (ந்) + த் + ஏன்**

**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்;
**த்** – இறந்தகால இடைநிலை;
**ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சிவிதி

1. **இன்னுரை – இனிமை + உரை**

"ஈறுபோதல்" (இனி + உரை); "இனையவும் பண்பிற்கு இயல்பே" (இன் + உரை)
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (இன்ன் + உரை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" இன்னுரை

2. **நன்னுதல் – நன்மை + நுதல்**

"ஈறுபோதல்" (நன் + நுதல்); "ணலமுன் றனவும் ஆகும் தநக்கள்" நன்னுதல்

## விரிவானம்

# உரிமைத்தாகம்

## பலவுள் தெரிக

1. 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்னும் கருத்தை உணர்த்தும் கதை ____. (PTA - 4)

அ) முதல்கல் ஆ) தலைக்குளம் இ) உரிமைத்தாகம் ஈ) கோடைமழை

**விடை : இ) உரிமைத்தாகம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. உரிமைத்தாகம் என்னும் கதையை எழுதியவர் ______. (May - 22)
அ) உத்தம சோழன் ஆ) பூமணி
இ) ஐராவதம் மகாதேவன் ஈ) முகமது மீரான்
**விடை : ஆ) பூமணி**

3. 'கிரயம்' என்ற சொல்லின் பொருள் ______.
அ) ஒப்பந்தம் ஆ) வாக்குறுதி இ) விலை ஈ) வாடகை
**விடை : இ) விலை**

4. 'அஞ்ஞாடி' என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் ______.
அ) ரா. கி. ரங்கராஜன் ஆ) புதுமைப்பித்தன் இ) பூமணி ஈ) உத்தமசோழன்
**விடை : இ) பூமணி**

5. பூமணி, ______ எழுத்தாளர்களில் ஒருவர்.
அ) நெய்தல் ஆ) கரிசல் இ) தஞ்சை ஈ) கொங்கு
**விடை : ஆ) கரிசல்**

6. 'உரிமைத்தாகம்' என்னும் சிறுகதை எடுத்துரைப்பது ______.
அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை
ஆ) வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகளை
இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை
ஈ) எதுவுமில்லை
**விடை : அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை**

7. 'கடகம்' என்ற பேச்சு வழக்குச் சொல்லின் எழுத்து வழக்குச் சொல் ______.
அ) கடவம் ஆ) பெட்டி இ) ஓலைப்பெட்டி ஈ) ஈக்கம்பெட்டி
**விடை : இ) ஓலைப்பெட்டி**

## இலக்கணம்

# பொருள் மயக்கம்

### பலவுள் தெரிக

1. **கீழ்க்காணும் தொடர்களில் தெளிவான பொருளை உணர்த்தும் தொடரைத் தேர்க.** (PTA - 5)
அ) இராமனுடன் இலக்குவனும், காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் புறப்பட்டான்.
இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
**விடை : இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.**

2. **பிழையற்ற தொடரைக் கண்டறிக.** (Mar. - 20)
அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது.
இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.
ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
**விடை : அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெற வழி யாது?**

   ➤ தமிழ்மொழியைப் பேசும்போதும், படிக்கும்போதும், எழுதும்போதும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் சில உள்ளன. அவற்றைப் பின்பற்றினால், பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெறலாம்.

2. **மொழியில் பொருள் குழப்பம் எப்போது ஏற்படும்?**

   ➤ தேவையான இடங்களில் இடைவெளி விடாமலும், தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டும் எழுதுவதனால் படிப்போர்க்கும், பேசுவதனால் கேட்போர்க்கும் மொழியில் பொருள் குழப்பம் ஏற்படும்.

3. **உரையாடும்போது பொருள் குழப்பம் ஏற்படாமைக்குக் காரணம் யாது?**

   ➤ உரையாடும்போது, குரலின் ஏற்ற இறக்கம், சொற்களின் அழுத்தம் அல்லது குழைவு, இறுதிச் சொல்லின் உணர்ச்சி ஆகியவற்றால், பொருள் உணர்வில் எந்தக் குழப்பமும், பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

4. **எழுதும்போது பொருள்குழப்பம் ஏற்படக் காரணம் என்ன?**

   ➤ எழுதும்போது, காற்புள்ளி முதலான நிறுத்தக் குறிகளை உரிய இடத்தில் இடாமையாலும், மாற்றி இடுவதனாலும், தொடருக்குரிய முழுமையான பொருளை உணரமுடியாது.

   **எ – கா :** அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.

   (‘அந்தப்பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள்’ என்பது பொருள்.)

   அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.

   (‘அந்தப் பெண்ணின் அக்காள், அவளது வீட்டிற்குச் சென்றாள்’ என்பது பொருள்.)

5. **சொல்லுருபை எவ்வாறு எழுதவேண்டும்? ஏன்?**

   ➤ தொடர்களை எழுதும்போது, சொற்களின் தெளிவான பொருளை உணர்த்தச் சொல்லுருபைச் சேர்த்தே எழுதவேண்டும்.

   **எ – கா :** வீட்டிலிருந்து சென்றான்.

   ➤ சொல்லுருபைப் பிரித்து எழுதினால், பொருள் வேறுபட்டு, மயக்கம் தரும்.

   **எ – கா :** வீட்டில் இருந்து சென்றான். (வீட்டில் இருந்துவிட்டுச் சென்றான் என்றாகிவிடும்.)

6. **தொடர்கள் எவ்வாறு அமைதல் வேண்டும். ஏன்?**

   ➤ ஒவ்வொரு தொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியன அமைந்திருக்கும்.

   **எ – கா :** இராமன் காட்டிற்குச் சென்றான்.

   ➤ சில தொடர்களில் எழுவாய் மறைந்து வரும்.

   **எ – கா :** பாடம் படித்தேன்.

   ➤ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன, முறையாக அமைந்தால், தொடர்களின் பொருள் தெளிவாகப் புரியும்.

7. **“ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்” – இத்தொடரில் அமைந்த பிழை யாது?**

   ➤ இத்தொடரில் பொருள்பிழை அமைந்துள்ளது. அதாவது, ‘தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார்’ என்னும் தவறான பொருளைத் தருகிறது.

   ➤ (சரியான) தெளிவான பொருளைத் தர, ‘மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக, ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்’ என, அமைதல் வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. இலக்கணப் பிழை தவிர்க்கச் சில குறிப்புகளைக் கூறுக.**

ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழக வேண்டும். சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுவது, சிறந்த பயிற்சியாக அமையும். மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாததாகும். சில விதிமுறைகளை மனத்துள் பொதிந்து வைத்தல் வேண்டும். எழுதியதைத் திரும்பத்திரும்பப் படித்துப் பார்த்துப் பிழை இருப்பின், திருத்துவது இன்றியமையாததாகும்.

**கீழ்க்காணும் தொடர்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று.
   தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று.
2. கண்ணனன், தான் எழுதியதாகச் சொன்னான்.
   கண்ணன்தான் எழுதியதாகச் சொன்னான்.
3. சில குறைகளை மக்கள்முன் வைத்தனர்.
   சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்.
4. நேற்றுமுதல் அமைச்சர் வந்தார்.
   நேற்று முதலமைச்சர் வந்தார்.
5. இராமன் பால் அன்பு கொண்டவள் சவரி.
   இராமன்பால் அன்பு கொண்டவள் சவரி.
6. ஊரின் கண்உள்ளது வீடு.
   ஊரின்கண் உள்ளது வீடு.
7. புத்தகத்தில் காணும் படி கூறினான்.
   புத்தகத்தில் காணும்படி கூறினான்.
8. மணி அடித்து ஒலி எழுப்பு.
   மணியடித்து ஒலியெழுப்பு.
9. பூக் களில் வண்டு கள்மொய்த்தன.
   பூக்களில் வண்டுகள் மொய்த்தன.
10. சட சடவென முறிந்த மரத்தின் கண்ணிருந்த பறவைகள் பட படவெனப் பறந்தன.
    சடசடவென முறிந்த மரத்தின்கண்ணிருந்த பறவைகள், படபடவெனப் பறந்தன.
11. கோவலன், மதுரைக்குச் சென்றது.
    கோவலன், மதுரைக்குச் சென்றான்.
12. பறவைகள், நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.
    பறவைகள், நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றன.
13. குதிரையும் யானையும் வேகமாக ஒடியது.
    குதிரையும் யானையும் வேகமாக ஓடின.
14. அவன், வெண்மதியிடம் பேசினாய்.
    அவன், வெண்மதியிடம் பேசினான்.
15. சென்னையிலிருந்து நேற்று வருகிறான்.
    சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
16. எனது மகன் திருநிறைச் செல்வன் குமரனுக்கும் வேல்சாமியது மகள் திருநிறைச் செல்வி அமுதாவுக்கும் நடைபெறும் கல்யாணத்திற்கு வந்து வாழ்த்தக் கோருகிறேன்.
    என் மகன் திருநிறை செல்வன் குமரனுக்கும் வேல்சாமி மகள் திருநிறை செல்வி அமுதாவுக்கும் நடைபெறும் கலியாணத்திற்கு வந்து, வாழ்த்தக் கோருகிறேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### வாழ்வியல்

# திருக்குறள்

### பலவுள் தெரிக

1. ஞாலத்தின் மாணப் பெரிது ______. (PTA - 3)
அ) செய்யாமல் செய்த உதவி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) காலத்தினால் செய்த நன்றி
ஈ) விலைப்பொருட்டால் ஊன் தருதல்
விடை : இ) காலத்தினால் செய்த நன்றி

2. திருக்குறளில் அமைந்த இயல்களின் மொத்த எண்ணிக்கை ______. (May-22)
அ) ஒன்பது ஆ) ஏழு இ) மூன்று ஈ) ஐந்து
விடை : அ) ஒன்பது

3. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு : (Mar.-23)
அ) 1816 ஆ) 1812 இ) 1815 ஈ) 1824
விடை : ஆ) 1812

4. முயல்வாருள் எல்லாம் தலையாயவன் ______.
அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
ஆ) செய்யாமல் உதவி செய்பவன்
இ) இலமென்று வெஃகுதல் செய்யாதவன்
ஈ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்
விடை : ஈ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்

5. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுபவர் ______.
அ) இலமென்று வெஃகுதல் செய்யாதவர்
ஆ) பயன் தூக்காது உதவி செய்பவர்
இ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
ஈ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவர்
விடை : இ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்

6. பயன்தூக்கார் செய்த உதவி ______.
அ) வையகமும் வானகமும் ஆற்ற லரிது
ஆ) ஞாலத்தின் மாணப் பெரிது
இ) பனைத்துணையாக் கொள்வர்
ஈ) நன்மை கடலின் பெரிது
விடை : ஈ) நன்மை கடலின் பெரிது

7. பயன்தெரிவார் பனைத்துணையாக் கொள்வது ______.
அ) செய்யாமல் செய்த உதவியை
ஆ) காலத்தினால் செய்த நன்றியை
இ) பயன்தூக்கார் செய்த உதவியை
ஈ) தினைத்துணை நன்றியை
விடை : ஈ) தினைத்துணை நன்றியை

8. எதை அன்றே மறப்பது நன்று?
அ) தினைத்துணை நன்றியை
ஆ) பனைத்துணை நன்றியை
இ) நன்றல்லதை
ஈ) காலத்தினால் செய்த நன்றியை
விடை : இ) நன்றல்லதை

9. யாருக்கு உய்வு இல்லை?
அ) எந்நன்றி கொன்றார்க்கும்
ஆ) நடுவன்மை நாணுபவர்க்கு
இ) இலமென்று வெஃகுதல் செய்வாற்கு
ஈ) செய்ந்நன்றி கொன்ற மகற்கு
விடை : ஈ) செய்ந்நன்றி கொன்ற மகற்கு

10. நடுவன்மை நாணுபவர், ______ செய்யார்.
அ) புன்மை ஆ) வெஃகுதல் இ) பழிப்படுவ ஈ) நன்றல
விடை : இ) பழிப்படுவ



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. புலம்வென்ற புன்மையில் காட்சியவர், ______ செய்யார்.
அ) சினம் காத்தல் ஆ) பழிப்படுவ
இ) இலம் என்று வெஃகுதல் ஈ) புலால் உண்ணல்
**விடை : இ) இலம் என்று வெஃகுதல்**

12. வெகுளியை யார்மாட்டும் ஏன் மறத்தல் வேண்டும்?
அ) நகை கொல்லுதலால் ஆ) உவகை கொல்லுதலால்
இ) தீய பிறத்தலால் ஈ) தன்னையே கொல்லுதலால்
**விடை : இ) தீய பிறத்தலால்**

13. தன்னைத்தான் காக்கின், ______ வேண்டும்.
அ) பகை காக்க ஆ) செல்லிடத்துக் காக்க
இ) இனம் காக்க ஈ) சினம் காக்க
**விடை : ஈ) சினம் காக்க**

14. உயிர்களை எதன் பொருட்டுக் கொல்கின்றனர்?
அ) கொல்வதன் பொருட்டு ஆ) விலைப் பொருட்டு
இ) உலகின் பொருட்டு ஈ) தின்னும் பொருட்டு
**விடை : ஈ) தின்னும் பொருட்டு**

15. சினம் கொல்லுவன ______.
அ) மறத்தலையும் வெகுளியையும் ஆ) தன்னையும் பிறரையும்
இ) நகையையும் உவகையையும் ஈ) பகையையும் நட்பையும்
**விடை : இ) நகையையும் உவகையையும்**

16. சினத்தைக் காக்காவிட்டால் அது ______.
அ) நகைப்பைக் கொல்லும் ஆ) உவகையைக் கொல்லும்
இ) காவாதவனைக் கொல்லும் ஈ) சேர்ந்தாரைக் கொல்லும்
**விடை : இ) காவாதவனைக் கொல்லும்**

17. ‘ஏமப் புணை’ எனக் கூறப்பட்டது ______.
அ) சினம் ஆ) மனம் இ) இனம் ஈ) தன்னை
**விடை : இ) இனம்**

18. நுண்ணிய நூல்பல கற்பினும் மிகுவது ______.
அ) புல்லறிவு ஆ) இயற்கை அறிவு இ) தெள்ளிய அறிவு ஈ) உண்மை அறிவு
**விடை : ஈ) உண்மை அறிவு**

19. திருவும், தெள்ளியர் ஆவதும் வேறுவேறு ஆதல் ______.
அ) நுண்ணிய நூல்பல கற்றலால் ஆ) உண்மை அறிவு மிகுதலால்
இ) சினத்தைக் காத்தலால் ஈ) உலகத்து இயற்கை
**விடை : ஈ) உலகத்து இயற்கை**

20. பொருத்துக.
அ) அறத்துப்பால் – 1. களவியல், கற்பியல்
ஆ) பொருட்பால் – 2. பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
இ) இன்பத்துப்பால் – 3. அரசியல், அமைச்சியல், ஒழிபியல்
அ) 1, 2, 3 ஆ) 2, 3, 1 இ) 3, 2, 1 ஈ) 1, 3, 2
**விடை : ஆ) 2, 3, 1**

21. அறத்துப்பாலில் இடம்பெற்ற இயல்கள் ______.
அ) பாயிரவியல், அரசியல் ஆ) இல்லறவியல், களவியல்
இ) துறவறவியல், ஒழிபியல் ஈ) இல்லறவியல், துறவறவியல்
**விடை : ஈ) இல்லறவியல், துறவறவியல்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22. பொருட்பாலில் இடம்பெற்ற இயல்கள் ______.
அ) அரசியல், கற்பியல் ஆ) பாயிரவியல், நட்பியல்
இ) அமைச்சியல், களவியல் ஈ) அரசியல், ஒழிபியல்
**விடை : ஈ) அரசியல், ஒழிபியல்**

23. இன்பத்துப்பாலில் இடம்பெற்ற இயல்கள் ______.
அ) கற்பியல், ஊழியல் ஆ) களவியல், துறவறவியல்
இ) களவியல், கற்பியல் ஈ) கற்பியல், குடியியல்
**விடை : இ) களவியல், கற்பியல்**

24. 'அறம், பொருள், இன்பம்' என அமைந்த முப்பாலின் அதிகார எண்ணிக்கை ______.
அ) 38, 25, 70 ஆ) 70, 38, 25 இ) 38, 70, 25 ஈ) 25, 70, 38
**விடை : இ) 38, 70, 25**

## குறுவினாக்கள்

**1. இல்வாழ்வின் பயன் எது?** (PTA - 3)
➤ அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்கு மானால், அதுவே, பண்பும் பயனுமாகும். அதாவது, இல்வாழ்வின் பயன் அறம் செய்தலாகும்.

**2. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார் எவர்?**
➤ இல்லறத்திற்கு உரிய அறநெறிப்படி உலகில் வாழ்பவர், வானுலகத்தில் உறையும் தெய்வத்திற்கு இணையாக வைக்கப்படுவார்.

**3. வையகமும் வானகமும் எதற்கு ஈடாகாது?**
➤ ஒருவர்க்குத் தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும், தனக்கு ஒருவர் செய்த உதவிக்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.

**4. கடலின் பெரிது எது?**
➤ பயன்கருதாது ஒருவர் செய்த உதவியை ஆராய்ந்தால், அதனால் விளைந்த நற்பயன், கடலைவிடவும் பெரிதாகும்.

**5. செய்த நன்றியின் பயனை அறிந்தவர் எவ்வாறு போற்றுவர்?**
➤ ஒருவர் செய்த உதவி, தினைஅளவினதாக இருந்தபோதிலும், அதன் பயனை அறிந்து தெளிந்தவர், பனை அளவினதாகக் கருதிப் போற்றுவர்.

**6. உய்வு, எவருக்கு உண்டு? எவருக்கு இல்லை?**
➤ எந்த நல்லறத்தை அழித்தவருக்கும் அதிலிருந்து தப்பிப்பிழைக்கும் உய்வு உண்டு; ஆனால், செய்த நன்றியைக் கொன்றவருக்கு உய்வு இல்லையாம்.

**7. நடுவுநிலைமையைக் கைவிட நாணுபவர் எதனைச் செய்யார்?**
➤ பெரும்பயன் கிடைப்பதாக இருந்தாலும், நடுவு நிலைமையைக் கைவிட நாணுபவர், பிறருக்கு உரிய பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

**8. வெஃகுதல் செய்யார் எவர்?**
➤ வறுமை காரணத்தைக் காட்டியும் ஐம்புலன்களை வென்ற தெளிவான அறிவுடையோர் பிறருக்கு உரிய பொருளை வெஃகுதலைச் (விரும்புதலை) செய்யார்.

**9. விலைப்பொருட்டால் ஊன் தருவார் எப்போது இரார்?**
➤ தின்னும் பொருட்டு உயிர்களைக் கொல்பவர் உலகில் இல்லையெனில், விலையின் (வருவாயின்) பொருட்டு ஊன் விற்பவர் எவரும் இருக்கமாட்டார்.

**10. சினங்காப்பான் எவன்?**
➤ தன் சினம் செல்லுபடியாகும் மெலியவனிடத்தில் அதனைச் செலுத்தாமல் காப்பவனே, சினம் காப்பானாவான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**11. யார்மாட்டும் வெகுளியை ஏன் மறத்தல் வேண்டும்?**

- வெகுளி என்னும் சினத்தினாலேயே தீமைகள் விளை வதனால் எவரிடத்திலும் வெகுளியை மறத்தல் வேண்டும்.

**12. சினத்தைவிடவும் பகை வேறு இல்லை – ஏன்?**

- சினம் முகமலர்ச்சியையும், அகமகிழ்ச்சியையும் கொல்லும்.
- ஆதலால், சினத்தைவிடப் பகை வேறு இல்லை.

**13. சினம் எதனைச் சுடும்?**

- சினமாகிய நெருப்பு தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும்; பாதுகாப்பாக ஒருவனுக்கு அமையும் சுற்றமாகிய தெப்பத்தையும் சுட்டு அழித்துவிடும்.

**14. உண்மை அறிவே மிகும் – எப்போது?**

- நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றிருந்தாலும், ஒருவருக்கு இயல்பாக உள்ளதாகிய உண்மை அறிவே மேலோங்கி நிற்கும்.

**15. உலகத்து இயற்கையின் வகைகள் எவை?**

- உலகில் செல்வம் உடையவர், அறிவுடையவராக இருப்பதில்லை; அறிவுடையார், செல்வம் உடையவராக இருப்பதில்லை. இவையே உலகத்தின் இருவேறு இயற்கையாகும்.

**16. திருக்குறள் – பெயர்க்காரணம் கூறுக.**

- ‘குறள்’ என்னும் இரண்டடி வெண்பாக்களால் ஆகித் ‘திரு’ என்னும் சிறப்பு அடைமொழி பெற்றதால், ‘திருக்குறள்’ எனப் பெயர் பெற்றது.

**17. பாரதியார் தமிழ்நாட்டை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?**

- “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” எனப் பாரதியார், தமிழ்நாட்டைப் புகழ்ந்துள்ளார்.

**18. பாரதிதாசன் வள்ளுவரை எவ்வாறு பாராட்டியுள்ளார்?**

- “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே” எனப் பாரதிதாசன், வள்ளுவரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

**19. திருவள்ளுவரைப் போற்றும்வகையில் அரசு செய்தன யாவை?**

- திருவள்ளுவர் நினைவைப் போற்றும்வகையில், தமிழ்நாடு அரசு, கன்னியாகுமரியில் 133அடி உயரச் சிலை அமைத்துள்ளது; வேலூரில், ‘திருவள்ளுவர் பல்கலைக்கழக’த்தை நிறுவியுள்ளது.

**20. திருக்குறள் எத்தனை இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?**

- திருக்குறள் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை : பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல், அரசியல், அமைச்சியல், ஒழிபியல், களவியல், கற்பியல்.

## சிறுவினாக்கள்

**1. நிரல் நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.** (July.-20,23)

**அணி இலக்கணம் :** ஒரு செய்யுளின் முதலில் சொன்ன வற்றோடு தொடர்புடைய பொருளை பின்னர்க் கூறும்போது, அவற்றை வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருத்திப் பொருள் கொள்ளும் முறை நிரல்நிறை அணியாகும்.

**சான்று :** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**பொருள் :** இல்லற வாழ்வை நடத்துவோர் அன்பையும் அறத்தையும் கடைப்பிடித்து ஒழுகினால், அதுவே வாழ்க்கைக்கு உரிய பண்பினையும் பயனையும் முழுமையாகத் தரும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் ‘அன்பு, அறன்’ என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் கூறிய திருவள்ளுவர், அவற்றோடு தொடர்புடைய ‘பண்பு, பயன்’ என்பனவற்றை அடுத்த வரிசையில் அதே முறையில் இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார். எனவே, இக்குறள் நிரல் நிறை அணிக்குப் பொருத்தமானதாயிற்று.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக. (Mar.-23)

**அணி** : ஏகதேச உருவக அணி

**அணிவிளக்கம்** : செய்யுளில் கூறப்பட்டுள்ளவற்றுள் ஒரு பொருளை மட்டும் உருவகப்படுத்திவிட்டு, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**சான்று** : "சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புனையைச் சுடும்.

**சான்று விளக்கம்** : சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டு அழிக்கும்.

**அணிப்பொருத்தம்** : சினத்தை நெருப்பாகவும், இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யவில்லை. இப்படி, குறளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டதால், இக்குறள் ஏகதேச உருவக அணிக்குப் பொருத்தமாயிற்று.

3. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் (Mar.-24)
ஏமப் புணையைச் சுடும். – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**பயின்று வந்துள்ள அணி** : இக்குறளில் **ஏகதேச உருவக அணி** அமைந்துள்ளது.

**அணி இலக்கணம்** : "ஒரு செய்யுளில், ஒன்றுக்கொன்று தொடர்பு உடைய பொருள்களை உருவகம் செய்யும்பொழுது, ஒன்றை உருவகம் செய்து, பிறவற்றை உருவகம் செய்யாமல் கூறுவது **ஏகதேச உருவக அணி** எனப்படும்.

**அணி விளக்கம்** : 'இனம்' என்பது 'ஏமப்புணை'யாக உருவகம் செய்யப்பட்டுள்ளது; 'சினம்' நெருப்பாகவும், 'பிறவி' கடலாகவும் உருவகம் செய்யப்படவில்லை. எனவே, இது ஏகதேச உருவக அணி அமைந்த செய்யுளாகும்.

4. 'வெஃகாமை'யின் பொருள் கூறி, அதுகுறித்த வள்ளுவர் கூறிய கருத்துகளையும் எழுதுக.

- 'வெஃகாமை' என்பதற்குத் தனக்கு உரியன அல்லாதவற்றை விரும்பாமை என்பது பொருளாகும்.
- பண்புடையோர், பெரும்பயன் கிடைப்பதாயினும், பிறர் பொருளைக் கவரும் பழிச்செயலைச் செய்யமாட்டார். தெளிந்த அறிவுடையார், தாம் வறியவர் என்னும் காரணத்தைக் காட்டியும் பிறர்க்கு உரிமையான பொருளை விரும்பமாட்டார்.
- பிறர்க்கு உரிய பொருளை விரும்பாமல் இருப்பதே, தன் செல்வம் குறையாதிருக்கச் சிறந்த வழியாகும் என்பன, 'வெஃகாமை' குறித்து வள்ளுவர் கூறிய கருத்துகளாகும்.

5. 'ஊழ்' என்பதன் பொருளைக் கூறி, அது குறித்த வள்ளுவர் கருத்துகளை எழுதுக.

- 'ஊழ்' என்பதற்குச் "செய்த நல்வினை தீவினைகளின் பயன்கள், செய்தவனையே சென்றடையும்" என்பது பொருளாகும். ஒருவர் நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றிருந்தாலும், ஊழ்வினைப் பயனால், அவருக்கு இயல்பாக உள்ள அறிவே மேலோங்கி நிற்கும்.
- உலக இயல்பு, இருவேறு வகையாய் உள்ளது. அது, 'செல்வமுடையவர் அறிவுடையவராக இருப்பதில்லை; அறிவுடையவர் செல்வமுடையவராக இருப்பதில்லை' என்பதாகும். இவையே, 'ஊழ்'குறித்து, வள்ளுவர் கூறிய செய்திகளாகும்.

6. திருக்குறள் குறித்து எழுதுக.

- உலகின் தொன்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்ற பெருமையுடையது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பாக்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் பெற்றுள்ளது.
- 'அறத்துப்பா'லானது பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களாகவும், 'பொருட்பாலா'னது அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களாகவும், 'இன்பத்துப்பா'லானது களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களாகவும் பகுக்கப்பெற்றுள்ளன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுத்தேர்வு வினாத்தாள்

## பொதுத்தமிழ்

கால அளவு:3 மணி] [மொத்த மதிப்பெண்கள்:90

### பகுதி – I

**குறிப்பு :** 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "ஆசிரிய நடைத்தே வஞ்சி" என்று கூறும் நூல்
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) அகத்தியம் ஈ) தண்டியலங்காரம்

2. "முதல்கல்" என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) பூமணி ஆ) பாரதியார்
இ) உத்தமச்சோழன் ஈ) தோப்பில் முகமது மீரான்

3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ______.
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

4. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

6. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

7. ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) குஜராத் இ) பஞ்சாப் ஈ) ஆந்திரா

8. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

9. "வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே" எனப் புகழ்ந்த பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கம்பர் ஈ) கவிமணி

10. "மலரடி" – என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) உவமைத்தொகை ஆ) உருவகம் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

11. நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர் ______.
அ) கபிலர் ஆ) ஔவையார் இ) வெள்ளிவீதியார் ஈ) அம்மூவனார்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

13. பொருத்துக.
அ) தமிழ் அழகியல் - பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - தி. சு. நடராசன்
இ) கிடை - சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - கி. ராஜநாராயணன்
அ) 4 3 2 1 ஆ) 1 4 2 3 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

14. தமிழில் திணைப்பாகுபாடு ____ அடிப்படையில் பகுக்கப் பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" - விளக்கம் தருக.
16. அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?
17. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?
18. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.
20. முறைவைப்பு - விளக்குக.
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அலை, அளை, அழை
24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
கோவில்
25. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடரமைத்து எழுதுக.
போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) விளங்கி ஆ) பொலிந்தான்
27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) இனநிரை ஆ) அருங்கானம்
28. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
29. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆண் மைய சமூகத்தில் பெண் திருமணத்திற்கு பின் தன் கணவனுடையத் தந்தையகத்தில் வாழ வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



30. கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Tips ஆ) Fiction

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.**

"பாடு"–என்னும் வேர்ச்சொல்லைப் பெயரெச்சமாக மாற்றுக.

## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
32. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. "ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.
36. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.
37. "மணந்தகம்" – விளக்குக.
38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு – 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. அ) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும் – இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) கூதிர்ப்பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.

41. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைத்து எழுதுக.
அ) முன் ஆ) விட்டான்

42. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

**– கவிமணி தேசிகவிநாயகம்**

43. கீழ்க்காணும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
அ) யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது) ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பண்டையக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4 + 2 = 6**

47. அ) "குகனோடும்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '....படும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அரையாண்டுத்தேர்வு வினாத்தாள்

## பொதுத்தமிழ்

கால அளவு:3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள்:90

### பகுதி – I

குறிப்பு : 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. 'மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | 1. | சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) | பயன்தூக்கார் செய்த உதவி | 2. | ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) | சினம் | 3. | தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) | காலத்தினாற் செய்த நன்றி | 4. | நன்மை கடலின் பெரிது |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

3. "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்" – இவ்வரிகள் ______ நூலில் பயின்று வந்துள்ளது.

அ) திருமந்திரம் ஆ) தமிழ்விடுதூது

இ) நற்றிணை ஈ) கொன்றை வேந்தன்

4. "காலை இளம்வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்" – இக்கவிதையில் பயின்று வந்துள்ளது

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

5. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்துபவர்

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

6. 'தகடூர்' என்றழைக்கப்பட்ட தற்போதைய பகுதி

அ) திண்டுக்கல் ஆ) திண்டிவனம் இ) தருமபுரி ஈ) தஞ்சை

7. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் .... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1. மாதவி ஏழு ஆண்டுகள்வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

8. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. யானை புக்க புலம்போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
   அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
   ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
   இ) பிறருக்கும் பயன்படும், தனக்கும் பயன்படாது
   ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்
10. மயிலைப்பதிகத்தில் கடலாட்டு விழா காணப்பெறும் மாதம்
   அ) ஐப்பசி ஆ) மார்கழி இ) கார்த்திகை ஈ) மாசி
11. பின்வரும் நாடுகளுள் புயலுக்குப் பெயர் வைக்கும் பட்டியலில் இடம் பெறாததைத் தேர்க.
   அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) சீனா ஈ) ஓமன்
12. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" – இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
13. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ) சிவஞானமுனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்
14. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?
   அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
   இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

## பகுதி – II

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. வசனம், கவிதை வேறுபாடு தருக.
16. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?
17. நஞ்சுண்டவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?
18. அகநானூற்றில் உள்ள பிரிவுகள் எத்தனை? அவை யாவை?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. பருவத்தே பயிர்செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. முறைவைப்பு என்றால் என்ன?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
23. கலைச்சொல் தருக.
   அ) RAILWAY SIGNAL ஆ) ANIMATION
24. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
   தானே
25. ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக.
   அ) அடையா ஆ) காய்நெல்
26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
   அ) தொழுதனர் ஆ) பொலிந்தான்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) எத்திசை ஆ) உள்ளொன்று
28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) நிலத்தக் கௌறணும்டா அப்பத்தான் வகுறு நிறையும்.
ஆ) "நான் பஸ்ஸில் வரேன்" சொல்லி முடிக்கும் முன் கார் புறப்பட்டது.
29. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
30. பொருள் வேறுபாடு அறிந்து தொடரமைக்க.
கான் – காண் (அல்லது) தின்மை – திண்மை

## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டடு வினாக்களுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?.
32. "நெல்லின் நேரே வெண்கல் உப்பு" – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
37. தமிழர் பரம்பரை குறித்து, கருத்துப்படத்தை வரைக.
38. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

### பிரிவு – 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

(அல்லது)

ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்
40. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.
1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்.
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும்.
3. சிறுகதை ஆசிரியர் : முதல் பாதி நவீனம்
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம்.

(தமிழ் ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

41. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

(அல்லது)

வாகைத்திணையை விளக்குக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்

– நா. காமராசன்

43. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

45. அ) ‘ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு’ நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்த வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) ‘சாலை விபத்தில்லாத தமிழ்நாடு’ – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை.

(அல்லது)

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4 + 2 = 6**

47. அ) “காய்நெல்....” எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) ‘....அரிது’ – என முடியும் ‘செய்ந்நன்றி அறிதல்’ என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொதுத்தேர்வு வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

## மார்ச் – 2024

கால அளவு : 3 மணிநேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** $14 \times 1 = 14$

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்கி!"
– இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ) அடிஎதுகை, சீர்மோனை ஆ) அடிமோனை, அடிஎதுகை
இ) சீர்எதுகை, அடிமோனை ஈ) சீர்மோனை, சீர்எதுகை

2. பொருத்தி விடை தேர்க.
(1) குரங்குகள் – (i) கன்றுகளைத் தவிர்த்தன
(2) விலங்குகள் – (ii) மரங்களிலிருந்து வீழ்ந்தன
(3) பறவைகள் – (iii) குளிரால் நடுங்கின
(4) பசுக்கள் – (iv) மேய்ச்சலை மறந்தன
அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv) ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)
இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv) ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

3. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் :
அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

4. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது?
அ) நாய் ஆ) எருது இ) யாளி ஈ) குதிரை

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) கடுக்காய் ஆ) வசம்பு
இ) மாவிலைக்கரி ஈ) மணத்தக்காளிச்சாறு

6. சென்னை, வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் :
அ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
இ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.
1) காதை – i. கந்தபுராணம்
2) சருக்கம் – ii. சீவகசிந்தாமணி
3) இலம்பகம் – iii. சூளாமணி
4) படலம் – iv. சிலப்பதிகாரம்
அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i) ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)
இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

8. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்...
– தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.
அ) மாதவி ஏழு ஆண்டுகள்வரை நாட்டியம் பயின்றாள்.
ஆ) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.
அ) (1) தவறு; (2) தவறு ஆ) (1) சரி; (2) தவறு
இ) (1) சரி; (2) சரி ஈ) (1) தவறு; (2) சரி

9. எளியது, அரியது என்பன :
அ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு
ஆ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை
இ) மெய்ப்பொருள் காண்பது–உருவுகண்டு எள்ளாதது
ஈ) சொல்வது – சொல்லியபடி செய்வது

10. ‘உண்டு பிறந்து வளர்ந்த இடங்களில் – இத்தொடரில் பெயரெச்சம்_.
அ) வளர்ந்த ஆ) உண்டு இ) இடந்தனில் ஈ) பிறந்து

11. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :
அ) சமணமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும்
இ) கிறித்துவமும் தமிழும் ஈ) இசுலாமும் தமிழும்

12. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி :
அ) அங்கதம் ஆ) குறியீடு இ) தொன்மம் ஈ) படிமம்

13. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.
ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
ஈ) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

14. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் :
அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்
இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. $3 \times 2 = 6$

15. ஞாலத்தின் பெரியது எது?
16. நெடுநல்வாடை – பெயர்க்காரணம் தருக.
17. வசனம், கவிதை – வேறுபாடு தருக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 2 = 4$

19. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.
20. முறை வைப்பு என்றால் என்ன?
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. $7 \times 2 = 14$

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
மாணவர்கள், பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.
24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
ரங்கன், வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.
தின்மை – திண்மை
27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) செய்த (ஆ) கலங்கி
8. கலைச் சொல்லாக்கம் தருக.
(அ) Stapler (ஆ) Teller

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
பின்வரும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்திடுக.
அச்சாணி இல்லாத தேர்போல :

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) உரனுடை (ஆ) தலைக்கோல்
30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.
(அ) கோவில் (ஆ) தாமரை

பகுதி – III

பிரிவு – 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 4 = 8$

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. $2 \times 4 = 8$

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.
36. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்கவும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 × 4 = 12

39. அ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

ஆ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

41. அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

(அல்லது)

ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.

43. தமிழாக்கம் தருக.
1. If you want people to understand you, speak their language.
2. A new language is a new life.
3. The limits of my language are the limits of my world.
4. Knowledge of languages is the doorway to wisdom.

**43. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்திய போது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை. மு. கோ. ('வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி') ஆவார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வினாக்கள் :

1. ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் யார் ?
2. வை. மு. கோதைநாயகியின் படைப்பாற்றலை ஊக்குவித்தவர் யார் ?
3. வை. மு. கோதைநாயகி அவர்கள் எழுதிய முதல் நாடக நூல் எது ?
4. ''கதா மோகினி'' என்று அழைக்கப்பட்ட பெண் எழுத்தாளர் யாரிடம் கல்வி கற்றார் ?

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) ''ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'' – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு'– இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி – V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. **4 + 2 = 6**

அ) ''அறிவும்'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) ''பொருள்'' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# மனப்பாடப்பகுதி

## தண்டியலங்காரம்

(தண்டி)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி (Mar.-20, July-23)
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

(பாவகை : நேரிசை வெண்பா)

## நெடுநல்வாடை

(நக்கீரர்)

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப் (PTA-3)
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர்அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.

(பாவகை : நேரிசை ஆசிரியப்பா)

## கம்பராமாயணம்

(கம்பர்)

'துன்பு உளதுஎனின் அன்றோ (Mar.-20)
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

(பாவகை : கலிவிருத்தம்)

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

(பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## திருக்குறள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் (Sep-21)
தெய்வத்துள் வைக்கப் படும்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது (PTA-2)
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை (PTA-4, 6)
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை (Mar.-24)
வேண்டும் பிறன்கைப் பொருள்.

மறத்தல் வெகுளியை யார்மட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால் (Mar.-23)
தன்னையே கொல்லும் சினம்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் (PTA-5)
உண்மை அறிவே மிகும்.

## இதில் வெற்றி பெற

(சுரதா)

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற (May-22)
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

(பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## புறநானூறு

(ஔவையார்)

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென, (Mar.-24)
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே,
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

(பாவகை : நேரிசை ஆசிரியப்பா)

## தெய்வமணிமாலை

(இராமலிங்க அடிகள்)

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்!
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்!
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்!
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்; மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும். (PTA - 2, Sep.-21, Mar.-23 )

(பாவகை :பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

## சிலப்பதிகாரம்

(இளங்கோவடிகள்)

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித் (PTA-5)
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

(பாவகை : ஆசிரியப்பா)

## திருக்குறள்

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (PTA - 1, May-22)

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை (Sep.-20)
அதிர வருவதோர் நோய்.

நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் (Mar.-20)
சொல்லிய வண்ணம் செயல்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. (July-23)

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

## புறநானூறு

(பிசிராந்தையார்)

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்;

(பாவகை : நேரிசை ஆசிரியப்பா)

## இரட்சணிய யாத்திரிகம்

(எச். ஏ. கிருட்டினனார்)

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

(பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

## சிறுபாணாற்றுப்படை

(நத்தத்தனார்)

...... என ஆங்கு
எழுசமங் கடந்த எழுஉறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்.

(பாவகை : நேரிசை ஆசிரியப்பா)

ஜஜஜஜஜஜஜ

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com